# இயேசு கிறிஸ்துவின் இறுதி வாரத்தில் அவரோடு ஒரு பயணம்

World Christian Fellowship

60, High Worple, Rayners Lane, Harrow

Middlesex, HA2 9SZ, United Kingdom

*www.wcflondon.com*

*wcflondon@gmail.com*

**உள்ளடக்கங்கள்**


*பாடம் 1 – முன்னுரை* ....... *7*

*ஒரு எபிரேய இரவு* ....... *8*

*எபிரேய மாதங்கள்* ....... *8*

*மாற்கு சுவிசேஷத்தின்படி குறிப்பிட்டுள்ள கடைசி வாரம்* ....... *9*

*பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர்* ....... *10*

*பஸ்காவிற்கு நான்கு நாட்களுக்கு முன்னர்* ....... *12*

*பஸ்காவிற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்* ....... *12*

*பஸ்காவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்* ....... *15*

*பஸ்காவிற்கு முந்தய தினம்* ....... *15*

*பஸ்கா திருநாள்* ....... *18*

*வாரத்தின் முதல் நாள்* ....... *21*

*பாடம் 2 – பஸ்கா திருநாளுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னர்* ....... *25*

*வெற்றிபிரவேசம் (The Triumphal Entry)* ....... *25*

*கிரேக்கர்கள் இயேசுவை தேடிவந்தனர்* ....... *27*

*மீண்டும் இயேசுவின் மரணத்தைக் குறித்த கணிப்பு* ....... *29*

*இயேசு எருசலேமைக் குறித்து அழுதார்* ....... *30*

*பெத்தானியாவுக்கு திரும்புதல்* ....... *30*

*பாடம் 3 – பஸ்காவிற்கு நான்கு நாட்களுக்கு முன்னர்* ....... *33*

*அத்தி மரத்தை சபித்தல்* ....... *33*

*இயேசு தேவாலயத்தை சுத்திகரித்தார்* ....... *35*

*விசுவாச்சமில்லாத சந்ததி* ....... *38*

*தேவனின் வார்த்தை* ....... *39*

*இரவு தங்குதல்* ....... *40*

*பாடம் 4 - பஸ்கா திருநாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர்* ....... *41*

*இயேசுவின் அதிகாரம் கேள்விகுட்பட்டது* ....... *42*

*இரண்டு குமாரர்களைக் குறித்த உவமை* ....... *44*

*திராட்சத் தோட்டத்தைக்குரித்த உவமை* ....... *44*

*திருமண விருந்து: ராஜாவின் மகனுடைய திருமணம்* ....... *46*

*இயேசுவின் மீதான மூன்று தாக்குதல்கள்* ....... *46*

*இயேசு தலைவர்களை வினவினார்* ....... *48*

*காணிக்கை பெட்டியின் (treasury) அருகில் இயேசு* ....... *48*

*நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்து* ....... *49*

*ஒலிவ மலை பிரசங்கம் (Olivet Discourse)* ....... *50*

*ஒலிவ மலை தீர்க்கதரிசனத்திலிருந்து மூன்று உவமைகள்* ....... *51*

பாடம் 5 - பஸ்கா திருநாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் ........ 53
கொலை செய்ய நியாயசங்கம் செய்த சதி ........ 53
இயேசுவை அபிஷேகித்த மரியாள் ........ 53
யூதாஸ் இயேசுவுக்கு துரோகம் செய்ய ஒப்புக்கொள்கிறார் ........ 57
அகித்தோப்பேல் ........ 57
அகித்தோப்பேலும் யூதாசும் – ஒரு ஒப்பீடு ........ 59
தாவீதும் இயேசு கிறிஸ்துவும் – ஒரு ஒப்பீடு ........ 60
பாடம் 6 - பஸ்கா திருநாளுக்கு முந்தய நாள் ........ 63
பஸ்கா பண்டிகைக்கான உணவை தயார் செய்தல் ........ 64
இயேசு தன் சீடர்களின் கால்களை கழுவினர் ........ 65
சீஷர்களின் கலகம் ........ 67
காட்டிக்கொடுப்பவன் அடையாளம் காணப்பட்டான் ........ 68
இறுதி இராப்போஜனம் ........ 68
புதிய கட்டளை ........ 69
பேதுருவின் மறுதலித்தல் – முன்னறிவிப்பும் மறுதலித்தலும் ........ 72
மேலறையில் நடந்த சொற்பொழிவு ........ 74
கெத்செமனேயில் கடும்துயர் ........ 74
யூதாசின் துரோகம் ........ 76
கைது ........ 77
இயேசுவை கேள்வி கேட்ட அன்னா ........ 77
இயேசுவை கேள்வி கேட்ட பிரதான ஆசாரியர் ........ 78
தீர்மானம் ........ 79
பாடம் 7 - பஸ்கா திருநாள் ........ 81
முறையான விசாரணை – அதிகாலை 6 மணி ........ 82
பிலாத்துவின் முன்னிலையில் விசாரணை – ஏறத்தாழ காலை 7 மணி ........ 82
ஏரோதின் முன் விசாரணை ........ 83
பிலாத்துவின் முன்னிலையில் இரண்டாம் முறை - ஏறத்தாழ காலை 9 மணி ........ 84
ரோம போர்ச்சேவகர்கள் இயேசுவை பரியாசம் செய்தனர் ........ 86
கபாலஸ்தலத்துக்கு (Calvary) செல்லும் வழி ........ 86
பிற்பகல் 9 மணி அளவில் சிலுவையில் அறையப்படுதல் – 6ஆம் மணி ........ 87
இயேசு சிலுவையில் இருந்தபோது கூறிய ஏழு வாக்கியங்கள் ........ 88
நூற்றுக்கதிபதியின் சாட்சி ........ 89
இயேசுவின் இறப்பைக் குறித்து பிலாத்து ஆச்சர்யப்பட்டான் ........ 90
பாடம் 8 – பஸ்காவிற்கு பிறகு ........ 95

*சாபத் – ஓய்வு நாள் .......... 95*
*பாடம் 9 – யோனா .......... 99*
*பாடம் 10 – இயேசு வெள்ளிக்கிழமையில் மரிக்கவில்லை .......... 105*
*யூதர்களின் நாட்கள் .......... 108*
*எபிரேய மாதங்கள் .......... 111*
*பஸ்கா: முதலாம் மாதத்தின் – நிசான் 14ஆம் நாள் மாலை .......... 112*
*இயேசுவுடனான பயணம் – கடைசி ஆறு நாட்கள் – மீண்டும் ஒரு பார்வை .......... 113*
*புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் முதல் நாள் .......... 118*
*ஸ்த்திரீகள் நறுமனப்பொருள்களை ஆயத்தம் பண்ணினர் .......... 120*
*மூன்று முறை தோன்றினார் .......... 121*
*ஒரு சிறிய ஆலோசனை .......... 123*
*பாடம் 11 – இயேசுவின் மரணமும், உயிர்த்தெழுதலும் அதற்கு இடையில் நடைபெறும் அனைத்து காரியங்களும் .......... 125*
*நரகம் என்றால் என்ன? .......... 125*
*சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் .......... 128*
*பரலோகம் / வானம் .......... 129*
*முதலாம் வானம் .......... 130*
*இரண்டாம் வானம் .......... 131*
*மூன்றாம் வானம் .......... 132*
*வெளிப்படையான கேள்விகள் .......... 133*

# பாடம் *1* – முன்னுரை

இந்த தொடர் பாடத்தில் நாம் விரிவாக கற்றுக்கொள்ளவிருக்கும் காரியங்களுக்கு பின்புலமாக சில காரியங்களை கற்றுக்கொள்வோம்.

யூதர்களின் நாட்கள்

| நாள் | யூதருக்குரிய நாள் | நவீன நாள் |
|---|---|---|
| முதலாம் நாள் | யோம் ரிஷோன் (Yom Rishon) | ஞாயிற்றுக்கிழமை |
| இரண்டாம் நாள் | யோம் ஷணி (Yom Sheni) | திங்கட்கிழமை |
| மூன்றாம் நாள் | யோம் ஷ்லிஷி (Yom Shlishi) | செவ்வாய்க்கிழமை |
| நான்காம் நாள் | யோம் ரேவி (Yom Revi'i) | புதன்கிழமை |
| ஐந்தாம் நாள் | யோம் சமிஷி (Yom Chamishi) | வியாழக்கிழமை |
| ஆறாம் நாள் | யோம் ஷிஷி (Yom Shishi) | வெள்ளிக்கிழமை |
| ஏழாம் நாள் | யோம் ஷபாத் (Yom Shabbat) | சனிக்கிழமை |

வாரத்தின் முதலாம் நாள் ஓய்வு நாளான ஏழாம் நாள் (யோம் ஷபாத் / சனிக்கிழமை) மாலை ஆறு மணி முதல் - முதலாம் நாளின் மாலை ஆறு மணிக்கு முடிவுபெறுகிறது.

ஆதியாகமம் 1:5,

தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று

மேலும் குறிப்புகள் - ஆதியாகமம் முதலாம் அதிகாரம் 8, 13,19,23 மற்றும் 31 வசனங்களில் காணலாம். யூதர்கள் தங்கள் 'தினத்தை' கணக்கிடுவதற்கு இன்னும் இந்த முறையையே பின்பற்றி வருகின்றனர்.

### ஒரு எபிரேய இரவு

| நம் நேரம் | 6:00 PM | 7:00 PM | 8:00 PM | 9:00 PM | 10:00 PM | 11:00 PM | 12:00 AM | 1:00 AM | 2:00 AM | 3:00 AM | 4:00 AM | 5:00 AM | 6:00 AM |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணி | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| யூதரின் மணி | முதலாம் ஜாமம் | | | | இரண்டாம் ஜாமம் | | | மூன்றாம் ஜாமம் | | | நான்காம் ஜாமம் | | |

யூதர்களின் பகல் பொழுது அதிகாலை ஆறு மணிக்கு துவங்கி மாலை ஆறு மணியளவில் முடிவடைகிறது.

| **நம் நேரம்** | 6:00 AM | 7:00 AM | 8:00 AM | 9:00 AM | 10:00 AM | 11:00 AM | 12:00 PM | 1:00 PM | 2:00 PM | 3:00 PM | 4:00 PM | 5:00 PM | 6:00 PM |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மணி** | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| **யூதர்களின் மணி** | | 1-ஆம் மணி | 2-ஆம் மணி | 3-ஆம் மணி | 4-ஆம் மணி | 5-ஆம் மணி | 6-ஆம் மணி | 7-ஆம் மணி | 8-ஆம் மணி | 9-ஆம் மணி | 10-ஆம் மணி | 11-ஆம் மணி | 12-ஆம் மணி |

### எபிரேய மாதங்கள்

| யூத மாதம் | தோராயமான உலக வழக்க மாதங்கள் | சிறப்பு பண்டிகை |
|---|---|---|
| நிசான் (Nissan) | மார்ச் – ஏப்ரில் (March–April) | பஸ்கா (Passover) |
| ஐயற் (Iyar) | ஏப்ரில் – மே (April–May) | லேக் பி'ஒமர் (Lag B'Omer) |
| சிவன் (Sivan) | மே – ஜூன் (May–June) | ஷவோட் (Shavuot - Pentecost) |
| தம்முச் (Tammuz) | ஜூன் – ஜூலை (June–July) | |
| மேனசெம் அவ் (Menachem Av) | ஜூலை – ஆகஸ்ட் (July–August) | திஷா பி'அவ் (Tisha B'Av) |

| | | |
|---|---|---|
| எலுல் (Elul) | ஆகஸ்ட் – செப்டம்பர் (August–September) | |
| திஸ்ரெய் (Tishrei) | செப்டம்பர் – அக்டோபர் (September–October) | ரோஷ் ஹஷனாஹ் (Rosh Hashanah) மற்றும் யோம் கிபுர் (Yom Kipur), சுக்கோத் (Sukkot) |
| மார்செஸ்வன் (Marchesvan) | அக்டோபர் – நவம்பர் (October–November) | |
| கிஸலேவ் (Kislev) | நவம்பர் – டிசம்பர் (November–December) | சநூரக்காஹ் (Chanukah) |
| டிவேட் (Tevet) | டிசம்பர் – ஜனவரி (December–January) | சநூரக்காவின் முடிவு (Conclusion of Chanukah) |
| ஷீவட் (Shevat) | ஜனவரி – பிப்ரவரி (January–February) | து பி'ஷ்வட் (Tu B'Shvat) |
| அடார் (Adar) | பிப்ரவரி – மார்ச் (February–March) | பூரீம் (Purim) |

*பஸ்கா பண்டிகையானது வருடத்தின் முதல் மாதத்தில் அதாவது நிசான் மாதத்தின் (லேவியராகமம் 23:4–7) பதினான்காம் நாளில் கொண்டாடப்படுகிறது. ஆக இந்த பதினான்காம் நாள், பதின்மூன்றாம் நாளின் மாலை ஆறு மணிக்கு துவங்குகிறது.*

> *"சபைகூடிவந்து பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி, நீங்கள் குறித்தகாலத்தில் கூறவேண்டிய கர்த்தரின் பண்டிகைகளாவன: 5முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்காபண்டிகையும், 6 அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப் பண்டிகையுமாய் இருக்கும்; ஏழுநாள் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்கவேண்டும் 7முதலாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான சபைகூடுதல்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம்".*

### மாற்கு சுவிசேஷத்தின்படி குறிப்பிட்டுள்ள கடைசி வாரம்

*மாற்கு நற்செய்தி கடைசி ஐந்து நாட்களைக் குறித்து மிகவும் துல்லியமாக கணக்கு கொடுக்கிறது. மாற்கு 11:1, பஸ்கா பண்டிகைக்கு சரியாக ஐந்து நாட்களுக்கு முன்பாக குறிப்பிடப்பட்டிருக்கிறது; யோவான் 12:1-ல் குறிப்பிட்டபடி, இயேசு பெத்தானியாவுக்கு வந்த நாளுக்கு அடுத்த நாள் அதாவது பஸ்கா பண்டிகைக்கு ஆறு நாட்களுக்கு முன்னர்!*

| பஸ்கா பண்டிகைக்கு முந்தய நாள் | வசனம் |
|---|---|
| 5 | மாற்கு 11:1 |
| 4 | மாற்கு 11:12 |
| 3 | மாற்கு 11:20 |
| 2 | மாற்கு 14:1 |
| 1 | மாற்கு 14:12 |

ஆகவே, மாற்கு நற்செய்தி நூலில் கொடுக்கப்பட்டுள்ள இந்த வரிசையின்படி நமது இந்த தொடர்பாடத்தை நாம் அமைத்துக்கொள்வோம். மேலும் மற்ற சுவிசேஷ புத்தகங்களில் எழுதப்பட்டிருக்கும் தகவல்களையும் சேர்த்துக்கொள்வதன் மூலம் இயேசுவின் பயணத்தை குறித்து நாம் முழுமையாகவும் தெளிவாகவும் புரிந்துகொள்ள முடியும்.

**பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர்**

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| வெற்றி பவனி) Triumphal entry ( | 21:1-11 | 11:1-10 | 19:29-44 | 12:12-19 | காலை |
| கிரேக்கர்களின் வருகை / பரலோகத்திலிருந்து வந்த சத்தம் | | | | 12:20-36 | மதியம் |
| இயேசு எருசலேமைக் குறித்து அழுதார் | | | 19:41-44 | | மாலை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெத்தானியாவுக்கு திரும்புதல் | | 11:11 | | | இரவு தங்குதல் |

**பஸ்காவிற்கு நான்கு நாட்களுக்கு முன்னர்**

| நிகழ்வு | மத்தேயு )Matthew( | மாற்கு )Mark( | லுக்கா )Luke( | யோவான் )John( | நேரம் |
|---|---|---|---|---|---|
| அத்தி மரத்தை சபித்தல் | 21:18-19 | 11:12-14 | | | காலை |
| தேவாலயத்தின் இரண்டாம் சுத்திகரிப்பு | 21:12-16 | 11:15-18 | 19:45-48 | | மதியம் |
| நம்பிக்கையற்ற ஜானக்கூட்டத்திற்கான மறுமொழி | | | | 12:27-50 | |
| பெத்தானியாவுக்கு திரும்புதல் | 21:17 | 11:19 | | | |

**பஸ்காவிற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்**

| நிகழ்வு | மத்தேயு )Matthew( | மாற்கு )Mark( | லுக்கா )Luke( | யோவான் )John( | நேரம் |
|---|---|---|---|---|---|
| வாடிய அத்தி மரம் மற்றும் நம்பிக்கை | 21:19-22 | 11:20-26 | 21:38 | | காலை |
| இஏசுவிடம் இருந்த அதிகாரத்திற்கு மீதான கேள்விகள் | 21:23-27 | 11:27-33 | 20:1-8 | | |
| இரண்டு மகன்களைக் குறித்த உவமை (Parable) | 21:28-32 | | | | |
| திராட்சைத் தோட்டத்தைக் குறித்த நீதிக்கதை (Parable) | 21:33-46 | 12:1-12 | 20:19-26 | | நண்பகல் |

| நிகழ்வு | மத்தேயு )Matthew( | மாற்கு )Mark( | லுக்கா )Luke( | யோவான் )John( | நேரம் |
|---|---|---|---|---|---|
| திருமணவிருந்தைக் குறித்த உவமை (Parable) | 22:1-14 | | | | |
| சீசர் மீதான கேள்வி | 22:15-22 | 12:13-17 | 20:19-26 | | |
| பெரிய கட்டளை | 22:34-40 | 12:28-34 | | | |
| பரிசேயரையும் வேதபாரகரையும் குறித்த கண்டனம் | 23:1-36 | 12:38-40 | 20:45-47 | | மதியம் |
| இயேசு எருசலேமைக் குறித்து புலம்பினார் | 23:37-39 | | | | |
| விதவையின் காசு | | 12:41-44 | 21:1-4 | | |
| ஒலிவேட் சொற்பொழிவு (Oliver discourse) | 24:1-51 | 13:1-37 | 21:5-36 | | மாலை |
| கன்னிகைகளைக் குறித்த உவமை (Parable) | 25:1-13 | | | | |
| திறமைகளைக் குறித்த உவமை (Parable) | 25:14-30 | | | | |
| தவிர்க்க முடியாத இறுதி தீர்ப்பு | 25:31-46 | | | | |

மதியவேளையில் இருந்தே இயேசுவின் பொது ஊழியம் முடிந்து; அவருடைய கவனம் மதத்தலைவர்கள் மீது முழுமையாக திரும்பிற்று.

**பஸ்காவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்**

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லூக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| கொலை செய்ய நியாயச்சங்கம் செய்த சதி | 26:1-5 | 14:1-2 | 22:1-2 | | காலை |
| இயேசுவை அபிஷேகித்த மரியாள் | 26:6-13 | 14:3-9 | 20:1-8 | 12:2-8 | |
| யூதாஸ் இயேசுவுக்கு துரோகம் செய்ய ஒப்புக்கொள்கிறார் | 26:14-16 | 14:10-11 | 22:3-6 | | மாலை |

**பஸ்காவிற்கு முந்தய தினம்**

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லூக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| பஸ்கா பண்டிகைக்கான உணவை தயார் செய்தல் | 26:17-20 | 14:12-17 | 22:7-14 | | காலை |
| சீடர்களின் விவாதம் | | | 22:24-30 | | |
| இயேசு தன் சீடர்களின் கால்களை கழுவினர் | | | | 13:1-20 | மாலை |
| காட்டிக் கொடுத்தவனை கண்டறிதல் (upper room) | 26:21-25 | 14:18-21 | 22:21-23 | 13:21-30 | |
| இறுதி இராப் போஜனம் | 26:26-29 | 14:22-25 | 22:15-20 | | |

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| இயேசு விட்டுச்செல்கிறார் | | | | 13:31 | |
| புதிய கட்டளை | | | | 13:31-35 | |
| பேதுருவின் மறுதலிப்பை கணித்தல் | 26:31-35 | 14:27-31 | 22:31-38 | 13:36-38 | |
| மேலறையில் நடந்த சொற்பொழிவு | | | | 14-16 | |
| இயேசுவின் பிரதான ஆசாரிய ஜெபம் | | | | 17 | |
| ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினர் (upper room) | 26:30 | 14:26 | | | |
| கெத்செமனேயில் கடும்துயர் | 26:36-46 | 14:32-42 | 22:40-46 | 18:1-2 | |
| யூதாஸின் துரோகம் | 26:47-50 | 14:43-45 | 22:47-48 | 18:2-9 | |
| கைது (Gethsamane) | 26:51-56 | 14:46-52 | 22:49-53 | 18:10-12 | |
| இயேசுவை கேள்வி கேட்ட அனானாஸ் (Sanhedrin) | | | 22:54,63-65 | 18:7,13.19-24 | |
| காய்பாவின் ஆய்வு (High Priest house) | 26:57-68 | 14:53-65 | | 18:14-18 | |

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லூக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| பேதுரு இயேசுவை மறுதலித்தல் (courtyard) | 26:69-75 | 14:66-72 | 22:55-62 | 18:25-27 | |

**பஸ்கா திருநாள்**

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| முறையான விசாரணை | 27:1-2 | 15:1 | 22:66-71 | | |
| யூதாஸின் மரணம் | 27:3-10 | | | | நேரத்தையும் பொழுதையும் குறித்த நிச்சயம் இல்லை |
| பிலாத்துவின் முன்னிலையில் விசாரணை | 27:3-10 | | | | அதிகாலை |
| ஏரோதுவுக்கு முன் | | | 23:6-12 | | காலை |
| பிலாத்துவின் முன்னிலையிலான இரண்டாம் கட்ட விசாரணை | 27:15-23 | 15:6-14 | 23:13-23 | 18:39-40 | காலை |
| பரபாசின் விடுதலை | 27:26-30 | 15:15-19 | 23:25 | 19:1-3 | |
| இயேசுவைக் குறித்த பிலாத்துவின் தீர்ப்பு | 27:24-25 | 15:20-23, 27-28 | 23:24 | 19:4-16 | காலை |
| கபாலஸ்தலத்துக்கு (Calvary) செல்லும் வழி | 27:31-34 | | 23:26-33 | 19:16-18 | நண்பகல் (noon) |
| சிலுவையில் இருந்தபோதுள்ள முதல் வாக்கியம் | | | 23:34 | | |


| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லூக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| போர்ச்சேவகர்கள் அவருடைய ஆடையை பங்கிட்டனர் | 27:35-36 | 15:24 | 23:34 | 19:23-24 | |
| சிலுவையில் இருந்தபோதுள்ள இரண்டாம் வாக்கியம் | | | 23:39-43 | | |
| மூன்றாம் வாக்கியம் | | | | 19:25-27 | |
| பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று. | 27:45 | 15:33 | 26:44-45 | | |
| நான்காம் வாக்கியம் | 27:46-47 | 15:34-35 | | | |
| ஐந்தாம் வாக்கியம் | 27:48-49 | 15:36 | | 19:28-29 | |
| ஆறாம் வாக்கியம் | | | | 19:30 | |
| ஏழாம் வாக்கியம் மற்றும் மரணம் | 27:50 | 15:37 | 23:46 | 19:30 | மதியம் 3:00 மணி |
| நூற்றுக்கு அதிபதியின் சாட்சி | 27:51-56 | 15:38-41 | 23:45, 47-49 | | |
| அவருடைய விலாவில் குத்தப்பட்டது | 27:57-61 | 15:42-47 | 23:50-56 | 19:31-37 | |
| அடக்கம் | | | | 19:38-42 | மாலை ஆறு மணிக்கு முன்னர் |

**வாரத்தின் முதல் நாள்**

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| கல்லறை திறந்திருந்தது | 28:2-4 | | | | |
| மகதலேனா மரியாளும் மற்ற பெண்மணியும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள் | 28:1, 5-7 | 16:1-8 | 24:1-8 | 20:1 | |
| மரியாள் பேதுருவிடமும் யோவனிடமும் கூறுக்கிறாள் | | | 24:9-11 | 20:2 | |
| பேதுரு, மரியாள் மற்றும் யோவன் கல்லறையைப் பார்க்க வந்தார்கள் | | | 24:12 | 20:3-10 | |
| மீட்பர் மரியாளுக்கு தோன்றினார் | | 16:9 | | 20:11-17 | |
| மரியாள் அபோஸ்தலர்களிடம் கூறுக்கிறாள் | | 16:10-11 | | 20:18 | |
| மீட்பர் பெண்களுக்கு தோன்றினார் | 28:9-10 | | | | |
| காவல் சேவகர்கள் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள் | 28:11-15 | | | | |
| எம்மாவு சாலையில் இரண்டு சீடர்கள் | | 16:12-13 | 24:13-32 | | |
| இயேசு பேதுருவிற்கு தோன்றினார் | | | 24:34 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இயேசு தோமாவைத் தவிர எல்லா அபோஸ்தலர்களுக்கும் தோன்றினார் | | 16:14 | 24:33-49 | 20:19-23 | |

*இயேசு தன்னுடைய பூமியில் உள்ள வாழ்நாளின் இறுதி வாரத்தில் பிரயாணித்த இடங்களின் நிலப்படம்*




| | |
|---|---|
| எருசலேமில் இருந்து பெத்தானி | 2 மைல் |
| எருசலேமில் இருந்து எம்மாவூர் | 7 மைல் |
| எருசலேமில் இருந்து பெத்லெகேம் | 6 மைல் |
| எருசலேமில் இருந்து எரிகோ | 15 மைல் *(தோராயமாக )* |

| | |
|---|---|
| எருசலேமில் இருந்து எப்பிராயீம் | 8–15 மைல் எப்பிராயீமில் நீ எந்த பகுதியை சார்ந்தது என்பதைபொருத்ததே (எப்பிராயீம் ஒரு நகரம் அல்ல; அது ஒரு பிரதேசம்) |

## *பாடம் 2* – பஸ்கா திருநாளுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னர்

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| வெற்றிபிரவேசம் (Triumphal entry) | 21:1-11 | 11:1-10 | 19:29-44 | 12:12-19 | காலை |
| கிரேக்கர்களின் வருகை/ பரலோகத்திலிருந்து வந்த சத்தம் | | | | 12:20-36 | நண்பகல் |
| இயேசு எருசலேமைக் குறித்து அழுதார் | | | 19:41-44 | | மாலை |
| பெத்தானியாவுக்கு திரும்புதல் | | 11:11 | | | இரவு தங்குதல் |

பஸ்கா பண்டிகைக்கு ஆறு நாட்களுக்கு முன்னர், இயேசு பெத்தானியாவில் இருந்தார் (யோவான் 12:1) – ஆரம்பத்தில் அவர் எருசலேமில் இருந்து எரிகோவுக்கு சென்று பிறகு பெத்தானியா வழியாக எருசலேமுக்கு திரும்பி வந்தார். அவர் அந்த பட்டணத்திற்குள் செல்லும்போது, அவர் சகேயுவை அழைத்து மேலும் அவனுடன் போஜனம் செய்தார் (லூக்கா 19:1–10), மேலும் அவர் எரிகோவைவிட்டுப் புறப்படுகிறபோது, பர்திமேயு என்கிற ஒரு குருடனை அவர் சுகமாக்கினார் (மாற்கு 10:46–52) மேலும் பெத்தானியாவுக்கு வந்து லாசரு, மரியாள் மற்றும் மார்த்தாளின் வீட்டில் தங்கினார்.

### வெற்றிபிரவேசம் (The Triumphal Entry)

(Please take time to read this account in the four Gospels!)

அவர் ஓர் இரவு பெத்தானியாவில் தங்கிய பின்னர், அடுத்த நாள் காலையில், இயேசுவும் அவருடைய சீடர்களும் எருசலேமுக்கு சென்றனர். அவர்கள் எருசலேமை நோக்கி சென்ற பொழுது, அவர்கள் பெத்பகேவுக்கு வந்தனர் இயேசுவும் அவருடைய .சீடர்களிடம் தனக்கு ஒரு கழுதையை கொண்டு வரச்சொன்னார். பெத்பகே என்னும் ஊர் பெத்தானியாவுக்கும் எருசலேமுக்கும் நடுவில் மேலும் ஒலிவமலைக்கு அருகாமயில் இருப்பதாக நம்பப்படுகிறது இது எரிகோவையும் எருசலேமையும் .

இணைக்கும் முக்கிய சாலையில், எருசலேமுக்கு போகும் வழியில் அமைந்துள்ளது. கழுதையையும் குதிரைக்குட்டியையும் இயேசு கேட்டதாக மத்தேயு சுவிசேஷதில் குறிப்பிட்டுள்ளது, அதன் மூலம் சகரியா 9:9ல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறியது .

> ***சகரியா 9:9,*** *சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்.*

தீர்க்கதரிசன வார்த்தையின் சிறிய காரியங்களைக்கூட துல்லியமாக இயேசு நிறைவேற்றினார் என்று பார்க்கும்போது ஆச்சரியமாக உள்ளது. இயேசு ஒரு கழுதையின் மீது மட்டுமல்ல அடக்கப் பெறாத கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் (foal of an ass) வருவார் என்று சகரியா தீர்க்கதரிசனம் கூறினார். ஜனங்கள் ஆர்ப்பரித்து களிகூருவார்கள் என்றும் சகரியா குறிப்பிட்டுள்ளார்; அதுவும் அந்த நாளில் நிறைவேறியது. அந்நாளில் வஸ்திரங்களை வழியிலே விரித்தும், மரக்கிளைகளை அசைத்தும் ஆர்ப்பரிப்பது அதிகாரப்பூர்வமாக இராஜாக்களையும் ஜெயங்கொண்டவர்களையும் வரவேற்கும் முறையாகும். அப்படிப்பட்ட வரவேற்பு இயேசுவுக்கு அளிக்கப்பட்டது. லூக்கா 19:37ல் மக்கள் யாவரும் திரளானகூட்டமாய் ‘தாங்கள் கண்ட சகல அற்புதங்களையுங்குறித்து’ தேவனை சத்தமிட்டு ஸ்தோத்திரித்து மகிழ்ந்தனர் என்று கூறுகிறது. அதுமட்டுமல்ல, லாசரு உயிர்த்தெழுந்ததின் நிமித்தமும் பலர் அவரை சந்திக்கச் சென்றார்கள் என்று யோவான் சுவிசேஷத்தின் மூலம் விளக்குகிறது.

ஜனங்கள் ஆர்ப்பரித்து இயேசுவை பாடியது:

> *“தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!” – மத்தேயு 21:9*
>
> *“ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்” – லூக்கா 19:38*
>
> *“இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்” – யோவான் 12:13*
>
> *“கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்” – மத்தேயு 21:9 மற்றும் மாற்கு 11:9*
>
> *“கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக” – மாற்கு 11:10*
>
> *“உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்” – மத்தேயு 21:9 and மாற்கு 11:10*
>
> *“பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக” – லூக்கா 19:38*

இயேசு முதல்முறையாக தன்னுடைய சீடர்களையோ யூதர்களையோ ஆண்டவரே என்றும் இராஜாவே என்றும் தன்னை அழைக்க அனுமதித்தார். ஆனால் பரிசேயர்கள் அதை கேட்டபோது,

இயேசுவிடம் ஜனங்களை கண்டிக்குமாறு கூறினார்கள் ஆனால் அவர் அதை நிராகரித்தார். இது தெளிவாக அவரை கடவுள் என்று காண்பிக்கிறது, தம்முடைய தெய்வத்தன்மையின் நிமித்தம் ஜனங்களின் ஆராதனையை அவர் ஏற்றுக்கொண்டார். இயேசுவை வழிப்பட்டதற்கான பதினொரு குறிப்புகள் உள்ளன (மத்தேயு 2:2, 8:2, 9:18, 14:33, 15:25, 20:20, 28:9, 17; மாற்கு 5:6; லூக்கா 24:52; and யோவான் 9:38). இயேசு மனிதர்கள் தன்னை வழிப்பட்டதை ஏற்றுக்கொண்ட உண்மை மேலும் அவர் மாமிசமாய் வெளிப்பட்ட தேவன் என்ற உண்மையை ஊர்ஜிதப்படுத்தினார் (1 தீமோத்தேயு 3:16). இயேசு தன்னுடைய சீடர்களை கண்டிக்க மறுத்து, அவர் மறுமொழியாக அவர்கள் அவரை போற்றவில்லை எனில், கற்கள் மற்றும் படைப்பு அவரை வழிப்படும் என்று பதிலளித்தார்.

### கிரேக்கர்கள் இயேசுவை தேடிவந்தனர்

வேதாகமம் கூறுவது போல் யூதர்கள் அல்லாதவர்களும் – கிரேக்கர்களும், புறஜாதியினரும் இயேசுவை சந்திக்க விரும்பினார்கள், அவர்களை பிலிப்புவும் அந்திரேயாவும் இயேசுவிடம் அழைத்து வந்தனர். இயேசு யூதர்களுக்கும் புறஜாதியினர்களுக்கும் இரட்சிப்பை அளிக்க வந்த உண்மை வசனத்தில் நன்றாக நிறுவப்பட்டுள்ளது.

லூக்கா 2:32, "**உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்.**" (மேலும் ஏசாயா புத்தகத்தில் 9:2, 42:6, 49:6, 60:1–3; மற்றும் அபோஸ்த்தலர் 13:47). எனினும், இயேசு சொன்னார், "**நான் காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேன்**" (மத்தேயு 10:5, 23, 15:24; யோவான் 1:11; மற்றும் ரோமர் 15:8). இது இயேசுவின் மண்ணுலக ஊழியம் முக்கியமாக யூதர்களை மையமாக கொண்டது என்று வெளிப்படுகிறது. அவர் மரித்து உயிர்த்தெழுந்த பின்னர் இந்த விசுவாசம் புறஜாதியினர்களுக்கும் திறக்கப்பட வேண்டியதிருந்தது.

இயேசு சில சந்தர்ப்பங்களில் புறஜாதியினர்களுக்கும் ஊழியம் செய்தார் – நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் (மத்தேயு 8:5–13 and லூக்கா 7:1–10) மற்றும் சீரோபேனிக்கியா தேசத்தாளாகிய ஸ்திரீயும் அவளுடைய மகளும் (மத்தேயு 15:21–28 மற்றும் மாற்கு 7:24–30). ஆனால் எருசலேமில் பண்டிகை நேரங்களில் புறஜாதியினர் அவரை தேடி வருவது இதுவே முதன்முறையாகும் – **எந்த ஒரு அடையாளங்களையும் அற்புதங்களையும் காண அவார்கள் வரவில்லை**. இயேசு தம்முடைய மண்ணுலக வாழ்வு முடிவுக்கு வரப்போகிறது என்பதை தெளிவாக அறிந்திருந்தார். மேலும் அதுமுதல் அவருடைய ஊழியம் யூதர்களுக்கு மாத்திரமல்ல என்பதையும் இது காட்டுகிறது. எனவே அவர் பின்வரும் வார்த்தைகளை யோவான் 12:24–27ல் உரைக்கிறார்:

> மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என்

> ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார். இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன் .பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்'', என்று கூறினார்.

இவ்விதமாய் யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் மத்தியில் உள்ள தடுப்புச்சுவர், இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலும் மகிமையடைதலினாலும் தகர்க்கப்படும் (எபேசியர் 2:11–12).

இயேசு, முழுமையாக கடவுளாகவும் முழுமையாக மனிதனாகவும் இருந்தார். ஆகவே பிதாவின் விருப்பத்திற்கு மாறான உணர்ச்சிகள் அவருக்கும் இருந்ததை எபிரெயர் 4:15இல் காணலாம் – "**எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்**.". எனவே தேவனுக்கு விருப்பமில்லாத மாறுபாடான உணர்ச்சிகள் அல்லது விருப்பங்கள் இருப்பது பாவம் அல்ல, ஆனால் அதற்கு ஒப்புக்கொடுத்து நாம் வீழ்வதே பாவமாகிறது. இயேசு தம்முடைய விருப்பங்கள் சந்திக்கப்படவேண்டும் என்பதைக் குறித்து விண்ணப்பம் செய்ய மறுத்தார்; மாறாக அவர் தன்னை பிதாவின் விருப்பத்திற்கு ஒப்புபுக்கொடுத்து, "பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார்" (யோவான் 12:28).

பிறகு பரத்தில் இருந்து ஒரு சத்தம் அவர்களுக்கு கேட்டது (vv8–30):

> பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது : மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. அங்கே நின்று கொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள் :இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்கள் .வேறுசிலர் :தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி :இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று.

பிதா தன்னுடைய குமாரன் பூமியில் இருந்தபோது பிறர் கேட்க பேசியதில் இதுவே மூன்றாவது முறையாகும்:

- இயேசு யோர்தான் நதியில் பெற்ற ஞானஸ்நானம் – மத்தேயு 3:17, மாற்கு 1:11, மற்றும் லூக்கா 3:22
- இயேசு மறுரூபமாதல் – மத்தேயு 17:5, மாற்கு 9:7, மற்றும் லூக்கா 9:35
- யோவான் 12:28

அந்த சம்பவத்தை குறித்த மூன்றுவித பதிவை நாம் காணலாம்:

- சிலர் அது இடிமுழாக்கம் போல் இருப்பதாக கூறினார்கள்
- சிலர் தேவதூதன் பேசியதாக சொன்னார்கள்

- இயேசு அதை வானத்திலிருந்து வந்த சத்தம் என்று கூறினார்

இங்கு அனைவரும் இவரே தேவனின் குமாரன் என்பதை அறிய வேண்டும் என்பதே இதன் நோக்கம். இன்றும் கூட, அடையாளங்களையும் அதிசயங்களையும் தேடும் இந்த வகையான மனிதர்கள் உள்ளனர். சிலர் மற்றவர்களிடம் இருந்து கேட்டு அறிந்து கொள்பவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தேவனோ நாம் அவரிடமிருந்து நேரடியாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதையே ஆவலுடன் எதிர்பார்க்கிறார்.

### மீண்டும் இயேசுவின் மரணத்தைக் குறித்த கணிப்பு

இயேசு தன்னுடைய மரணத்தை மீண்டும் கணிப்பதை இந்த பகுதியில் காணலாம்: "**மனுஷகுமாரன் உயர்த்தப்படுதல்**," சிலுவையில் உயர்த்துவதைப் பற்றி கூறுகிறது – சிலுவை மரணம். யூதர்கள் இதை புரிந்து கொண்டிருந்தினர் (v34). இயேசுவும் தான் எப்படி சிலுவை மரணம் அடையப்போகிரோம் என்பதை அறிந்திருந்தார் என்பதையும் இது தெளிவாக காட்டுகிறது.

இந்த சிலுவை மரண தண்டனை ரோமர்களின் தண்டனை முறை. ஆகவேதான் இயேசு கிறிஸ்துவின் தீர்க்கதரிசனமான மரணத்தில் ரோமர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று யோவான் 18:32இல் கூறுகிறார்.

இயேசு தான் மரித்து மீண்டும் உயிர்த்தெழப்போவதைக் குறித்து 14 முறை கூறியுள்ளார், அவற்றில் 7 முறை பொது இடங்களிலும் மற்றும் 7 முறை தனிப்பட தன் சீடர்களிடம் மட்டும் கூறியுள்ளார்.

| No. | வேதவாக்கியங்கள் (Scripture) | கூற்று (Statement) |
|---|---|---|
| 1 | யோவான் 2:19 | தனிப்பட்ட |
| 2 | மத்தேயு 12:39–40 | தனிப்பட்ட |
| 3 | யோவான் 6:51 | தனிப்பட்ட |
| 4 | மத்தேயு 16:21; மாற்கு 8:31; மற்றும் லூக்கா 9:22 | பொது |
| 5 | மத்தேயு 17:9–12 | பொது |
| 6 | மத்தேயு 17:22–23; மாற்கு 9:31; மற்றும் லூக்கா 9:44 | பொது |
| 7 | யோவான் 10:17–18 | தனிப்பட்ட |

| No. | வேதவாக்கியங்கள் (Scripture) | கூற்று (Statement) |
|---|---|---|
| 8 | லூக்கா 11:29–30 | தனிப்பட்ட |
| 9 | மத்தேயு 20:17–19; மாற்கு 10:32–34; மற்றும் லூக்கா 18:31–33 | பொது |
| 10 | மத்தேயு 20:28 | பொது |
| 11 | யோவான் 12:7–8 | தனிப்பட்ட |
| 12 | யோவான் 12:23–33 | தனிப்பட்ட |
| 13 | மத்தேயு 26:26–29; மாற்கு 14:22–25; மற்றும் லூக்கா 22:19–20 | பொது |
| 14 | மாற்கு 14:27–28 | பொது |

## இயேசு எருசலேமைக் குறித்து அழுதார்

தீத்து ராயனின் ஆட்சி காலத்தில் கி.பி. 70ஆம் ஆண்டில் எருசலேமிற்கு நேரிடும் ஆபத்தை அறிந்து இயேசு எருசலேமுக்காக அழுதார். அந்நாட்களில் எருசலேம் முழுவதும் அழிக்கப்படும் என்று அவர் அறிந்து அழுதார். இதன் மூலம், இயேசு தன்னை நிராகரித்தவர்களிடம் கூட இரக்கத்தை செலுத்துகிறவர் என்று காண்பிக்கிறது.

ஏரோதின் தேவாலயம் ஒரு சிறப்பு வாய்ந்த கட்டடம். அது முழுவதும் தங்கத்தால் மூடப்பட்டிருந்தது. ரோமர்கள் அந்த ஆலயத்தை தீக்கிறையாக்கிய போது, அந்த தங்கம் கரைந்து கட்டடத்தில் உள்ள கற்களின் பிளவுகளினுள் ஓடியது. அந்த கற்கள் சுமார் தொண்ணூற்றுநான்கு அடி நீளமும், பத்தரை அடி உயரமும் மேலும் பதின்மூன்று அடி அகலமும் கொண்டது. அவ்விதமாய் கற்களினுள் கரைந்து சென்ற தங்கத்தை முழுவதுமாக எடுப்பதற்காக, அனைத்து கற்களையும் துண்டுகளாக உடைத்தனர், மத்தேயு 24:2, மாற்கு 13:2, லூக்கா 19:44 மற்றும் 21:6 மேலும் மீகா தீர்க்கதரிசனம் 3:12 இல் குறிப்பிடப்பட்ட தேவ வார்த்தை நிறைவேறிற்று.

## பெத்தானியாவுக்கு திரும்புதல்

இந்த சம்பவங்களுக்கு பின்னர், இயேசு பெத்தானியாவுக்கு சென்று தன் சீடர்களுடன் முழுஇரவும் தங்கினார்.

இயேசுவை ஆண்டவராகவும் நம்முடைய இரட்சகராகவும் ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடி, மாற்கு 11:9–10இல் குறிப்பிட்டபடி எருசலேமின் மக்கள் எவ்வாறு இயேசு வெற்றிபவனி சென்ற போது வழிபட்டனரோ அவ்வாறு நாமும் வழிபடுவோம்.

***ஓசன்னா!***

***கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்,***

***கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக;***

**உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்!!**

# *பாடம் 3 – பஸ்காவிற்கு நான்கு நாட்களுக்கு முன்னர்*

| *நிகழ்வு* | மத்தேயு (Matthew) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| *அத்தி மரத்தை சபித்தல்* | 21:18-19 | 11:12-14 | | | *காலை* |
| தேவாலயத்தின் இரண்டாம் சுத்திகரிப்பு | 21:12-16 | 11:15-18 | 19:45-48 | | மதியம் |
| நம்பிக்கையற்ற ஜானக்கூட்டத்திற்கான மறுமொழி | | | | 12:27-50 | |
| பெத்தானியாவுக்கு திரும்புதல் | 21:17 | 11:19 | | | இரவு |

*நாம் இன்று மறுபடியும் பெத்தானியாவில் இருந்து 2 மயில்கள் தொலைவில் உள்ள எருசலேமுக்கு இயேசுவோடு பயணிப்போம், இன்னும் பஸ்கா பண்டிகைக்கு வெறும் நான்கு நாட்களே உள்ளன.*

### *அத்தி மரத்தை சபித்தல்*

*இந்த நிகழ்வைப் பற்றி பேசும்போது, தொடக்கத்தில் ஏன் இயேசு அத்தி மரத்தை சபித்தார் ? அத்தி மரத்தில் இலைகள் வருவதற்கு முன்னரே அது அத்திப்பழங்களை கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் உண்மை. அத்தி மரமானது இலைகள் வருவதற்கு முன்னரே பழங்களை உற்பத்தி செய்யக்கூடியது. அதனால், அத்தி மரத்தில் இலைகள் முளைத்த பின்னரும் பழங்கள் இல்லையெனில் அந்த வருடம் அந்த மரத்தில் கனிகள் கிடைக்காது. இயேசு பசியுடன் இருந்தார்! அவருடைய பசி எதை பற்றியது? யோவான் 4 இல் குறிப்பிட்டபடி சமாரியா செல்லும் வழியில் நடைப்பெற்ற அந்த நிகழ்வை எண்ணிப்பாருங்கள்.*

> **யோவான்** *4:8, அவருடைய சீஷர்கள் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள்.*

*அவர்கள் பசியில் இருந்தனர் மேலும் அவர்கள் உணவு வாங்குவதற்கு சென்றனர், இயேசு சீகேம் அல்லது சமாரியாவிலுள்ள கிணற்றின் அருகில் அமர்ந்திருந்தார். இயேசு பின்னர் அந்த சமாரிய ஸ்த்திரியிடம் பேசினார் மேலும் தீர்க்கதரிசனமாக அவளுடைய நிலைமையை கூறினார், அது அவளை அவர் மேசியா என நம்பச்செய்தது. இறுதியில் இயேசுவைக் குறித்த செய்தி அந்த கிராமத்தில் உள்ள மற்றவர்களிடம் பரவியது. அதேசமயத்தில், அவருடைய சீடர்கள் அவரிடம் வந்து உணவை தந்தனர்.*

**யோவான் 4:31**, ''இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி :ரபீ, போஜனம்பண்ணும் என்று வேண்டிக்கொண்டார்கள்.''

ஆனால் அவர் யோவான் 4:32 – **அதற்கு அவர் :நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார்."** இயேசு இன்னும் பசியில் இருந்தார் ஆனால் சரீர உணவுக்காக அல்ல. அவர் அதை தான் சீடர்களிடம் தெரிவித்தார், ஆனால் அவர்களுக்கு அவர் எந்த உணவைக் குறித்த சொல்கிறார் என்ற குறிப்பில்லாமல் இருந்தனர், அவர் அதை பின்னர் யோவான் 4:34:

"**நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.**" என்று விளக்குகிறார்.

சாத்தான் இயேசுவை கல்லில் இருந்து அப்பம் செய்யச்சொன்னது நினைவில் இருக்கிறதா? இயேசு அப்போது உபாகமம் 8:3ல் சொல்லப்பட்டதை "**மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்**" மத்தேயு 4:4ல் சுட்டிக்காட்டினார். அவர் தன்னுடைய உடல் பசியை திருப்தி செய்வதைக்காட்டிலும் தன்னுடைய சீடர்களுக்கு இந்த சம்பவம் மூலம் முக்கியமான ஆவிக்குரிய பாடத்தை கற்றுத்தரவே எண்ணினார் என்பது வெளிப்படையாகிறது.

மாற்கு 11:14 இல் இயேசு அத்தி மரத்திற்கு **பதில்** கொடுத்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது! அந்த மரம் அவரிடம் வாய்மொழியாக ஏதும் பேசவில்லை, ஆனால் தன்னுடைய இலைகளை காண்பித்து அவருடன் தொடர்புகொண்டது. எல்லா தேவனின் படைப்புகளும் தேவனிடம் தொடர்புடன் இருக்கிறது; அதனால் நாமும் விசுவாசத்தின் மூலம் நம்மை படைத்தவரோடு தொடர்பில் இருக்க வேண்டும்.. ஆகையால், அத்திப்பழங்கள் உண்டாவதற்கு இன்னும் நாட்கள் இருந்தபோதிலும், இந்த அத்தி மரமானது தன்னிடம் இல்லாத ஒன்றை இருப்பதுபோல காண்பித்தது. ஆகவே அந்த மரம் மாய்மாலம் பண்ணினது.

இந்த மரமானது இயற்கையாகவே மாய்மாலம் அல்லது போலித்தனம் செய்யக்கிடியதாக இருந்ததால் இயேசு அதை சபித்தார். நம்முடைய சீஷத்துவப் பாடத்தில் இயேசு போலித்தனத்தை எவ்வாறு கடுமையாக வெறுத்தார் என்பதை கற்றோம் – அவரால் மிகவும் கண்டிக்கப்பட்ட ஒன்று இந்த ஏமாற்றுவேலை/போலித்தனம். இன்னும் மேலான புரிதலுக்கு மத்தேயு 23 ஆம் அதிகாரத்தை வாசித்து தெரிந்து கொள்ளுங்கள்.

தன்னுடைய இந்த செயலின் மூலம் சீஷர்களின் கவனம் தன் மீது திரும்பும் என்று இயேசு உணர்ந்திருந்தார். மேலும் இந்த சம்பவத்தை வைத்தே அவர்களுக்கு ஒரு பாடத்தை கற்பிக்க அவர் எண்ணினார். இயேசுவிடம் மட்டும் மரங்கள் பேசவில்லை, அவரும் அவைகளுடன் பேசினார், அதேபோல் நம் வாழ்வில் வரும் புயல்களிலும். மலைகளிடமும் நாமும் பேசி அவைகளை அதட்ட வேண்டும் என்று நம்மை ஊக்குவிக்கிறார் (மாற்கு 11:23). மலைகளிடமும் மரங்களிடமும் பேசி என்ன ஆகப்போகிறது? இயேசு அத்தி மரத்தை சபித்த போது, அது உடனே பட்டுப்போனது. அதற்காக

உபயோகப்படுத்திய கிரேக்க வார்த்தை ‘பாரா-க்ரீமா’ (“PARACHREMA”) அதாவது “உடனே” (Strong’s Concordance).

எனினும், மறுநாள் அத்தி மரம் சாகும் வரை இதை சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை (மாற்கு 11:20). அந்த மரம் உடனே செத்துப்போய் இருந்தால், பிறகு ஏன் அவர்கள் அதை மறுநாள் வரைக்கும் கவனிக்கவில்லை? இந்த கேள்விக்கான பதிலை மாற்கு 11:20 இல் காணலாம். இந்த மரமானது வேரிலிருந்து காம்பு வரை மடிந்திருன்தது. வேதத்தில் குறிப்பிட்டிருந்தபடி அந்த மரம் உடனடியாக மடிந்தது, ஆனால் அதன் வேருக்கு என்ன ஆனது என்பது மறுநாள் காலை அவர்கள் கண்களுக்கு புலப்படவில்லை.

தேவன் அனைத்தையும் அவருடைய வார்த்தையை கொண்டு படைத்தார் என்பதை நாம் அறிந்திருக்கிரோம்.

> எபிரெயர் 11:3 – **விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.**

இந்த முழு படைப்பும் தேவன் கூறிய வார்த்தையின் படியே உருவானது. அதுபோலவே, நம்பிக்கையோடு வெளியாகும் நம்முடைய வார்த்தைக்கும் ஆற்றல் உண்டு.

> நீதிமொழிகள் 18:21 – **மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.**

தேவனிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் விஷயங்களைக் குறித்த மிகப்பெரிய ஆவிக்குரிய பாடம் இங்கே நமக்கு கிடைத்துள்ளது. மத்தேயு 7:7ன் படி நாம் கேட்கும்போது, நாம் பெற்றுக்கொள்வோம், ஆனால் அது சில நேரங்களில் இந்த பூவுலகில் வெளிப்பட சிறிது காலதாமதம் ஆகலாம். நாம் எதிர்நோக்கி இருந்ததை கண்களால் பார்க்கமுடிகிறபோது தான் தேவன் நம் விண்ணப்பத்திற்கு பதில் அளித்தார் என்று **இல்லை**; உண்மையில், நம் தேவன் நாம் ஜெபித்த உடனேயே பதில் அளித்து விடுகிறார் (மாற்கு 11:24). ஆனால் இந்த அத்தி மரத்திற்கு நடந்தது போல, நம்மால் அதற்குரிய பலனை உடனடியாக இந்த பூவுலகில் காணமுடிவதில்லை ஏனெனில் நம்மால் தேவன் மறைவில் செய்யக்கூடிய காரியங்களை காணமுடிவதில்லை அதனால் அது வெளிப்படும்வரை காத்திருக்க வேண்டியதாயிருக்கிறது.

## இயேசு தேவாலயத்தை சுத்திகரித்தார்

இது நாம் கற்பனை செய்வதற்கே மிகவும் கடினமான ஒன்று. இரக்கமும், தயையும், கருணையும், அன்பும் நிறைந்த தேவன், தன் ஜனத்தைக் கண்டு கண்ணீர் விடுபவரும், மற்றவர்களின் தேவைகளை சந்திப்பதற்காகவே தன்னிடம் உள்ள அனைத்து பணத்தையும் செலவளித்தவரும், தன் மக்களுக்காக உணவைப் பெருக்கியவரும், தன்னுடைய மற்றமுகத்தை இரண்டாம் முறையாக வெளிகாட்டுகிறார். ஆம், நீங்கள் சரியாகத்தான் கேட்டீர்கள், **இரண்டாம் முறை!** முதல் முறை நடந்த பதிவுகள் யோவான்

2:13–17இல் உள்ளன, ஆனால் எனக்கு என்ன வியப்பாக உள்ளது என்றால் அவர் உட்கார்ந்து ஒரு சவுக்கை நூல் கையிற்றிலிருந்து செய்து அவர்களை ஆலயத்திலிருந்து இருந்து விரட்டி அடித்தார்!! இது அவருடைய ஊழியத்தின் ஆரம்ப காலங்களில் நடந்தது, மேலும் இப்போதோ அது நடந்து மூன்று ஆண்டுகள் ஆயின ஆனால் அவர் இன்னும் ஆலயத்தை சுத்திகரித்து கொண்டுதான் இருக்கிறார். இயேசுவும் கூட தான் அளித்த பாடத்தை மீண்டும் கற்பிக்க வேண்டியதாயிற்று. ஏனெனில் அந்த மக்களுடைய இருதயம் மிகவும் கடினமாகவும் மந்தபுத்தியாகவும் இருந்தது என நான் நம்புகிறேன். ஆனால் அவர் ஏன் இதை செய்ய வேண்டும்? பரிசேயர்களும் மதத்தலைவர்களும் அவரை பேய், பெயெல்செபூல், மதுபானப்பிரியன், குடிகாரன் போன்ற எல்லா வகையான பெயர்களை சூட்டி அழைத்தனர். அதற்கு அவர் ஒருபோதும் பதில் அளித்ததில்லை. எனினும், அவர் இங்கு சவுக்கை கையில் எடுத்தார்; காரணம் பிதாவிடமும், பிதாவின் வீட்டின் மீதும் தான் கொண்ட வைராக்கியமே ஆகும்.

மாற்கு 11:17

> **என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார்.**

மாற்கு சுவிஷேஷத்தில் மட்டுமே இயேசு யாரையும் ஒரு பாத்திரத்தை கூட கோவிலுக்குள் எடுத்துச்செல்ல அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது; இயேசுவுக்கு தன்னுடைய தந்தையின் வீட்டை ஜெபத்திற்கும் தேவனின் ஊழியத்திற்கும் மாத்திரமே முழுவதுமாக அர்பணிக்க வேண்டும் என்று விரும்பினார்.

ஓய்வுநாளில் வேலை செய்வது ஒருவனின் சுயமுயற்சியை குறிக்கிறது, ஆனால் நாம் செய்யும் சுயமுயற்சியினால் நாம் இரட்சிக்கப்பட முடியாது. ஏனெனில், நாம் செய்யும் வேலைகள் எப்பொழுதும் தேவனின் நியமங்களின் அளவை எட்ட முடியாது. அதை போலவே ஆலயத்தில் செய்யப்படும் சுயமுயற்சியை ஒத்த காரியங்கள் எப்போதும் அநாவசியமானதாகவே இருக்கும்.

பணத்தை மாற்றுபவர்கள் கோவிலின் வரிப் பணம் கட்டுவதற்காகத்தான் பணத்தை மாற்றிக்கொண்டிருன்தனர்; அதோடு விலங்குகளையும் பலி செலுத்துவதற்காகவும் விற்றுக் கொண்டிருந்தனர். இதை சற்று சிந்தித்து பார்க்க வேண்டும். அவர்கள் அந்நிய நாட்டில் இருந்து வந்தவர்களிடம் கூடுதலான பணத்தை வசூலித்தனர். அதனால் பணம் பரிமாற்றத்தில் நிறைய பணத்தை சம்பாதித்தனர். இந்த வியாபாரிகள் ஊழல்வாதிகளாய் இருந்தனர். மேலும் அவர்கள் தங்களுடைய வணிகத்தை தேவனின் சபையிலேயே நடத்தினர். **தேவனின் சபையை பணம் சம்பாதிப்பதற்காக பயன்படுத்துபவனை தேவன் கடுமையாக நியாயந்தீர்ப்பார்**.

இது இன்றும் கூட சபைக்கு பொருத்தமானதுதான். தேவன் நாம் அவருக்கு எதிராக திரும்பத் திரும்ப செய்யும் பாவங்களைக்கூட பொறுத்துக்கொள்கிறார், அத்தகைய கருணை நிறைந்தவர். ஆனால் தேவனின் பெயரைக் கொண்டு பணம் சம்பாதிப்பதை முற்றிலும் வெறுப்பதோடு கடுமையான தண்டனையும் அளிக்கிறார். நாமும்கூட தேவனின் பெயரால் செய்யப்படும் அத்தகய செயல்களை பொறுத்துக்கொள்ள கூடாது.

இயேசு தன்னுடைய போதனைகளை குறுந்தட்டுகளாக (CD) செய்து விற்கிறதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அல்லது, இந்த ஆராதனை தொகுப்பை (Worship song collection)? தேவன் சுகம் அளிப்பதற்கு உங்களிடம் பணம் கேட்பதை கற்பனை செய்ய முடிகிறதா? இயேசு உங்கள் செழிப்புக்காக (Prosperity) உங்கள் மீது கையை வைக்க தனக்கு 1000 டாலர்கள் கொடுக்கும்படி உங்களிடம் கேட்பதை கற்பனை செய்ய முடிகிறதா? தேவனின் சுவிசேஷத்திற்கு எப்படி ஒரு இழுக்கு இந்த கிறித்தவர்கள் என்று அழைக்கப்படுபவர்களால் ஏற்படுகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்களா? அது மெய்யாகவே இயேசுவின் இருதயத்திற்கு வருதத்தை அளிக்கும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.

ஒரு கள்ளபிரசங்கி / கள்ள அபோஸ்தலர் அல்லது அந்திகிறிஸ்து ஆவியின் தெளிவான அடையாளத்தை பணத்தாசையில் காணலாம் என்று வேதப்பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் என்னையே ஒரு எடுத்துக்காட்டாக இங்கு குறிப்பிடுகிறேன், நான் செய்யும் பிரசங்கங்களில்:

- வித்தியாசமான சுவிசேஷம் (Gospel)
- வித்தியாசமான இயேசு (Jesus)
- வேதாகமத்தில் கொடுக்கப்படாதவை
- இயேசுவோடு எதாவது கூட்டியோ குறைத்தோ

பிரசங்கம் பண்ணும் போது நீங்கள் அறிவீர்கள்.

ஆனால் உங்கள் கரிசனையை தூண்டி ஏழைகள் தேவையுள்ளவர்கள் பெயரை சொல்லி உங்களிடம் இருந்து பணத்தை கறந்தால்? இதுவும் தவறே! இதுபோன்ற மோசடிகள் இந்நாட்களில் கிறித்தவத்தில் (Christendom) பரவலாக காணப்படுகிறது. அதனால், என் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே விழித்திருங்கள்!! (1 தீமோத்தேயு 6:10 கூறுகிறது, நீங்கள் ஒருவரின் இருதயத்தில் இருக்கும் பணத்தாசையை அறிந்திருக்க வேண்டும் மேலும் அதுபோன்ற மோசடியான உபதேசிகளை அடையாளம் காணலாம்.)

மத்தேயு 21ஆம் அதிகாரத்தில், இந்த நிகழ்வைப் பற்றிய குறிப்புகளில், கோவிலின் பிரகாரத்தை சுத்திகரித்த பின் நடந்த கூடுதல் தகவல்களையும் சேர்த்துள்ளார் – குழந்தைகள் தேவனை துதித்து, “தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா,” என்று பாடினர். இதனால் எரிச்சலடைந்த பிரதான ஆசாரியர்களிடம் சங்கீதம் 8:2 ஐ இயேசு மேற்கோள் காட்டினார்.

மத்தேயு 21:16

**அவரை நோக்கி :இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள் அதற்கு இயேசு :ஆம், கேட்கிறேன்.**

**குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும்**

**துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார்..**

**விசுவாச்சமில்லாத சந்ததி**

யோவான் 12:37–50

*தேவன் அளித்த சுதந்திரத்தை மக்கள் அடிக்கடி தவறாக பயன்படுத்தி தாங்கள் தேனின் மீது விசுவாசம் வைக்க போதுமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை என்று கூறுகின்றனர்; சிலர் முன்குரிகப்பட்டவர்கள் கோட்பாடை (*predestination theory*) காரணம் காட்டுகின்றனர் – இவை எல்லாமே உண்மையல்ல.*

*தீத்து* 2:11

> *ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,*

வெளி 3:20

> *இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.*

வெளி 22:17

> *ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.*

ரோமர் 10:13

> *ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.*

*இந்த வசனங்களின் மூலம், இரட்சிபின் ஈவு அனைத்து மனிதற்கும் அளிக்கப்பட்டது என்று விளங்குகிறது. தேவனின் நாமத்தை கூப்பிடுகிற அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள். ஆனபோதிலும், இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த போது இருந்த யூதர்களால் அவரை நம்பமுடியவில்லை ஏனென்றால் அவர்கள் அவரை நிராகரிக்க முடிவு செய்திருந்தனர்; அவரை நம்புவதில்லை என உறுதியாய் இருந்தனர்; அவர்கள் இடறுதற்கான கல்லில் இடறினார்கள் – இயேசு (*ரோமர் 9:32*). மாற்கு 6:5இல், அவர்கள் நம்பாததால் இயேசுவால் எந்த ஒரு மகத்தான காரியத்தையும் செய்ய முடியவில்லை என்று கூறுவதற்கு பயன்படுத்திய கிரேக்க சொல்லானது "ஔ" (*"OU"*) மற்றும் "டுனமை," (*"DUNAMAI,"*). இயேசுவால் எந்த ஒரு மகத்தான அற்புதத்தையும் அவர்கள் மத்தியில் செய்ய முடியாததற்கு காரணம் அவரிடம் போதுமான வல்லமை இல்லை என்பது அல்ல அவர் தன்னுடைய வல்லமையை விரும்பாதவர்கள் மத்தியில் அதை பயன்படுத்துவதில்லை என்று அவர் தீர்மானம் செய்திருந்தார்.*

யோவான் 12:42–43

> ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் .அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள். **அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்.**

அவர்கள் இயேசுவை ஒப்புக்கொள்ள விருப்பமில்லாததால் அவர்களின் நம்பிக்கை மெய்யானதா என்றும் அவர்கள் விருப்பத்துடன் இயேசுவுக்கு ஒப்பு கொடுத்தார்களா என்றும் அவர்கள் மீது தீவிர சந்தேகம் எழும்புகிறது. இயேசு கூறினார், "*மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைப் பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.*" (மத்தேயு 10:32–33). அபோஸ்தலனாகிய பேதுரு ஒரு தருனத்தில் இயேசுவை மக்களின் முன் அறிக்கை செய்ய மறுதலித்தார் (யோவான் 18:17 மற்றும் 25–27), ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவரின் மீது ஊற்றிய பின்பு, அவர் மொத்தத்தில் ஒரு வித்தியாசமான மனிதனாக மாறி, இயேசுவை அதிகாரிகளின் மத்தியில் தைரியமாக அறிக்கையிட்டார் (அப்போச்த்தலர் 4:8–13).

### தேவனின் வார்த்தை

யோவான் 12:48

> என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; **நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்**

சங்கீதம் 138:2

> உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; **உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.**

தேவன் எல்லாவற்றைக் காட்டிலும் தன் வார்த்தையை மகிமைபடுத்தினார், அதை இயேசுவும் இறுதி நாட்களில் இங்கே உறுதிப்படுத்தினார், அவர் பேசிய தன்னுடைய வார்த்தை அவர்களை நியாயம் தீர்க்கும்! இதையும் மோசே தீர்க்கதரிசனமாய் இயேசுவைக் குறித்து உபாகமம் 18:18–19இல் குறிப்பிட்டுள்ளார்– **உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்.** தேவனுடைய வார்த்தை மாம்சமாகி நம்மோடு வாசம்பண்ணினார்; ஆனால் அவர்கள் அவரை

ஏற்றுக்கொள்ளவில்லை மேலும் அவரை புறக்கணித்ததற்கு தேவன் அவர்களை இறுதி நாளிலே நியாயம் தீர்ப்பார்!

## இரவு தங்குதல்

மாற்கு 11:19

> *சாயங்காலமானபோது, அவர் நகரத்திலிருந்து புறப்பட்டுப்போனார்*

மத்தேயு 21:17

> *அவர்களைவிட்டு நகரத்திலிருந்து புறப்பட்டு, பெத்தானியாவுக்குப் போய், அங்கே இராத்தங்கினார்.*

# பாடம் 4 - பஸ்கா திருநாளுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர்

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| வாடிய அத்தி மரம் மற்றும் நம்பிக்கை | 21:19-22 | 11:20-26 | 21:38 | | காலை |
| இயேசுவின் அதிகாரத்தை குறித்த கேள்விகள் | 21:23-27 | 11:27-33 | 20:1-8 | | |
| இரண்டு மகன்களைக் குறித்த உவமை (Parable) | 21:28-32 | | | | |
| திராட்சைத் தோட்டத்தைக் குறித்த உவமை (Parable) | 21:33-46 | 12:1-12 | 20:19-26 | | நண்பகல் |
| திருமணவிருந்தைக் குறித்த உவமை (Parable) | 22:1-14 | | | | |
| சீஷர் மீதான கேள்வி | 22:15-22 | 12:13-17 | 20:19-26 | | |
| முக்கிய கட்டளை | 22:34-40 | 12:28-34 | | | |
| பரிசேயரையும் வேதபாரகரையும் குறித்த கண்டனம் | 23:1-36 | 12:38-40 | 20:45-47 | | மதியம் |
| இயேசு எருசலேமைக் குறித்து புலம்பினார் | 23:37-39 | | | | |

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| விதவையின் காசு | | 12:41-44 | 21:1-4 | | |
| ஒலிவேட் சொற்பொழிவு (Olive discourse) | 24:1-51 | 13:1-37 | 21:5-36 | | மாலை |
| கன்னிகைகளைக் குறித்த உவமை (Parable) | 25:1-13 | | | | |
| திறமைகளைக் குறித்த உவமை (Parable) | 25:14-30 | | | | |
| தவிர்க்க முடியாத இறுதி தீர்ப்பு | 25:31-46 | | | | |

மதியத்தில் இருந்து பொது ஊழியம் செய்வதை நிறுத்தினார்; இயேசுவின் கவனம் இனி மதத் தலைவர்களின் மீது திரும்பியது.

நாம் திரும்பவும் ஒரு முறை பெத்தானியாவில் இருந்து எருசலேமுக்கு செல்லும் பாதையில் பயணிப்போம், மேலும் இது ஒரு ஓய்வில்லாத பிரசங்க நாட்களாக இயேசுவின் வாழ்வில் அமையப்போகிறது, ஏறத்தாழ 12 மணி நேரங்கள் செலவழித்தார். இயேசு அவருடைய சீஷர்களுடன் எருசலேமை நோக்கி முன் சென்ற பாதையிலேயே சென்றார், சீஷர்கள் அங்கே சபிக்கப் பட்ட அத்தி மரம் முழுவதுமாக வாடியிருந்ததை கண்டு வியந்தனர்.

## இயேசுவின் அதிகாரம் கேள்விகுட்பட்டது

*(மத்தேயு 21:23–27, மாற்கு 11:27–33 மற்றும் லூக்கா 20:1–8)*

இயேசுவும் அவருடைய சீஷார்களும் தேவாலயத்தை சென்றடைந்தபோது, அவரிடம் எந்த அதிகாரத்தின் கீழ் இதை எல்லாம் செய்து வருவதாக கேள்வி கேட்டார்கள் (கோவிலை சுத்திகரித்தல் தொடர்பாக). நான் கீழே ஒரு சுவாரஸ்யமான சுருக்கம் கொடுத்துள்ளேன். அதில், இயேசுவிடமும் மற்றும் அவர் கேட்ட கேள்விகளும் அடங்கி உள்ளது. (மீண்டும் மீண்டும் கேட்கப்பட்ட ஒரே கேள்விகளும் ஒரே கேள்வியாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது, அதாவது, நான்கு சுவிசெஷத்திலும் மீண்டும் கொடுக்கப்பட்ட அதே கேள்விகள்).

இயேசுவிடம் எத்தனை கேள்விகள் கேட்கப்பட்டது?

- இயேசுவிடம் கேட்கப்பட்ட பிரத்தியேகமான கேள்விகள் → 81
- இயேசுவே பதில் அளித்த பிரத்தியேகமான கேள்விகள் → 73
- இயேசு பதில் அளிக்காத பிரத்தியேகமான கேள்விகள் → 8

இயேசு எத்தனை கேள்விகளை கேட்டார்?

- இயேசு கேட்ட பிரத்தியேகமான கேள்விகள் → 81
- இயேசுவே பதில் அளித்த பிரத்தியேகமான கேள்விகள் → 38
- மற்றவர்கள் பதில் அளித்த பிரத்தியேகமான கேள்விகள் → 43

இங்கே, இயேசு கேள்விக்கு மறுகேள்வி கேட்பதையே பதிலாக தேர்வு செய்கிறார்!

இயேசு அவர்களுடைய பகட்டான வாழ்க்கையையும் (lavish Lifestyle), மக்களை கொள்ளையடித்தும், இலாபகரமாக வருமானத்தை சேகரித்தவர்களின் போக்கை தாக்கினார். யோவான்ஸ்நானகன் இயேசுவே உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்று அறிவித்தார் *(யோவான் 1:29).*

> பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு :விரியன் பாம்புக்குட்டிகளே !வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். *(மத்தேயு 3:7–8).*

இதற்க்கான விடை லூக்கா 7:29–30 கொடுக்கப்பட்டுள்ளது *(எல்லா மக்களும், வரி வசூலிப்பவர்களும் கூட, இயேசுவின் வார்த்தையை கேட்ட பின், தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். ஏனெனில் அவர்கள் யோவானால் ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். ஆனால் பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் தங்களுக்கான தேவ நோக்கத்தை நிராகரித்தனர், ஏனெனில் அவர்கள் யோவானால் ஞானஸ்நானம் பெறாமல் இருந்தனர்).*

அவர்கள் இயேசுவைக் குறித்து யோவான்ஸ்நானகன் கூறிய சாட்சியை கேட்க விருப்பம் இல்லாதவர்களாய் இருந்தனர். அதனால், இங்கே இயேசு தமது அதிகாரத்தைக் குறித்த கேள்வியை எழுப்பப்பட்டபோது பரிசேயர்களுடைய மனதில் தீர்க்கப்படாமல் இருந்த யோவான்ஸ்னானகன் பிரச்சினையைப் பற்றி குறிப்பிட்டார். அவர்கள் யோவான்ஸ்நானனைக் குறித்து மதிப்பீடு செய்யக் கூடுமானால் இயேசுவைக் குறித்தும் நிச்சயமாக செய்யக்கூடும். பரிசேயர்களால் பதில் கூற முடியவில்லை ஏனென்றால் அவர்கள் மக்களைக் கண்டு அஞ்சினர் *(மாற்கு 11:32–33).* சில சமயங்களில் மதத் தலைவர்கள் மக்களை கண்டு அஞ்சினர், அதில் இதுவே முதல் முறையாகும். இயேசு மக்களுக்கு கொடிய தோட்டக்காரனைக் குறித்த உவமையை கூறியபோதும் அவர்கள் மக்களைக் கண்டு பயந்தனர் *(மத்தேயு 21:33–45, மாற்கு 12:1–12 மற்றும் லூக்கா 20:9–19)* மேலும்

அப்பொழுதிலிருந்தே அவர்கள் எப்படி இயேசுவை கொல்லலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருந்தனர் (லூக்கா 22:2).

மதத் தலைவர்கள் மேலும் குத்தப்பட்டு தங்களை உணரும் வகையில், இயேசு இன்னும் மூன்று உவமைகள்க் கூறினார்.

| **உவமை** | **மத்தேயு (Matthew )** | **மாற்கு (Mark)** | **லூக்கா (Luke)** |
|---|---|---|---|
| இரண்டு குமாரர்களும் தந்தையின் விருப்பமும் | 21:28–32 | | |
| திராட்சைத் தோட்டம் | 21:33–46 | 12:1–12 | 20:9–19 |
| திருமண விருந்து | 22:1–14 | | |

இயேசு கேட்ட முந்தய கேள்விக்கு, மதத் தலைவர்கள் அமைதியாய் இருக்க முடிவெடுத்தனர், அதனால் அவர்களை கோபமூட்ட இந்த உவமைகளைக் கூறினார்.

## இரண்டு குமாரர்களைக் குறித்த உவமை

இந்த உவமைக்கு பிறகு, அவர் அவர்களை நேரடியாக ஒரு கேள்வியைக் கேட்டார், அவர்கள் அதற்கு கட்டாயம் பதில் அளிக்கும்படி ஆயிற்று. பிறகு, இயேசு அந்த உவமைக்கான பயன்பாட்டையும் அதற்கான விளக்கத்தையும் மத்தேயு 21:31–32 இல் கூறியுள்ளார்:

> "இவ்விருவரில் எவன் தன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள் :மூத்தவன் தான் என்றார்கள் .அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி :ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை; ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள்; அதை நீங்கள் கண்டும், அவனை விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை என்றார்."

## திராட்சத் தோட்டத்தைக்குரித்த உவமை

இயேசு இந்த உவமையைக் குறித்துக் கூறும்போது பழைய ஏற்பாட்டில் இருந்து நிறைய காரியங்களை மேற்கோள் காட்டினார். கீழிருக்கும் அட்டவணையைப் பாருங்கள்.

| விளக்கம் | சங்கீதம் | ஏசாயா | எரேமியா |
|---|---|---|---|
| நடப்பட்ட திராட்சத் தோட்டம் | 80:8 | 5:1 | 2:21 |
| வேலி | 80:12 | | |
| ஆலை | | 5:2 | |
| கோபுரம் | | 5:2 | |
| அவர் அழித்திடுவார் | | 5:6 | |

தேவன் இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து ஒரு திராட்சைக் கொடி போல எடுத்து அவர்களுக்காக ஆயத்தப்படுத்தப்பட்டிருந்த தேசத்தில் நட்டார். தேவன் தீர்க்கதரிசிகளை அனுப்பி எச்சரிக்கை செய்தபோதிலும், இஸ்ரவேலர்கள் மிகவும் அரிதாகவே கனி கொடுத்தனர். அதனால், இந்த மக்கள் மனந்திரும்பி என்னிடம் வரவில்லை என்றால், பிறகு தேவன் அந்த திராட்சத்தோட்டத்தை அழித்து மேலும் மற்ற நிலங்களைப் போல உழப்போவதாக தேவன் இந்த மக்களைக் குறித்து எரேமியா தீர்க்கதரிசியைக் கொண்டு தீர்க்கதரிசனம் உரைத்ததார் (எரேமியா 26:18–19).

இங்கே, தேவகுமாரனுக்கு செவிகொடாமல் இருப்பது பற்றி இயேசு குறிப்பிடுகிறார் என்று மதத் தலைவர்கள் அந்த பின்னணி குறித்து நன்கு அறிந்திருந்தனர். இயேசு மதத் தலைவர்களிடம் மத்தேயு 21:40இல் கேட்டதாவது – "**அப்படியிருக்க, திராட்சத்தோட்டத்தின் எஜமான் வரும்போது, அந்த தோட்டக்காரரை என்ன செய்வான் என்று கேட்டார்.**" கேள்விக்கு அவர்கள் பதில் அளிக்கும் முன்னர், இதற்கான பதில் அவர்கள் மத்தியில் இருந்த ஒரு சாதாரண மனிதனிடம் இருந்து வந்தது. மத்தேயு 21:41 – **அதற்கு அவர்கள் :அந்தக் கொடியவரைக் கொடுமையாய் அழித்து, ஏற்றகாலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கத்தக்க வேறே தோட்டக்காரரிடத்தில் திராட்சத்தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுப்பான் என்றார்கள்.**"

இயேசு அவர்களுடைய பதிலை 45ஆம் வசனத்தில் ஆமோதித்தார், மேலும் 40 ஆண்டுகளுக்கு பிறகு துல்லிளியமாக அந்த முழு நகரமும் ரோம பேரரசால் அழிக்கப்பட்டது. மீண்டும், இயேசு சங்கீதம் 118:22ஐ மத்தேயு 21:42இல் மேற்கோள் காட்டி, பிரதியுத்தரமாக ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. மேலும், ஏசாயா 5ஆம் அதிகாரத்தில் கூறப்பட்ட வேலியை எடுத்துப்போடுவேன், தோட்டம் அழித்துப்போடப்படும் என்ற தீர்க்கதரிசனத்தை உறுதி படுத்தியது. இந்த தீர்க்கதரிசனம் கி. பி 70இல் நிறைவேறியது.

இது அவர்கள் முதன் முறையாக கேட்டகும் ஒரு புதிய செய்தி அல்ல.; அவர்கள் இதே செய்தியை யோவான்ஸ்நானகனிடம் இருந்து 3ஆண்டுகளுக்கு முன்பே கேட்டனர் (மத்தேயு 3:7–10). ஆனால் அவர்கள் அதை நிராகரித்தனர்; இந்த முறையும் கூட இந்த செய்தி தங்களுக்குத் தான் என்று அறிந்திருந்தனர் (மத்தேயு 21:45) ஆனால் மிண்டும் அவர்கள் அதை நிராகரித்தனர்.

**திருமண விருந்து: ராஜாவின் மகனுடைய திருமணம்**

(மத்தேயு 22:1–14)

*இங்கே ஒரு பந்தி ஆயத்தமாய் இருந்தது ஆனால் அழைக்கப்பட்டவர்கள் வேலையாய் இருந்தனர், எனவே வர அவர்களுக்கு மனமில்லை. அரசன் தன் வேலைக்காரர்களை அனுப்பிய போது, அந்த மக்கள் அவர்களுடைய அழைப்பை மட்டும் நிராகரிக்கவில்லை அவர்களை கொலையும் செய்தனர். பிறகு, அவர் மற்றொரு வேலைக்காரனை தெருவிலுள்ள நல்லவர்கள் தீயவர்கள் ஆகிய இருவரையும் அழைத்து வருமாறு அனுப்பினார் (*22:10*). எனினும் உரிய ஆடையை அணியாதிருந்த ஒரு விருந்தினனை கண்டுபிடித்து திரும்பி வந்த அரசன், அவனை வெளியே எரிந்து தண்டனை அளித்தார். துரதிர்ஷ்டவசமாக, இயேசு இந்த உவமைகளை நேரடியாக அவர்களுக்கு எதிராக கூறிய போதிலும், அவர்களுடைய இருதயம் கடினமானதாகவே இருந்தது; ஏனென்றால் எழுதியபடியே அவர்களை அழைக்கப்பட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டும் இருந்தாலும், அவர்கள் அதை நிராகரித்தனர்; எனவே மற்றவர்கள் ராஜ்யத்திற்குள் பிரவேசித்தனர்.*

**இயேசுவின் மீதான மூன்று தாக்குதல்கள்**

*உங்களிடம் கருத்து வேறுபாடு கொண்ட ஒருவர், உடனே நம்மை பிடிக்காத ஒருவரிடம் சேர்ந்து கொள்வதை நீங்கள் கவனித்ததுண்டா! இங்கேயும் இயேசுவிடம் இருந்த வெறுப்பினால் ஒருநாளும் சேராத கூட்டணி ஒன்று ஒன்றுசேர்ந்தது!*

**முதல் தாக்குதல்**

| | ***மத்தேயு (Matthew )*** | ***மாற்கு (Mark)*** | ***லுக்கா (Luke)*** |
|---|---|---|---|
| இராயனுக்கு வரிகொடுத்தால் | 22:15–22 | 12:13–17 | 20:20–26 |

**பரிசேயருக்கும் ஏரோதியருக்கும் இடையேயான கூட்டணி:** *பரிசேயர்கள் தங்களை இஸ்ரவேல் தேசத்திடமிருந்து பிரித்துக்கொண்டனர். ஏனென்றால், ரோமராட்சி (*Herodians*) தங்களுடைய மத கோட்பாடுகளுக்கு முழுவதும் எதிரானதாக அவர்கள் கருதினர். ஏரோதியர்கள் என்கிற பெயரிலிருந்தே ஏரோதுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் ஆதரவு தருபவர்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். ஏரோது யூதன் அல்லாதவன் ஆனாலும், இஸ்ரவேலர்களுக்கு தலைவனாக யூத தேசத்தை ஆட்சி செய்ய ரோமர்களால் நியமிக்கப்பட்டார். இந்த பரிசேயரும் எரோதியரும் எப்பொழுதும் எல்லாக் காரியங்களிலும், அரசியல், சமூக சம்பந்தமான எல்லா அம்சத்திலும் ஒருவருக்கொருவர் எதிராகவே சண்டை போட்டுக்கொண்டு இருந்தனர். ஆனால் இயேசுவை கொல்லும் நோக்கத்தில் (மாற்கு 3:6) இருவரும் ஒண்டு சேர்ந்துக் கொண்டனர். மத்தேயு* 22:16 *மற்றும் மாற்கு* 12:13*இலும் அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்தனர். அவர்கள் ஏன் இதை செய்தனர்? ஏனெனில் இந்த கூட்டணி அவர்களுக்கு இயேசுவைக் கைப்பற்றி ஆளுநரிடம் ஒப்படைக்க தேவைப்பட்டது (லூக்கா* 20:20*). இதற்கு இயேசு பிரதியுத்தரமாக, கபடதாரிகளே ஏன் என்னை*

*சோதிக்கிறீர்? அவருடைய பதிலுக்கு பின்னர், அவர்கள் ஆச்சரியப்பட்டு அவரை விட்டுவிட்டு அவர்களுடைய வழியிலே திரும்பி சென்றனர்.*

### இரண்டாம் தாக்குதல்

| | *மத்தேயு (Matthew )* | *மாற்கு (Mark)* | *லுக்கா (Luke)* |
|---|---|---|---|
| *சதுசேயரின் கேள்வி* | 22:23–33 | 12:18–27 | 20:27–40 |

*சதுசேயர்களும் மதத் தலைவர்கள்தான். உயிர்த்தெழுதல் இல்லை என்று நம்புகிறவர்கள், வேதபாரகரைப்போல் சட்டத்தை இவர்கள் போதிப்பவர்கள். இந்த சதுசேயரும் வேதபாரகரும் சேர்ந்து கொண்டு வெறும் நொண்டி கேள்விகளை கேட்டு அவரை பிடித்து அவர் அதற்கு என்ன கூறுவார் என்று அறிய எண்ணினர். எனினும், இயேசு அதற்கு அற்புதமாக பதில் அளித்திடுவார். அவர் மோசே எழுதிய புத்தகத்தில் இருந்து மேற்கோள்களைக் காட்டுவார், ஏனென்றால் அவர்கள் மோசே எழுதிய வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களையே நம்பினார்கள், "அவர் மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார்." என்று கூறினார். இந்த பதில் மூன்றாம் தாக்குதலின் மற்றொரு வழக்கத்திற்கு மாறான கூட்டணிக்கு வழிவகுத்தது. மத்தேயு 22:34,* ***அவர் சதுசேயரை வாயடைத்தார் என்று பரிசேயர் கேள்விப்பட்டு, அவரிடத்தில் கூடிவந்தார்கள்.***

### மூன்றாம் தாக்குதல்

| | *மத்தேயு (Matthew )* | *மாற்கு (Mark)* | *லுக்கா (Luke)* |
|---|---|---|---|
| *பிரதான கற்பனை* | 22:35–40 | | |
| *முதலாம் கற்பனை* | | 12:28–34 | |

*இந்த நிகழ்வு மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய இரண்டு புத்தகங்களிலும் காணலாம். ஆனால் மிகவும் கவனமாக படித்தால் தான் இந்த ஒரே கேள்வியை இரண்டு வெவ்வேறு தொகுப்பான மக்கள் கேட்டுள்ளனர் என்பது உங்களுக்கு தெரிய வரும். மத்தேயு 22:35 இல், அவர்கள் அவரை பரிசோதிக்கும்படி கூறினர் . மாற்கு சுவிசேஷத்தில் வேதபாரகர்கள் இயேசு முந்தய கேள்விக்கு நன்றாக பதில் அளித்ததினால் இந்த கேள்வியை எழுப்பினர். இங்கே வேதபாரகர்களின் எண்ணம் இயேசுவை பரிசோதிப்பது அல்ல மாறாக அவரிடமிருந்து கற்றுக்கொள்வதே ஆகும். பலியையும், சர்வாங்கதகனபலிகளைக் காட்டிலும் மற்றவர்களை நேசிப்பதே முக்கிமானது என அவர்கள் கூறியதை இயேசு கேட்ட போது அவர் தேவனின் இராஜ்யத்தில் இருந்து தொலைவில் இல்லை என்று கூறினார்.*

*இயேசுவின் மீதான இந்த மூன்று தாகுதல்களுக்கு பின்னர், அவர்கள் மேலும் எந்த கேள்விகளையும் கேட்க தைரியம் இல்லாதவர்களாய் இருந்தனர் (மாற்கு 12:34). பரிசேயர்களையும், சதுசேயர்களையும், ஏரோதியர்களையும் அமைதியாக்கிய பின்பு, இயேசு ஒரு கேள்வியை கேட்டு அனலை அவர்கள் மீது திருப்பினர்.*

## இயேசு தலைவர்களை வினவினார்

| | மத்தேயு (Matthew) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) |
|---|---|---|---|
| கிறிஸ்து யாருடைய குமாரன்? | 22:41–46 | 12:35–37 | 20:41–44 |

இப்போழுது இயேசு அவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டார், கிறிஸ்து யாருடைய குமாரன்? அவர்கள் அதற்க்கு, தாவீது என்று பதிலளித்தனர். உடனே அவர் அவர்களிடம் மற்றொரு கேள்வியை கேட்டார், அதைக்குறித்த எந்த ஒரு பதிலும் இல்லாமல் அமைதியாய் வாயடைத்து போனார்கள். அவர் முந்தி கூறிய மூன்று உவமைகளையும் ஆராய்ந்து அறிந்து கொள்ளுமாறு அவர்களிடம் சொன்னார்.

மத்தேயு 22:46 இதை அழகாக சுருக்கி – **அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாதிருந்தது .அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை.**

சாதாரண மக்கள் இயேசு கூறியவற்றை கேட்டு சந்தோஷமாக ஏற்றுக்கொண்டதால் மாற்கு 12:37, இயேசு மதத் தலைவர்களை எதிர்த்து நீளமாக அடுத்த சில அதிகாரங்களில் பேச தூண்டியது. இயேசு பரிசேயர்களையும் அவர்களுடைய வெளிவேஷத்தைக் குறித்து மிகவும் கவனமாக இருக்கும்படி மக்களிடையே எச்சரிக்கை செய்தார். இது மத்தேயு 23இல் குறிப்பிடப்பட்டுள்ளது, அதை நாம் முன்னமே சீஷத்துவப் பாடத்தில் விரிவாக கண்டோம்.

## காணிக்கை பெட்டியின் (treasury) அருகில் இயேசு

| | மத்தேயு (Matthew) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) |
|---|---|---|---|
| விதவையின் காணிக்கை | | 12:41–44 | 21:1–4 |

இயேசு ஒருவன் தன்னுடைய மிகுதியில் இருந்து கொடுப்பதற்கும் தன்னிடம் இருக்கும் அனைத்தையும் கொடுப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை கூறினார். இது மதத் தலைவர்கள் அவர்களுக்கு கற்றுத்தந்ததற்கு மாறாக இருந்தது. உடனே ஆலயத்தில் கற்களும் தேவனுக்கு கொடுக்கப்பட்ட பரிசுகளும் எவ்வளவு அழகாக இருக்கிறது என்பது போன்ற சில மறு மொழிகள் சீஷர்களின் மத்தியில் எழுந்தது (லூக்கா 21:5). இங்கே மீண்டும் இயேசுவின் மறுமொழியாவது இந்த ஆலயம் அழிந்து போகும் , இதை மதத் தலைவர்களிடம் முன்னரே இரண்டு முறை கூறியுள்ளார், இது மூன்றாம் முறையாகும் (லூக்கா 21:6).

**நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்து**

1 கொரிந்தியர் 5:7

> *ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய "புளித்தமாவைப்" புறம்பே கழித்துப்போடுங்கள் . ஏனெனில் நம்முடைய* ***பஸ்காவாகிய கிறிஸ்து*** *நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே.*

*பழைய ஏற்பாட்டின் பஸ்கா ஆட்டுக்குட்டியையும் இயேசுவையும் ஒப்பிட்டுப் பார்த்து மேலும் இயேசு எவ்வாறு அனைத்து தேவைகளையும் மிகவும் துல்லியமாக பூர்த்தி செய்கிறார்:*

| ***யாத்திராகமம்*** | ***நிசானின் (Nissan) நாட்கள்*** | **பஸ்கா தினத்திற்கு முன்னர்** | **இயேசுவின் வாழ்கையில் நடந்த நிகழ்வுகள்** |
|---|---|---|---|
| ஆட்டுக்குட்டி தெரிந்துகொள்ளப்பட்டது, *12:3* | *10ஆம் நாள்* | *5* | எருசலேமுக்குள் பிரவேசம், வெற்றிப்பிரவேசம் மாற்கு *11:1* |
| *5 நாட்களாக* ஆட்டுக்குட்டி பரிசோதிக்கப்பட்டது*, 12:5* | *11 ஆம் நாள்* | *4* | காசுக்காரரை வெளியிலே துரத்தினார், மத்தேயு *21:12* |
| பரிசோதனை | *12 ஆம் நாள்* | *3* | தலைவர்களால் எந்த குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லை, மத்தேயு *22* |
| ஆட்டுக்குட்டி ஆய்வு செய்யப்பட்டது | *13 ஆம் நாள்* | *2* | பெத்தானியாவில் விருந்து , மாற்கு *14:3* |
| | *14 ஆம் நாள்* | *1* | மதத் தலைவர்களால் எந்த ஒரு குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லை |
| ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டது *12:6* | *14 ஆம் நாள்* | பஸ்கா தினத்தின் அஸ்தமனநேரம் | இயேசுவின் இறப்பு, மாற்கு *15:34* |

*யாத்திராகமம்* 12:1–7

> *கர்த்தர் எகிப்து தேசத்தில் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாய்*

இருப்பதாக. நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி :இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவர்கள். ஒரு வீட்டில் இருக்கிறவர்கள் ஒரு ஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதற்குப் போதுமான பேர்களாயிராமற் போனால், அவனும் அவன் சமீபத்திலிருக்கிற அயல் வீட்டுக்காரனும், தங்களிடத்திலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத் தக்கதாக ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும்; அவனவன் புசிப்புக்குத் தக்கதாக இலக்கம் பார்த்து, ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளவேண்டும். அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும்; செம்மறியாடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது அதைத் தெரிந்துகொள்ளலாம். அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து,

ஆட்டுக்குட்டியை நிசான் (Nissan) மாதம் பத்தாம் நாளில் தேர்வு செய்து, பின்னர் களங்கம் ஏதும் உள்ளதா என பரிசொதித்து, பதினான்காம் நாள் அதாவது பஸ்கா நாளன்று கொன்றனர். அது போலவே, இயேசுவும் பஸ்காவுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னரே எருசலேமுக்குள் பிரவேசித்து, மதத் தலைவர்களாலும், பிலாத்துவாலும் பரிசோதிக்கப்பட்டும் ஆராயப்பட்டும் பிறகு பஸ்கா தினத்தன்று சிலுவையில் அறையப்பட்டார்.

## ஒலிவ மலை பிரசங்கம் (Olivet Discourse)

மதத் தலைவர்களுடனான கேள்வி பதில் கூட்டுத்தொடருக்குப் பின்னர், இயேசு எந்த ஒரு பொது ஊழியமும் செய்வதை நாம் காணமுடியவில்லை. இப்பொழுது அவருடைய முழு கவனமும் தன்னுடைய சீஷர்களின் மீது திரும்பியது. அவருடைய பொது ஊழியம் முடிவுக்கு வந்து பின்னர் தன்னுடைய சீஷர்களுடனான தனிப்பட்ட ஊழியத்தை ஒலிவ மலையில் துவங்கினார். இரவு எருசலேமில் உள்ள கோவிலில் இருந்து பெத்தானியாவுக்கு ஒலிவ மலையின் வழியாக போகும்பொழுது, இயேசு கடைசிகாலத்தைக் குறித்து திடுக்கிடும் தீர்க்கதரிசனம் ஒன்றை அமைதியாக கூறினார்.

| | **மத்தேயு (Matthew)** | **மாற்கு (Mark)** | **லூக்கா (Luke)** |
|---|---|---|---|
| ஒலிவேட் தீர்க்கதரிசனம் | 24:1–36 | 13:1–32 | 21:5–36 |

அவர் வரவிருக்கும் கொந்தளிப்பைக் குறித்து மட்டுமல்ல அந்த நிகழ்வு சம்பவிக்கும்போது அதை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு கூறினார். கி.பி. 70இல் என்ன ஆகப்போகிறது என்பதைக் குறித்து முன்னரே தெரிந்து கொள்வது முக்கியமல்ல, அப்பொழுது அவர்கள் தங்களை எவ்வாறு காத்துக்கொள்ள வேண்டும் என்பதைக் குறித்ததே ஆகும்.

**ஒலிவ மலை தீர்க்கதரிசனத்திலிருந்து மூன்று உவமைகள்**

| உவமை | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) |
|---|---|---|
| பத்து கன்னிகைகள் | 25:1–13 | |
| தூர தேசம் பிரயணித்தல் | 25:14–31 | 13:33–37 |
| செம்மறியாடு, வெள்ளாடு மற்றும் நியத்தீர்ப்பு | 25:31–46 | |

இந்த உவமைகளும் ஒலிவ மலை தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதியாகும். இவை இயேசு கூறிய செய்தியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கே ஆகும். இந்த தீர்க்கதரிசனத்தை விளக்க வேண்டும் என்பதற்காக, இயேசு உவமைகள் மூலமாகவே பேசினார், ஆனால் எதிர்பாராதவிதமாக, இந்த அதிகாரமானது வேதாகமத்தில் தவரான பகுதியில் பிரிக்கப்பட்டுள்ளது. அந்த தீர்க்கதரிசனத்தை உரைக்கும் முன்னர், சீஷர்கள் இயேசுவிடம் ஒலிவ மலையில் இருந்த போது இந்த பின்வரும் கேள்விகளைக் கேட்டனர், மத்தேயு 24:3 – **பின்பு, அவர் ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து :இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.**" அதனால் அவர் முன்னர் கூறிய செய்தியை அழுத்திக் கூறுவதற்காக, இயேசு இந்த மூன்று உவமைகளை கொடுக்கிறார்.

**முதல்**: பத்து கன்னிகைகளைக் குறித்த உவமை, சீஷர்களின் இரண்டு கேள்விகளுக்கு பதில் கூறும் விதமாவது.

- அந்த நாழிகையையும் நாளையும் நீங்கள் அறியாதபடியால் அதைக் கணிக்க முயற்ச்சிக்காதீர்கள்.
- புத்தியுள்ளவர்கள் கூடுதலான எண்ணையை எடுத்துக்கொண்டனர், அதனால் அவர்கள் இன்னும் நீண்ட காத்திருப்புக்கு ஆயத்தமாய் இருந்தனர், அதேபோல் நீண்ட காத்திருப்புக்கு ஆயத்தமாகுங்கள்.

**இரண்டு**: தூர தேசத்துக்கு பிரயாணம் செய்யும் ஒரு மனிதனைக் குறித்த உவமையும் முதல் உவமையை ஒத்ததே ஆனால் மாற்கு சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ள பயன்பாட்டைக் காட்டிலும் மாறுபட்டது.

- அந்த நேரத்தைக் குறித்து நீங்கள் அறியாததனால் விழித்திருந்து ஜெபம் செய்யுங்கள், எந்த நேரமும் அது நிகழலாம் அதனால் விழித்திருந்து ஜெபம் செய்யுங்கள் என்று இங்கே அவர்களுக்கு கட்டளையிட்டார்.
- எஜமானின் வருகைக்கு ஆயத்தமாய் இருங்கள், அது உங்களுக்கு தெரியாது, ஆனாலும் அவர் வரும் வரை 'வேலை செய்துகொண்டே இருங்கள்'! சோம்பேறிகளாக ஆகிவிடாதீர்கள்!

மத்தேயு சுவிசேஷத்திலிருந்து தாலந்துகளைக் குறித்து, தோல்வியினால் மனமுடிந்து போகக் கூடாது என்று கட்டளையிட்டார். ஒரு தாலந்து பெற்ற மனிதன் அதை இழந்து விடுவோமோ என்ற அச்சத்தில் அதை மறைத்து வைத்தான், ஆனால் இயேசு வேலை செய்து அதிகம் தயாரிக்க வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிட்டார்.

**மூன்று:** செம்மறியாட்டையும் வெள்ளாட்டையும் குறித்த உவமை – அந்த நாட்களில், வெள்ளாட்டிலிருந்து செம்மறியாட்டை வெளிப்புறமாக வேறுபடுத்துவது கடனம். அதனால், இயேசுவின் சீஷர்கள் தங்களுடைய அன்பையும் பாதுகாப்பையும் தேவையுள்ளவர்களுக்கு காட்டவும் தங்களுடைய தாலந்துகளை தேவனின் மகிமைக்காக பயன்படுத்தி வாழ வேண்டுமென்று இயேசு கூறினார்.

இந்த மூன்று உவமைகளில் இருந்தும் நாம் அடையாளம் காண்பதாவது,

- நாம் விழித்திருந்து ஜெபம் செய்ய வேண்டும்
- நாம் நீண்ட காத்திருப்புக்கு ஆயத்தமாய் இருக்க வேண்டும்
- நாம் வேலை செய்ய வேண்டும்
- நாம் நம் தாலந்துகளை தேவனின் மகிமைக்காக பயன்படுத்த வேண்டும்
- நம் வாழ்க்கை நல்ல கனிகளை தருவதாக இருக்க வேண்டும்
- நாழிகையையும், நேரத்தையும் குறித்து நமக்கு தெரியாது
- நியாயத்தீர்ப்பு என்பது நமக்கு என்ன கிடைக்கும் என்பதை தீர்மானிக்கும்.

நீண்ட சோர்வான நாளுக்கு பின்னர், அவர்கள் லாசருவின் வீட்டிற்கு வந்தனர், மேலும் நடக்கபோகிறவை தொடர்ந்து வெளிவர ஆரம்பித்தது.

# பாடம் 5 - பஸ்கா திருநாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்

| நிகழ்வு | மத்தேயு (Matthew) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| கொலை செய்ய நியாயசங்கம் செய்த சதி | 26:1–5 | 14:1–2 | 22:1–2 | | காலை |
| இயேசுவை அபிஷேகித்த மரியாள் | 26:6–13 | 14:3–9 | | 12:2–8 | |
| யூதாஸ் இயேசுவுக்கு துரோகம் செய்ய ஒப்புக்கொள்கிறார் | 26:14–16 | 14:10–11 | 22:3–6 | | மாலை |

*நேற்றைக்கு அவருடைய பொது ஊழியத்தை முடித்து, இயேசு தன் சீஷர்களின் மேல் தன்னுடைய கவனத்தை வைத்தார். இது ஒரு அமைதியான நாள், சாயங்காலம் சில மிக முக்கியமான பந்தியைத் தவிர பெரிதாக ஒன்னும் நடைபெறவில்லை. ஆனபோதிலும், இன்னும் இரண்டு நாட்களுக்குப் பிறகு நடக்க இருக்கும் உலகத்தையே மாற்றப்போகும் சம்பவத்திற்கு இது நல்லதொரு அடித்தளத்தை அமைத்தது.*

### கொலை செய்ய நியாயசங்கம் செய்த சதி

*மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய மூன்று சுவிசேஷங்களிலும் நியாயசங்கத்தைச் சேர்ந்தவர்கள் பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் அரண்மனையிலே கூடிவந்து, இயேசுவை தந்திரமாய் பிடித்து சிலுவையில் அறையும்படி ஆலோசனை பண்ணினார்கள். முன்தினம் இயேசு மத தலைவர்களை கடுமையாக கடிந்துகொண்டார் (பஸ்காவிற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்) – ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் என்பது போன்ற உவமைகளை கூறினார் – ஆகவே அவர்கள் இயேசுவின் மீது கடுங்கோபத்துடன் இருந்தனர். அதனால் அவரை அகற்றிவிட வேண்டும் என்று விரும்பினர். எனினும், பண்டிகை காலமாக இருப்பதால் ஜனங்கள் தங்களுக்கு எதிராகவே திரும்புவிடுவார்களோ என்றும் அஞ்சினார்கள். இதன் காரணமாகவே திருட்டுத்தனமாக அவரை கொலை செய்ய ஒரு வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்* (மத்தேயு 26:4).

### இயேசுவை அபிஷேகித்த மரியாள்

*யோவானின் சுவிசேஷத்தில் இந்த நிகழ்வு லாசரு உயிர்த்தெழுந்ததை மரியாதை செய்யும் விதமாக "பஸ்காவிற்கு ஆறு நாட்களுக்கு முன்பு" சம்பவித்ததாக குறிப்பிட்டுள்ளார்* (12*ஆம் அதிகாரம்*), *இது எப்பொழுது உண்மையாக நிகழ்ந்தது என்பதைக் குறித்ததான கூடுதலான குழப்பத்தை அது ஏற்ப்படுத்தியது. இந்த சம்பவங்களை அப்போஸ்தலனாகிய யோவான் ஒரு தொடர் வரிசையாக குறிப்பிடவில்லை. முதலில் நாம் அவர் ஏன் இந்த சுவிசேஷத்தை எழுதியதற்கான பதிவை இரண்டு இடங்களில் காண்பித்துள்ளார்:*

யோவான் 20:30–31

> *இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.*

யோவான் 21:25

> *இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென்.*

*அப்போஸ்தலனாகிய யோவான் இயேசு இந்த உலகத்தில் இருந்த பொழுது செய்த வெறும் ஏழு அற்புதங்களை மாத்திரமே தேர்வு செய்து தன்னுடைய முழு புத்தகத்தில் பதிவு செய்துள்ளார், இயேசுவை மேசியாவாகவும், தேவகுமாரனாகவும் அறிவித்த மிகவும் முக்கியமானவைகளை மட்டும் தேர்ந்தெடுத்தார் என்பது தெளிவாகுகிறது.*

> ***காட்சி - இடம்**: பெத்தானியாவிலுள்ள குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீடு*
>
> ***மக்கள்**: இயேசு, அவருடைய 12 சீஷர்களும் (யூதாஸ்காரியோத்து உட்பட), மற்றும் மிக உயர்ந்த தைலத்தை கொண்ட ஸ்திரீ (யோவான் இதை லாசருவின் சகோதரி மரியாள் எனவும் லூக்கா அதை மகதலேனா மரியாள் எனவும் பதிவு செய்துள்ளனர்)*

**நேரம்**: *மாலை, இராபோஜன நேரம்*

*ஸ்திரீ ஒருவள் விலையேறப்பெற்ற தைலத்தை இயேசுவின் சிரசின்மேலும்* (*மத்தேயு, மாற்கு*) *மற்றும் அவரின் பாதங்களிலும்* (*யோவான்*) *பூசினாள். இப்பொழுது அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது, அது மிகவும் விலை உயர்ந்த தைலம், அதனுடைய மதிப்பு கிட்டத்தட்ட ஒரு வருட ஊதியமாகும்.*

*குஷ்டரோகியாயிருந்த பரிசேயனாகிய சீமோன் ஒருமுறை இயேசு கலிலேயாவிலே செய்து கொண்டிருந்த ஊழியத்தின்போது குணமடைந்தான். அவன் ஒரு செல்வந்தன், வசதியான வீட்டில் வசிப்பவன், பெத்தானியாவிலும் யூதேயா பகுதிகளிலும் உள்ள மக்களிடம் மிகுந்த மரியாதைக்குரியனாய் இருந்தான். அவன் இயேசுவுக்கு மிகவும் நெருங்கியவனாக இருந்தான். அவன் "கீரியோத்" (*Kerioth*) என்ற கிராமத்திலிருந்து வந்தான், அந்த பகுதியிலிருந்து தான் யூதாஸ் மக்காபேயர் (*Judas Maccabeus*) தன்னுடைய வெற்றிகரமான தாக்குதலை எருசலேமின் மீது தொடுத்தான். அவன் அதை இயேசு பிறப்பதிற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சீரிய மன்னன் (*Syrian monarch*) அந்தியோகஸ்* IV *எப்பிபனேஸிடமிருந்து (*Antiochus IV Epiphanes*) கைப்பற்றினான்.*) *இப்படியாக இந்த குடும்பம் ஜெலட் இயக்கத்துடன் (*zealot movement*) உறவு கொண்டிருந்தது. யூதர்கள் இந்த இயக்கத்தை யூதேயாவில் அரசாளும் ரோமர்களை வீழ்த்தும் நோக்கத்தோடு*

*ஆரம்பித்தனர். எருசலேமில் வேதபாரகராக (scribe) இருந்த தன் கணவரை விட்டுவிட்ட மகதலேனா மரியாள் ஒரு ரோம அதிகாரியுடன் சேர்ந்து மகதலா (Magdala) என்ற நகரத்தில் இருந்தாள். அவள் வெறுமனே பணக்கார குடும்பத்தைச் சேர்ந்ததால் கல்லெறிந்து கொல்லப்படுவதிலிருந்து தப்பித்தாள்.*

*இயேசுவின் ஊழியத்தில் யூதாஸ் பொருளாளராக இருந்தான்; அவன் ஏற்கனவே செல்வந்தனாக இருந்தான் அதனால் அவனுக்கு அந்த 30 வெள்ளிக்காசுகள் தேவையற்றதாக இருந்தது. யூதாஸ் ஒரு ஆர்வமான ஜெலட் இயக்கத்தான். அவன் இயேசு ரோம ஆட்சியை கைப்பற்றி தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று எதிர்பார்த்தான். அனால் இப்பொழுதோ அவன் இயேசுவின் எண்ணம் தன்னுடைய எண்ணத்தைக் காட்டிலும் மாறுபட்டதாக இருப்பதை அறிந்து கோபமும் வருத்தமும் அடைந்தான். இயேசுவின் மீது அந்த விலை உயர்ந்த தைலத்தை ஊற்றிய பொழுது அவன் அதை தேவையில்லாமல் பணத்தை வீனடிப்பதாக கூறி தனது வெறுப்பை வெளிப்படுத்தினான். இந்த எண்ணெய் பூசுதல் இயேசுவின் மரணம் மற்றும் அடக்கத்தையும் சுட்டிக்காட்டுவதை அவனால் உணர முடியவில்லை. இயேசு அதற்கு பிரதியுத்தரமாக* ***இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின் மேல் ஊற்றினது என்னை அடக்கம்பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது. (மத்தேயு 26:12).*** *இது தன்னை அடக்கம் பண்ணுவதற்கான முன்னேற்பாடு என்று அவர் கூறினார். இயேசுவின் இந்த பதிலை யூதாஸ் தன் மீது கூறப்பட்ட குற்றமாக எடுத்துக்கொண்டான். இது பின்னர் அவனை துரோகம் செய்ய தூண்டியது.*

*நண்பனின் கண்டிப்பை சரியான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும்; இல்லையெனில், நம் வாழ்வில் இருக்கும் நண்பர்களுக்கு அர்த்தமில்லாமல் போய்விடும். பேதுருவுக்கும் யூதாசுக்கும் இருக்கும் வேறுபாடுகளை பாருங்கள். இயேசு பேதுருவை வெளியரங்கமாக "எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே" என்று கூறி கடிந்து கொண்டாலும், பேதுரு மீண்டும் இயேசுவிடம் திரும்பிவந்தான். ஆனால் யூதஸோ அந்த கண்டிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.*

*பெத்தானியாவில் உண்ட உணவுக்கும் பஸ்கா உணவுக்கும் இடையேயான மற்றொரு ஒத்த சம்பவங்கள் இங்கே உள்ளன – அவற்றின் முரண்பாடுகளும் மற்றும் ஒற்றுமைகளும்.*

*முதல் உணவானது பஸ்காவிற்கு இரண்டு நாள் முந்தியும் மற்றும் இரண்டாவது பஸ்காவிற்கு ஒரு நாள் முந்தியும் நடைபெற்றது. முதல் விருந்து லாசருவை மரணத்திலிருந்து எழுப்பினதற்காக கொண்டாடினார்கள், அதேசமயம் மேலறையில் நடந்த இரண்டாம் விருந்தை இயேசுவின் மரணத்தை நினைவுகூரும் வகையில் கொண்டாடினார்கள்.*

| பெத்தானியா | | மேல்வீட்டறை | |
|---|---|---|---|
| **வேதவாக்கியம்** | **காட்சி** | **வேதவாக்கியம்** | **காட்சி** |
| யோவான் 12:1 | அவருடைய சீஷர்களோடு | யோவான் 13:1 | அவருடைய சீஷர்களோடு |
| யோவான் 12:2 | மார்த்தாள் பணிவிடை செய்தாள் | யோவான் 13:4 | இயேசு வேலை செய்தார் |
| மத்தேயு 26:7 | தைலத்தை ஊற்றினாள். | யோவான் 13:5 | தண்ணீரை வார்த்தார் |
| யோவான் 12:3 | இயேசுவின் பாதங்களை கழுவினாள் | யோவான் 13:5 | இயேசு சீஷருடைய கால்களை கழுவினர் |
| யோவான் 12:3 | அவருடைய பாதங்களை துடைத்தாள் | யோவான் 13:5 | இயேசு சீஷருடைய பாதங்களை துடைத்தார் |
| யோவான் 12:4 | காட்டிக் கொடுக்கப்போகிறவன் | மத்தேயு 26:21 | காட்டிக் கொடுக்கப்போகிறவன் |
| யோவான் 12:7 | அடக்கம்பண்ணும் நாள் | மத்தேயு 26:28 | சிந்தப்படுகிற இரத்தம் |
| யோவான் 12:10 | லாசருவை கொலைசெய்ய ஆலோசனைபண்ணினார்கள் | யோவான் 11:53 | இயேசுவை கொலைச் செய்யும்படிக்கு ஆலோசனைபண்ணினார்கள் |
| மாற்கு 14:10 | யூதாஸ்காரியோத்து வெளியே போனான். | யோவான் 13:30 | யூதாஸ் புறப்பட்டுப்போனான் |
| யோவான் 12:11 | பலர் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தனர் | யோவான் 12:42 | அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் |

சுவாரஸ்யம்! பிரதான ஆட்சியாளர்கள் பலர் அவரை நம்பினாலும் அவர்கள் பரிசேயர்களை குறித்து பயந்தனர்.

## யூதாஸ் இயேசுவுக்கு துரோகம் செய்ய ஒப்புக்கொள்கிறார்

*யூதாஸ் மற்ற சீஷர்களோடும் இயேசுவோடும் இருக்க விருப்பம் இல்லாததை மேலே உள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள இந்த இரண்டு சம்பவங்களும் நமக்கு காண்பிக்கிறது. அதுமட்டும் அல்லாமல் அவன் நியாயசங்கத்தினரின் அரசாங்கத்தின் மேலும் மகிழ்ச்சி இல்லாதவனாய் இருந்தான். ஏனென்றால் அவர்கள் பிலாத்துவுடன் மிகவும் நெருக்கமாக இருந்தனர். பரிசேயரையும் சதுசேயயாரையும் எதிர்த்து இயேசு கடுமையான சொற்களால் கடிந்துகொண்டார். இயேசு பரிசேயர்களை கடிந்து கொள்ளும் பொழுது யூதாஸ் மிகவும் சந்தோஷமாக இருந்திருப்பான், ஆனால் இயேசு காசுக்காரர்களை தேவாலயத்தில் இருந்து விரட்டுவதை கண்ட பொழுது, அவனுக்கு இயேசுவின் உண்மையான எண்ணம் புரிந்திருக்கும். ஆனாலும் யூதாஸ் இந்த ரோம அரசாங்கத்தை மாற்ற ஏதாவது செய்ய நினைத்தான்.*

*மத்தேயுவும் மாற்கு சுவிசேஷமும் பெத்தானியாவில் அபிஷேகம் செய்த பிறகு, யூதாஸ் அவர்களை விட்டுவிட்டு பிரதான ஆசாரியரிடதுக்கு காட்டிக் கொடுக்குப்பதற்காக சென்றதை சுட்டிக்காட்டியுள்ளது. சில நூறு வருடங்களுக்கு முன்னர் தீர்கதரிசனம் உரைத்த சகரியாவின் புத்தகத்தில் 11ஆம் அதிகாரம்* 12–13 *வசனங்களில் கூறியதை உறுதி செய்வது போலவே, அவர்கள் பணத்தை நிர்ணயம் செய்தனர்.*

*சகரியா*: 11:12–13

> *உங்கள் பார்வைக்கு நன்றாய்க்கண்டால், என் கூலியைத் தாருங்கள்; இல்லாவிட்டால் இருக்கட்டும் என்று அவர்களோடே சொன்னேன்; அப்பொழுது எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள். கர்த்தர் என்னை நோக்கி: அதைக் குயவனிடத்தில் எறிந்துவிடு என்றார்; இதுவே நான் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு; நான் அந்த முப்பது வெள்ளிக்காசை எடுத்து அவைகளைக் குயவனுக்கென்று கர்த்தருடைய ஆலயத்திலே எறிந்துவிட்டேன்.*

## அகித்தோப்பேல்

*பழைய ஏற்பாட்டை பின் சென்று பார்க்கையில், இங்கு அகித்தோப்பேல் – தாவீதுக்கு ஒரு ஆலோசனைக்காரனாகவும் நல்ல தோழனாகவும் இருந்தான்.* (1 நாளாகமம் 27:33) – *அவன் மகத்தான ஞானம் உடையவன் போல பேசினான். அது தேவனுடைய வாக்கைப்போல இருந்தது.*

2 சாமுவேல் 16:23

> *தாவீது செய்தது போலவே, அப்சலோமும் அகித்தோப்பேலின் ஆலோசனையை பின்பற்றினான். அகித்தோப்பேல் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் தேவனின் வாயிலிருந்து நேரடியாக வருவதைப் போல் ஞானமாக இருந்தது.*

*அகித்தோப்பேல் தொடர்ந்து தாவீது பத்சேபாளுடன் விபச்சாரம் செய்யும்முன் வரை ஆலோசனை வழங்கி வந்தான். ஆனால் தாவீது பாத்சேபாளிடம் பாவம் செய்த பிறகு, தாவீதுக்கும் அஹித்தொப்பேலுக்கும் உள்ள உறவில் விரிசல் ஏற்பட்டது. ஏன் அது அப்படி நிகழ்ந்தது?*

அகித்தோப்பேலுக்கு பத்சேபாள் சம்பந்தப்பட்டவளாய் இருந்தாள்!

2 சாமுவேல் 11:3

> *அப்பொழுது தாவீது, அந்த ஸ்திரீ யார் என்று விசாரிக்க ஆள் அனுப்பினான்; அவள் எலியாமின் குமாரத்தியும், ஏத்தியனான உரியாவின் மனைவியுமாகிய பத்சேபாள் என்றார்கள்.*

2 சாமுவேல் 23:34

> *மாகாத்தியனின் குமாரனாகிய அகஸ்பாயிம் மகன் எலிப்பெலேத், கீலோனியனாகிய அகித்தோப்பேலின் குமாரன் எலியாம் என்பவன்.*

*எலியாம் அகித்தோப்பேலின் குமாரன். ஆகையால் பத்சேபா அகித்தோப்பேலின் பேத்தியாவள்.*

*உறவு முறிவை தொடர்ந்து, அகித்தோப்பேல் அப்சலோமுடன் இணைந்தான்! அதன் பின் என்ன ஆனது?*

2 சாமுவேல் 15:23–32

> *சகல ஜனங்களும் நடந்துபோகிறபோது, தேசத்தார் எல்லாரும் மகா சத்தமாய் அழுதார்கள்; ராஜா கீதரோன் ஆற்றைக் கடந்தான்; ஜனங்கள் எல்லாரும் வனாந்தரத்திற்குப் போகிற வழியே நடந்துபோனார்கள். சாதோக்கும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை அவனோடேகூட இருந்து சுமக்கிற சகல லேவியரும் வந்து, தேவனுடைய பெட்டியை அங்கே வைத்தார்கள்; ஜனங்கள் எல்லாரும் நகரத்திலிருந்து கடந்துதீருமட்டும், அபியத்தார் திரும்பிப்போயிருந்தான். ராஜா சாதோக்கை நோக்கி: தேவனுடைய பெட்டியை நகரத்திற்குத் திரும்பக் கொண்டுபோ; கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நான் அதையும் அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு, என்னைத்திரும்ப வரப்பண்ணுவார். அவர்: உன்மேல் எனக்குப் பிரியமில்லை என்பாராகில், இதோ, இங்கே இருக்கிறேன்; அவர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராக என்றான். பின்னும் ராஜா ஆசாரியனாகிய சாதோக்கை நோக்கி: நீ ஞானதிருஷ்டிக்காரன் அல்லவோ? நீ சமாதானத்தோடே நகரத்திற்குத் திரும்பு; உன் மகன் அகிமாசும் அபியத்தாரின் மகன் யோனத்தானுமாகிய உங்கள் குமாரர் இரண்டுபேரும் உங்களோடேகூடத் திரும்பிப் போகட்டும். எனக்கு அறிவிக்கிறதற்கு உங்களிடத்திலிருந்து செய்திவருமட்டும், நான் வனாந்தரத்தின் வெளிகளிலே தரித்திருப்பேன் என்றான். அப்படியே சாதோக்கும் அபியத்தாரும் தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குத் திரும்பக் கொண்டுபோய், அங்கே இருந்தார்கள். தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு ஒலிவமலையின்மேல் ஏறிப்போனான்; அவனோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறினார்கள். அப்சலோமோடே கட்டுப்பாடுபண்ணினவர்களுடன் அகித்தோப்பேலும் சேர்ந்திருக்கிறான் என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாவீது, கர்த்தாவே, அகித்தோப்பேலின்*

*ஆலோசனையைப் பயித்தியமாக்கிவிடுவீராக என்றான். தாவீது மலையின் உச்சிமட்டும்வந்து, அங்கே தேவனைப் பணிந்துகொண்டபோது, இதோ, அற்கியனாகிய ஊசாய் தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு, தலையின்மேல் புழுதியைப்போட்டுக்கொண்டவனாய் அவனுக்கு எதிர்ப்பட்டான்.*

2 சாமுவேல் 17:14

*அப்பொழுது அப்சலோமும் இஸ்ரவேல் மனுஷர் அனைவரும்: அகித்தோப்பேலின் ஆலோசனையைப்பார்க்கிலும் அற்கியனாகிய ஊசாயின் ஆலோசனை நல்லது என்றார்கள்; இப்படி கர்த்தர் அப்சலோமின்மேல் பொல்லாப்பை வரப்பண்ணும்பொருட்டு, அகித்தோப்பேலின் நல்லஆலோசனையை அபத்தமாக்குகிறதற்குக் கர்த்தர் கட்டளையிட்டார்.*

2 சாமுவேல் 17:23

*அகித்தோப்பேல் தன் யோசனையின்படி நடக்கவில்லை என்று கண்டபோது, தன் கழுதையின்மேல் சேணம் வைத்து ஏறி, தன் ஊரிலிருக்கிற தன் வீட்டுக்குப்போய், தன் வீட்டுக்காரியங்களை ஒழுங்குபடுத்தி, நான்றுகொண்டு செத்தான்; அவன் தகப்பன் கல்லறையில் அவனை அடக்கம்பண்ணினார்கள்.*

### அகித்தோப்பேலும் யூதாசும் – ஒரு ஒப்பீடு

- *அகித்தோப்பேல் தன்னுடைய ஆலோசனை நிராகரிக்கப்பட்டதால் அவன் தன்னையே தூக்கிலிட்டுக்கொண்டான், யூதாஸும் அதைப்போலவே செய்தான்.*

(2 சாமுவேல் 17:23 & மத்தேயு 27:5)

- *அகித்தோப்பேல் தன்னுடைய செய்கையை இரவிலே செயல்படுத்த திட்டம் தீட்டினான், யூதாஸும் அதைபோலவே செய்தான்.*

(2 சாமுவேல் 17:1 & யோவான் 13: 30)

- *யூதாஸ் இயேசுவுடன் இருந்தது போல அகித்தோப்பேலும் தாவீதின் ஒரு ஆலோசனைக்காரனாகவும் ஒரு தோழனாகவும் இருந்தான்*
- *ஒரு மனுஷனின் மரணமானது தேசத்துக்கே சமாதானத்தை கொடுக்கும் என்று கூறினார்கள்* (2 சாமுவேல் 17:3 & யோவான் 11:50)

**தாவீதும் இயேசு கிறிஸ்துவும் – ஒரு ஒப்பீடு**

***தாவீது*** ஒலிவமலையின்மேல் விடுதலைக்காக **ஜெபம்** செய்தார்: 2 சாமுவேல் 15:30–31 –

> *தாவீது தன் முகத்தை மூடி, வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு ஒலிவமலையின்மேல் ஏறிப்போனான்; அவனோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறினார்கள். அப்சலோமோடே கட்டுப்பாடுபண்ணினவர்களுடன் அகித்தோப்பேலும் சேர்ந்திருக்கிறான் என்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாவீது, கர்த்தாவே, அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்தியமாக்கிவிடுவீராக என்றான்.*

**இயேசு** ஒலிவமலைக்கு சென்று கீழ்படிதலுக்காக விண்ணப்பித்து **ஜெபம்** செய்தார் : மாற்கு 14:26 –

> *அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.*

***தாவீது*** சங்கீதம் 41:9இல் தன்னுடைய நண்பர்களுள் ஒருவன் தனக்கு துரோகம் செய்ததால் ***புலம்பினான்*** –

> *என் பிராணசிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.*

யோவான் 15:15இல் **இயேசு** *நண்பர்கள் என்று அழைக்கும் சீஷர்களில் ஒருவன் தன்னைக் காட்டிக்* கொடுப்பான் என்று ***கூறினார்***.

யோவான் 13:21 & 26

> *இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சாட்சியாகச் சொன்னார். இயேசு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்.*

***தாவீது*** கெதரோன் ஆற்றின் வழியாக **சென்றார்**: 2 சாமுவேல் 15:23 –

> *சகல ஜனங்களும் நடந்துபோகிறபோது, தேசத்தார் எல்லாரும் மகா சத்தமாய் அழுதார்கள்; ராஜா கீதரோன் ஆற்றைக் கடந்தான்; ஜனங்கள் எல்லாரும் வனாந்தரத்திற்குப் போகிற வழியே நடந்துபோனார்கள்.*

**இயேசு** கெதரோன் ஆற்றின் வழியாக **சென்றார்**: யோவான் 18:1 –

> *இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்.*

**தாவீது ஜெபித்தான்:** 2 சாமுவேல் 15:24–26 –

> *சாதோக்கும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை அவனோடேகூட இருந்து சுமக்கிற சகல லேவியரும் வந்து, தேவனுடைய பெட்டியை அங்கே வைத்தார்கள்; ஜனங்கள் எல்லாரும் நகரத்திலிருந்து கடந்துதீருமட்டும், அபியத்தார் திரும்பிப்போயிருந்தான். ராஜா சாதோக்கை நோக்கி: தேவனுடைய பெட்டியை நகரத்திற்குத் திரும்பக் கொண்டுபோ; கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நான் அதையும் அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு, என்னைத்திரும்ப வரப்பண்ணுவார். அவர்: உன்மேல் எனக்குப் பிரியமில்லை என்பாராகில், இதோ, இங்கே இருக்கிறேன்; அவர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராக என்றான்.*

**இயேசு ஜெபித்தார்:** லூக்கா 22:41–42 –

> *அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய், முழங்கால்படியிட்டு: பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிசெய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.*

*அந்த நாளின் நிகழ்வுகள் முடிந்த பின்னர் – மாலை பெத்தானியாவில் நடைப்பெற்ற விருந்தைத் தவிர அமைதியாகவே இருந்தது – இயேசு ஒரு இரவு முழுவதும் பெத்தானியாவில் தங்கினார். நாம் மீண்டும் நாளை சந்திப்போம்.*

# *பாடம் 6 - பஸ்கா திருநாளுக்கு முந்தய நாள்*

| நிகழ்வு | மத்தேயு (*Matthew*) | மாற்கு (Mark) | லூக்கா (*Luke*) | யோவான் (*John*) | நேரம் |
|---|---|---|---|---|---|
| பஸ்கா பண்டிகைக்கான உணவை தயார் செய்தல் | *26:17-20* | *14:12-17* | *22:7-14* | | காலை |
| சீடர்களின் விவாதம் | | | *22:24-30* | | |
| இயேசு தன் சீடர்களின் கால்களை கழுவினர் | | | | *13:1-20* | |
| காட்டிக் கொடுத்தவனை கண்டறிதல் (மேலறை) | *26:21-25* | *14:18-21* | *22:21-23* | *13:21-30* | மாலை |
| இறுதி இராப்போஜனம் | *26:26-29* | *14:22-25* | *22:15-20* | | |
| இயேசு விட்டுச்செல்கிறார் | | | | *13:31* | |
| புதிய கட்டளை | | | | *13:31-35* | |
| பேதுருவின் மறுதலிப்பு முன்னறிவிக்கிறார் | *26:31-35* | *14:27-31* | *22:31-38* | *13:36-38* | |
| மேலறையில் நடந்த சொற்பொழிவு | | | | *14-16* | |
| இயேசுவின் பிரதான ஆசாரிய பிரார்த்தனை | | | | *17* | |
| ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினர் (மேலறை) | *26:30* | *14:26* | | | |
| கெத்செமனேயில் கடும்துயர் | *26:36-46* | *14:32-42* | *22:40-46* | *18:1-2* | |
| யூதாஸின் துரோகம் | *26:47-50* | *14:43-45* | *22:47-48* | *18:2-9* | |
| கைது (கெத்செமனே) | *26:51-56* | *14:46-52* | *22:49-53* | *18:10-12* | |
| இயேசுவை கேள்வி கேட்ட அன்னா (நியாயசங்கம்) | | | *22:54,63-65* | *18:7,13.19-24* | |
| காய்பாவின் ஆய்வு (பிரதான ஆசாரியனின் வீடு) | *26:57-68* | *14:53-65* | | *18:14-18* | |
| பேதுரு இயேசுவை மறுதலித்தல் (*courtyard*) | *26:69-75* | *14:66-72* | *22:55-62* | *18:25-27* | |

*இந்த நாளின் பகல் பொழுதில் அதிகமாக ஒன்றும் நடக்கவில்லை ஆனால் மாலை மெய்யாகவே மும்முரமாகி விடுகிறது.*

***பஸ்கா பண்டிகைக்கான உணவை தயார் செய்தல்***

*மத்தேயு 26:17–20; மாற்கு 14:12–17 & லூக்கா 22:7–14*

*பஸ்கா பண்டிகையை எங்கே கொண்டாட வேண்டும் என்று சீஷர்கள் இயேசுவிடம் கேட்டனர். சீஷர்கள் இதை நடத்தும் முயற்சியில் ஆர்வமாய் இருந்தனர். பேதுரு மற்றும் யோவான் ஆகிய இருவரிடமும் இயேசு தான் கட்டளையிட்டபடியே அந்த இடத்தை ஆயத்தப்படுத்துமாறு அறிவித்தார். இது இயேசு கொண்டாடப்போகும் மூன்றாவது மற்றும் கடைசியான பஸ்காவாகும்.*

*மாற்கு* 14:13–14

> *அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி: நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள், அங்கே தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவன் பின்னே போங்கள். அவன் எந்த வீட்டிற்குள் பிரவேசிக்கிறானோ, அந்த வீட்டு எஜமானை நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார் என்று சொல்லுங்கள். அவன் கம்பளம் முதலானவைகளை விரித்து ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே நமக்காக ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார்.*

*இயேசுவினுடைய மேற்கூறிய பதில் ஆவிக்குரிய வரமான "அறிவை உணர்த்தும் வசனத்திற்கான" ஓர் அற்புதமான விளக்கம் ஆகும்* (1 *கொரிந்தியர்* 12:8). *இயேசு தன்னுடைய ஆவியின் மூலம் இந்த காரியங்களை அறிவார். அவருடைய அறிவை உணர்த்தும் வசனம் துல்லியமாக இருந்தது ஆச்சர்யமானதாகும். பலர் தண்ணீர் பானைகளை தூக்கிச்சென்றனர், அனால் அவர்கள் பெரும்பாலும் ஸ்த்திரீகளாகவே இருந்தனர். ஒரு புருஷன் தண்ணீர் பானையை தூக்கிச்செல்வது மிகவும் அரிதான ஒன்றாகும். புருஷன் நேரடியாக வீட்டினுள் நுழைய வேண்டும்; எதோ ஒரு வீட்டுக்குள் அல்ல ஆனால் பெரிய மேலறையை கொண்டதும் முன்னரே ஆயத்தம் செய்யப்பட்ட ஒரு வீட்டுக்குள் செல்ல வேண்டும். இது இயேசு தன்னுடைய இரண்டு சீஷர்களை எருசலேமுக்கு அனுப்பி கழுதையையும் கழுதைக்குட்டியையும் தன்னுடைய வெற்றிப்பிரவேசத்தின் போது சவாரி செய்ய வாங்கி வரச்செய்ததைப்போல ஒரு சம்பவம்.*

*இந்த கடைசி பஸ்கா பண்டிகையை இயேசு ஆசையோடும் ஆர்வத்தோடும் கொண்டாட எண்ணியதை லூக்கா* 22:15–16 *இல் வலியுறுத்தியுள்ளார்,*

> *அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,*

அவர் தன்னுடைய பணியை முடிக்க இன்னும் 24 மணி நேரமே இருந்தது, அந்த முடிவு கோட்டை நெருங்குவதினால் மிகுந்த மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் இருந்தார். தன்னுடைய நெருங்கிய வட்டத்துக்குள் இருந்து கொண்டாடுவதைக் காட்டிலும் வேறு எப்படி இதை சிறப்பாக கொண்டாட முடியும்? அவர் தனக்கு கிடைக்கக்கூடிய நேரத்தை மிகச்சிறந்த முறையில் தன் சீஷர்களுடன் உட்கார்ந்து பேச உபயோகித்தார் என்பதை யோவான் 14இல் இருந்து 16ஆம் அதிகாரம் வரை குறிப்பிட்டிருப்பதைதிலும் அதிகாரம் 17இல் ஜெபம் செய்வதிலும் காணலாம். அவர் தான் சென்றபின் அவர்களை இருளில் விட்டுவிடாமல் எல்லா வழியிலும் அவர்களை தேற்றி, ஆயத்தப்படுத்தி அதிகாரம் கொடுப்பதற்கு ஒரு "தேற்றரவாளனை" அனுப்புவதாக வாக்குறுதி கொடுத்தார். தான் மனிதனாக வந்ததன் நோக்கத்தை தெளிவாக விளக்க இந்த பஸ்காவை பயன்படுத்தினார்.

### இயேசு தன் சீடர்களின் கால்களை கழுவினர்

யோவான் 13:1–20

இயேசு தம்முடைய சீஷர்களை இறுதி மட்டும் நேசித்தார் – 'இறுதி' என்பதற்காக பயன்படுத்திய கிரேக்க வார்த்தை 'திலோஸ்' ('TELOS'), அதாவது "மிக உயர்ந்த அளவு" (the utmost degree of an act) (Vine's Expository Dictionary). இயேசு அவர்களுடைய கால்களை கழுவியபோது, அவருக்கு தான் தேவனிடம் இருந்து வந்தவர் என்றும் தேவனிடமே திரும்பி செல்லப்போவதும் முழுமையாகத் தெரியும். அப்படியிருந்தும் அவர் தம்முடைய அன்பையும் பணிவையும் வெளிப்படுத்தினர். நான் முன் கூறியது போலவே, வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள எந்த ஒரு வார்தையின் உண்மையான பொருளை அறிந்துகொள்ள வேண்டுமானால் நாம் இயேசுவின் வாழ்கையை பார்த்தாலே போதும். பணிவுக்கான ஓர் உன்னதமான விளக்கம்.

யூதாஸின் துரோகத்தை இயேசு முழுமையாக அறிந்திருந்தும் அவர் எந்த ஒரு பட்சபாதமில்லாமல் அவனுடைய பாதத்தையும் கழுவ தேர்வு செய்தார். உங்களுக்கு துரோகம் செய்யும் ஒருவனது பாதத்தை நீங்கள் கழுவதுபோல் உங்களால் எண்ணிப்பார்க்க முடிகிறதா? இயேசு தவறாக நடத்தியதால் யூதாஸ் காட்டிக்கொடுக்கவில்லை என்ற உண்மையை கோடிட்டு காட்டுகிறது. இயேசு அவன் மனதில் இருப்பதை அறிந்திருந்தும்கூட மற்ற சீஷர்களை எவ்வாறு நடத்தினாரோ அவ்வாறே அவனையும் நடத்தினார். தேவனின் முன்னறிவின்படி எல்லாம் தெரிந்திருந்தும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதிலிருந்து அவர் இடறவில்லை என்பதை காணலாம். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார் (மத்தேயு 5:45). இதனால் நியாயத்தீர்ப்புக்காக தேவனுக்கு முன்பாக நிற்கும் யாரும் போக்குச்சொல்ல இடமில்லை (ரோமர் 1:20).

இயேசு தண்ணீரை ஊற்றி சீஷர்களின் பாதங்களை கழுவுவது அவர் தன் வாழ்க்கை முழுவதும் எதைக் குறித்து பிரசங்கித்தாரோ அதற்கான மற்றுமொரு உதாரணம். மாற்கு 10:43–45, **உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.**

***அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார்."***

*இயேசு தன் கால்களை கழுவவிடாமல் பேதுரு மறுப்பதே இந்நிகழ்வின் மற்றும் ஒரு சுவாரசியமான விஷயமாகும். அதுவும் ஒருவகையில் சரியே ஏனெனில் அவன் அவரால் கழுவப்படுவதற்கு தகுதியற்றவன். ஆனால் தேவன் நமக்கு உதவி செய்வதும் ஊழியம் செய்வதும் நாம் யார் அல்லது நாம் என்னவாக இருக்கிறோம் என்பதை பொறுத்து அல்ல, அவருடைய அளவுகடந்த அன்பின் காரணத்தால் தான்* (ரோமர் 5:8 & 1 யோவான் 4:8)

*நாம் ஆதியாகமம்* 12:2*ஐ பார்ப்போம் – நான் உன்னை ஆசீர்வதிப்பேன் மேலும் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். இயேசுவுக்கு பணியாற்ற வேண்டும் என்று பேதுருவுக்கு விருப்பம் இருந்தது ஆனால் இயேசு தனக்கு பணியாற்றுவதை அவன் விரும்பவில்லை.* பேதுரு இயேசுவிடமிருந்து ஊழியத்தை பெறாவிட்டால் பேதுருவால் மற்றவர்களுக்கு பணியாற்ற முடியாது என்று இயேசு அவனிடம் *கூறினார். நம்மால் மற்றவர்களையோ நம்மையோ சுத்திகரிக்க முடியாது. நாம் நம்முடைய வாழ்வில்* தேவனின் கிருபையையே *முழுவதும் சார்ந்து இருக்க வேண்டும், அப்போதுதான் நாம் மற்றவர்களுக்கு பணியாற்ற பிரயோஜனமுள்ளவர்களாய்த் திகழ்வோம். மறுரூபமான மனிதனாலே தான் மற்றவர்களை மறுரூபமாக்க முடியும்*! Only a transformed person can transform others*! நாம் நம் விருப்பத்தின்படி தேவனுக்கும் மற்றவர்களுக்கும் ஆசிர்வாதமாய் இருப்பதற்கு முன்னால், நாம்* தேவனின் விருப்பத்திற்கு இனங்க *அவரே நமது ஆசிர்வாதமாக இருக்க ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

*இரண்டு வித்தியாசமான கிரேக்க வார்த்தைகள் "கழுவுதல்" (*"wash"*) மற்றும் "முழுகினவன்" (*"washed"*) யோவான்* 13:10*இல் பயன்படுத்தப்படுகின்றன – இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்." கழுவுதலுக்கு யோவான்* 13:5–6, 8 *வசனங்களில் பயன்படுத்திய வார்த்தையானது, "நிப்டோ" (*"NIPTO"*) மற்றும் இந்த கிரேக்க வார்த்தையையே புதிய ஏற்பாட்டில் உபயோகித்துள்ளனர். இதன் பொருள் கை அல்லது கால் போன்ற "உடலின் ஒரு பகுதியை கழுவுதல்" என்பதே ஆகும் (*Vine's Expository Dictionary) (*மத்தேயு* 15:2 *மற்றும் மாற்கு* 7:3). *10 ஆம் வசனத்தில் ஒரு வித்தியாசமான கிரேக்க வார்த்தையான "லோஓ" வை (*"LOUO"*) "கழுவி" என மொழிபெயர்துள்ளனர் மேலும் அது "குளிப்பதற்கு, உடலை சுத்தம் செய்வது" (*"to bathe, to wash the body"*)* (Vine's Expository Dictionary*) என்பதை குறிக்கிறது. இயேசு கழுவியதற்கான ஆவிக்குரிய அர்தத்தை இங்கே காணலாம். இயேசுவை நீங்கள் உங்களுடைய ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்ட பின்னர், நீங்கள் உங்களுடைய நித்திய மீட்பை பெற்றுக்கொண்டுவிட்டீர்கள். ஆனால் நீங்கள் இந்த உலகத்தில் அசுத்தம் ஆவதால் உங்களுடைய தேவை என்னவென்றால் வெளிப்படையான சுத்திகரிப்பே ஆகும். நம் ஆவி என்றென்றும் பரிசுத்தமாகவும், பரிபூரணமாகவும் உள்ளது ஆனாலும் நம் உடலும் ஆத்துமாவும் பாவத்தினால் தீட்டு படலாம் மற்றும் நம் உலக வாழ்விற்கு முழுமையான சுத்திகரிப்பு தேவை. இது பாவத்தை அறிக்கை செய்வதன் மூலமும் அதிலிருந்து திரும்புவது மூலமும் நடைபெறுகிறது* (1 யோவான் 1:9).

இந்த கால்களை கழுவுதலை இன்றும் பழக்கத்தில் கொண்ட சபைகளும் உண்டு, ஆனால் இயேசு இதை ஒரு உதாரணமாக செய்து காட்டினார். அந்நாளில் மக்கள் வெறும் காலில் அல்லது காலனி அணிந்து சேற்று பாதையில் நடந்தனர் அதனால் ஒரு வீட்டிற்குள் நுழையும்போது அடிமையை கொண்டோ அல்லது வேலைக்காரனைக் கொண்டோ கால்களை கழுவுவது வழக்கமாக இருந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே இதற்கான அவசியம் எதுவும் இப்பொழுது இல்லை.

***சீஷர்களின் கலகம்***

லூக்கா 22:24–30

சில மணித்துளிகளுக்கு முன்புதான் இயேசு தம் சீஷர்களுக்கு அன்பையும் பணிவையும் கற்றுக்கொடுத்தார். ஆனால் தாங்கள் கற்றுக்கொண்டதற்கு மாறாக அவர்கள் நடந்து கொண்டனர். நாம் உலக கிறிஸ்தவ ஐக்கியத்தில் (WCF) கூறுவது போல, "ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பின் மூலம் உலகம் அவர்கள் யார் என்பதை காணும்" யோவான் 13:35 என்னும் வாக்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆண்டவரின் கீழ் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக சீஷர்களாக இருந்த பின்னரும், இங்கு அவர்கள் நடந்துகொண்ட விதம் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. அவர்கள் கணக்கில்கொள்ள முடியாத அளவு பணிவைக் குறித்த பிரசங்கங்களை கேட்டுள்ளனர். மேலும் அந்த பாடங்கள் செயல்முறை வழியாக விளக்கமளிக்கப்பட்டதால் ஒன்றும் சொல்லவேண்டியதே இல்லை. ஆனாலும் இயேசுவின் ஊழியத்தின் அடிப்படை கோட்பாடுகளை அவர்கள் இங்கே மீறினார்கள். அவருடைய சீஷர்கள் ஆவியில் மந்தமானவர்கள் என்பதை அறிவதால், இது நமக்கு கடவுளை சேவிப்பதில் பெரிய ஆறுதலை அளிக்கிறது. நம் தேவன் நாம் யார் என்பதற்காக அல்ல நாம் யாராக இருந்தாலும் நம் மூலமாய் வேலை செய்கிறார் என்பதை இந்த நிகழ்வு வெளிகாட்டுகிறது. 1கொரிந்தியர் 1:26–29ல் தேவன் இந்த உலகத்தில் பைத்தியமானவைகளையும், பலவீனமானவைகளையும், இழிவானவைகளையும் சாத்தானின் வல்லமையை வெட்கப்பட்த்தும்படியும், அவமாக்கும்படியும் தேவன் தெரிந்துகொண்டார் என்று கூறுகிறது. இதிலிருந்து நாம் தைரியம் பெற்றுக்கொள்ளலாம். இயேசு அவரது சொந்த சீடர்களின் பலவீனங்களை முழுமையாக அறிந்திருந்தும், கவலைப்படவில்லை என்றால், நாமும் நம் சபைகளில் காணும் பிரச்சனையை குறித்து கவலை கொள்ள கூடாது. நாம் ஜெயிக்கப்போகிறோம்!

பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே என்ன செய்ய முடியும் என்பதற்கு இது ஒரு அருமையான உதாரணம். இயேசு அவரது மரணத்தை பற்றி பேசிய பிறகு அவர் மீது பரிதாபப்படுவதை விட்டுவிட்டு, இங்கே அவர்கள் தங்களுடைய சொந்த நலனைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தனர். இது அபோஸ்தலர் 2 இல் பெந்தகோஸ்தே நாளுக்கு பின்னர் அவர்கள் ஒரே நோக்கத்திற்காக ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக நின்றதற்கு முற்றிலும் மாறுபாடான ஒரு நிகழ்வு.

## காட்டிக்கொடுப்பவன் அடையாளம் காணப்பட்டான்

*மத்தேயு* 26:21–25; *மாற்கு* 14:18–21; *லூக்கா* 22:21–30 & *யோவான்* 13:21–30

*இயேசு துரோகியை அடையாளம் கண்டுகொண்டதாக நான்கு சுவிசேஷத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது – யூதாஸ். லூக்காவில் சாத்தான் அந்த வேளையில் அவனுக்குள் வந்ததை பதிவு செய்துள்ளது. லூக்கா* 22:3 – **அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர்கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்**. *சாத்தானே யூதாஸின் இருதயத்திற்குள் காட்டிக்கொடுக்கும் எண்ணத்தை விதைத்ததற்கான பொறுப்பு என்பது தெளிவாகுகிறது (யோவான்* 13:2). *இயேசுவைக் காட்டிக்கொடுக்குமாறு யூதாஸை தூண்டிய சாத்தானின் ஒரே நோக்கம், திருடுவது, கொல்லுவது மற்றும் அழிப்பதே என்பதை நாம் உறுதியாக நம்பலாம் (யோவான்* 10:10). *மேலும், சாத்தான் யூதாஸைக் பற்றிக்கொண்டாலும் யுதாஸின் துரோகத்துக்கு அது மன்னிப்பாகாது. பிசாசானவன் எவனை விழுங்கலாம் என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் (*1 *பேதுரு* 5:8). *அவன் வெறும் யாரையேனும் விழுங்க முடியாது, யார் அவனுக்கு ஒரு வாய்ப்பு தருகிறார்களோ அவர்களை தான் அவனால் விழுங்க முடியும். யூதாஸ் அவன் செய்திருந்த திருட்டு பாவத்தினால் சாத்தான் அவனை அணுக ஒரு திறந்த வாசலை கொடுத்திருந்தான் (யோவான்* 12:6). *அவன் இயேசுவை காட்டிக்கொடுக்கும் எண்ணம் ஏதும் இல்லாதவனாய் இருந்திருக்கலாம். எனவேதான் இயேசுவை கண்டிப்பதை பார்த்த போது "அவன் மனம்திரும்பினான்" (மத்தேயு* 27:3); *ஆனால் அவன் ஒருமுறை வேண்டுமென்றே பாவம் செய்ய தன்னை ஒப்புகொடுத்த பிறகு அதிலிருந்து திரும்ப வழியில்லை.*

*பாவத்தை அடக்கி வைக்க முடியாது. நாம் "ஒரு சிறிதளவு" பாவம் மட்டும் செய்ய முடியாது. பாவம் ஒரு புற்றுநோய் போன்றதாகும், அது நாம் மரிக்கும்வரை வளர்ந்து கொண்டே தான் இருக்கும். தேவனுக்குக் நம்மை ஒப்புவித்து பிசாசுக்கு எதிர்த்து நிற்பதே பிசாசினால் அழிக்கப்படாமல் இருப்பதற்கான ஒரே உத்தரவாதம் (யாக்கோபு* 4:7). *நாம் பாவம் செய்வதை தேர்வு செய்தால், நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதும் இல்லை பிசாசுக்கு எதிர்த்து நிற்பதும் இல்லை.*

## இறுதி இராப்போஜனம்

*மத்தேயு* 26:26–29; *மாற்கு* 14:22–25 & *லூக்கா* 22:15–20

*இயேசு சபைக்கு இரண்டு சடங்குகளை செய்யுமாறு கட்டளை அளித்திருந்தார்* – (*அ*) *ஞானஸ்நானம் (*baptism*) மற்றும்* (*ஆ*) *தேவ பந்தியில் பங்கேற்பது (*partaking of the Lord's Supper*). அதனாலே தான், நாம் உலக கிறிஸ்தவ ஐக்கியத்தில் (*World Christian Fellowship*), கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் எல்லா ஆராதனை கூடுகையிலும் தேவ பந்தியில் (*Lord's Supper*) கலந்துகொள்கிறோம்.*

*பஸ்கா போஜனமானது யூதர்கள் எகிப்தியர்களின் அடிமைத்தனத்திலுருந்து பெற்ற விடுதலைக்காக தேவனால் நிறுவப்பட்டது (யாத்திராகமம்* 13:3–10). *முதலாம் பஸ்கா நாளன்று இரவு, தேவன் எகிப்து தேசம் முழுவதுமாய் கடந்து சென்றார் மேலும் அவர் மனுஷர்களிலும் மிருகஜீவன்களிலும் பிறந்த மூத்தவர்களை கொன்று தன் நியாயத்தீர்ப்பை வழங்கினார் (யாத்திராகமம்* 11:5). *யூதர்கள் பழுதற்ற ஆட்டுக்குட்டியை அடித்து (யாத்திராகமம்* 12:5), *அதின் இரத்தத்தை எடுத்து, தங்கள்*

வீட்டுவாசல் நிலையின் மேற்சட்டத்தில் தெளித்து (யாத்திராகமம் 12:7), விடியற்காலம் வரைக்கும் இரத்தத்தால் மூடப்பட்டு வீட்டுகுள்ளேயே இருக்க வேண்டும் (யாத்திராகமம் 12:22). தேவன் நள்ளிரவில் நிலத்தின் ஊடாக கடந்து சென்ற போது, அவர் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை கதவுகளில் இட்டிருந்த வீட்டின் மேலாக கடந்து சென்றார் மேலும் யாருக்கும் எந்த ஒரு காயமும் ஏற்படவில்லை (யாத்திராகமம் 12:13). இதுவே இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் ஏற்படும் மீட்பிற்கான சரியான படம்.

நாம் எல்லோரும் பாவம் செய்ததனால் நியாயம் தீர்க்கப்பட தகுதியானவர்கள். (ரோமர் 3:23 மற்றும் 6:23). அப்படியிருந்தும் இயேசு நமக்காக தன்னையே ஒரு களங்கமற்ற தியாக ஆட்டுக்குட்டியாக ஒப்புக்கொடுத்தார் (யோவான் 1:29,36) அதுபோல அவருடைய இரத்தத்தினால் நம்மை மூடிக்கொள்வத்தின் மூலமும், அவரையே நம் வாழ்வின் ஆண்டவர் என அறிக்கையிடுவத்தின் மூலமும், நியாயத்தீர்ப்பு நாளன்று அவர் நமக்கு மேலாக கடந்து போவார் என்பதில் உறுதியாய் இருக்கலாம்!

யூத ஆண்டின் முதல் மாதம் பதினான்காம் நாள் அன்று இயேசுவை பலியிட்டனர் – அதே நாள் மற்றும் நேரத்தில் தான் பஸ்கா ஆட்டுக்குட்டியையும் கொல்வார்கள் (யோவான் 19:14–16). உண்மையில், “நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே” (1 கொரிந்தியர் 5:7). இயேசு இங்கு விளக்கியது போல் பஸ்காவின் ஆழமான ஆவிக்குரிய நோக்கம் இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் நிறைவேறும். இதற்கு எதிர்மறையாக, யூத தேசம் பஸ்காவின் ஆவிக்குரிய தீர்க்கதரிசன அர்த்தத்தை அறிந்துகொள்ளாமல் தவறவிட்டார்கள். இதனாலே கிறிஸ்தவ சபைகள் யூதர்களின் பஸ்கா பண்டிகையை கொண்டாடுவதில்லை ஆனால் அதற்கு பதிலாக இயேசு தன்னுடைய இறுதியான பஸ்கா விருந்தின் போது நிறுவிய தேவனின் போஜனபந்தி (Lord’s Supper) அல்லது ஐக்கியத்தை (Communion) கொண்டாடுகின்றனர்.

### புதிய கட்டளை

யோவான் 13:31–35

இயேசு எல்லா நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனமும் முதலில் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து பின்னர் உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதையே சார்ந்துள்ளது என கூறினார். (மத்தேயு 22:36–40). இந்த உண்மைகள் ஏற்கனவே நியாயப்பிரமாணங்களில் உள்ளன (லேவியராகமம் 19:18; உபாகமம் 6:4–5 மற்றும் 10:12), ஆனால் மக்கள் அதை அறியாமல் தவறவிட்டனர். அதனால், இந்த கற்பனை முன்னர் கொடுக்கபடாத புதிதான கற்பனை அல்ல ஆனாலும் இயேசுவின் உதாரணம் மூலம் இது முன்னாக கொண்டுவரப்பட்டு மேலும் ஒரு புது அர்த்தம் கொடுக்கப்பட்டது. தன்னை பிறர் நேசிப்பது போல் மாத்திரம் அல்ல அதைக்காட்டிலும் அதிகமாக இயேசு நேசித்தார்.

இந்த சுவிசேஷத்தை எழுதிய அதே அபோஸ்தலனாகிய யோவானே அன்பை குறித்த புதிய கற்பனையையும் இயேசு கிறிஸ்துவை தழுவி எழுதியுள்ளார் என்பதில் சந்தேகமில்லை, ஏனெனில்

அவர் இதை 1 யோவான் 2:7–8இல் – "**சகோதரரே, நான் உங்களுக்குப் புதிய கற்பனையை அல்ல, ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழைய கற்பனையையே எழுதுகிறேன் — ஒருவரை ஒருவர் நேசித்தல் — என்பது நீங்கள் முன்பு கேட்ட அதே செய்திதான். ஆனாலும் இது புதுசும் கூடத்தான். இயேசு இந்த கற்பனையின் உண்மையின் படியே வாழ்ந்தார், மேலும் நீங்களும் கூட இதன்படி வாழ்கிறீர்கள். இருள் மறைந்து வருகிறது, மேலும் உண்மையான ஒளி ஏற்கனவே பிரகாசிக்கிறது. அவர் மேலும் ஒருவரை ஒருவர் நேசிப்பதைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார்**" என்று எழுதியுள்ளார்.

மனுஷர்களுக்கு தன் வார்த்தையை கொண்டு இந்த வெளிப்பாட்டை அளித்தார், இது தேவனுக்கு புதிது அல்ல, ஆனால் இதை மனுஷர்களால் தெளிவாக பார்க்க முடியவில்லை ஏனென்றால் இருளானது அவர்களை தேவனிடம் இருந்து பிரித்து வைத்திருந்தது. இயேசுவின் வாழ்க்கையின் வெளிச்சத்தினால், இந்த இருள் அகற்றப்பட்டது, மேலும் இயேசுவின் உதாரணம் மூலமாய் அன்பைக் குறித்த பழைய கற்பனை புதிதாய் மாறியது. இந்த மாற்றத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

இந்த முழு அமைப்புக்கும் வசனம் 35 முக்கியமானது, நம் உலக கிறிஸ்தவ ஐக்கியத்தின் (WCF) பொன்மொழியும் அதுவே: நீங்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அன்பு இந்த உலகிற்கு நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்பதை மெய்பிக்கும்."

நம்முடைய கோட்பாடுகளினாலோ, நம்முடைய சடங்குகளினாலோ, பாவத்தின் மீது நாம் கொண்டிருக்கும் வெறுப்பினாலோ, ஆவிக்குரிய வரங்களை உபயோகிப்பதாலோ, கெட்ட ஆவிகளை துரத்துவதாலோ, அன்னிய பாஷையினால் பேசுவதாலோ, மலையையே அகற்றும் விசுவாசத்தினாலோ, நாம் தேவனிடம் நம் அன்பை வெளிகாட்டும் முறையை வைத்தோ நாம் அவருடைய சீஷர்கள் என்று உலகத்தார் அறிவார்கள் என்று இயேசு கூறவில்லை. அவர் தெளிவாகவே இருந்தார்: இந்த உலகுக்கு நாம் அவரை பின்பற்றுபவர்கள் என்று அடையாளம் காட்டும் ஒரே ஒரு பண்பு என்னவென்றால் நாம் ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் அன்பு தான். தேவனும் இயேசுவும் ஒன்றாக இருப்பது போல கர்த்தருடைய சரீரமும் ஒன்றாக இருப்பதற்கு ஒரே ஒரு வழி தான் உள்ளது அது தேவனின் அன்பின் மூலமே ஆகும். தேவனின் உண்மையான அன்பின் மூலமே விசுவாசிகளுக்குள் ஒற்றுமை வரும், அதுவே இயேசுவைப் பொறுத்தவரை சுவிசேஷம் கூறுவதற்காக சபை கொண்டதும் கொள்ளப்போவதுமான மிகப் பெரிய ஆயுதம் ஆகும். சாத்தானால் விசுவாசிகள் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டிருப்பதில் ஆச்சர்யம் ஏதும் இல்லை. விசுவாசிகள் வருடம் தோறும் நூறுகோடி பவுண்டுகளை சுவிசேஷத்தை தொலைக்காட்சி மற்றும் வானொலி வழியாகவும், மாநாடுகள் (conventions) மற்றும் சிலுவைப்போருக்காகவும் (crusade) செலவழிக்கின்றனர்; ஆனாலும், கிறிஸ்துவின் தேகம் அன்பினால் இணைக்கப் படாதலால் இந்த உலகம் நற்செய்திமயமாக்கப் (evangelize) படாமல் உள்ளது.

"அகாபே" ("AGAPE") மற்றும் "அகாபாவ்" ("AGAPAO") (பெயர்ச்சொல் மற்றும் வினைச்சொல் முறையே) ஆகிய கிரேக்க வார்த்தைகளையே தேவனைப் போன்ற அன்பை குறிப்பதற்காக புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தி உள்ளனர். தேவனைப் போன்ற அன்பை நாம் நம் வாழ்வில் பயிற்சி செய்ய வேண்டியதை 1 கொரிந்தியர் 13 மிக அழகாக விளக்கியுள்ளது:

- தேவனின் அன்பு சகிப்புத்தன்மை கொண்டது. சோர்வான சூழ்நிலைகளையும் நபர்களையும் பிறரின் எதிர்பார்ப்பை விட அதிகமாக நேசிக்க முயற்சிக்கும். தேவனின் அன்பு பொருமையானது.

- தேவனுடைய அன்பு இயல்பான நட்பிலும், தாராளத்திலும் விருந்தோம்பலிலும், அரவணைப்பதிலும் நன்மை செய்வதிலும் வெளிப்படும். தேவனுடைய அன்பு பிறரை புரிந்துகொண்டு அவர்களுக்கு உதவும், மற்றவர்களிடம் அனுதாபம் காட்டும். இது பரிவும், பொறுமையும், சகிப்புத்தன்மையும், மரியாதையும், சிந்திக்கவும், மற்றவர்களின் நலனை ஊக்குவிப்பதை மட்டுமே விரும்புவதுமாய் இருக்கும். அது தாராளமாகவும், பரந்த கொள்கையுடையதாகவும், பயனுள்ளதாகவும், கனிவான செயல்களின் மூலம் தன்னை விளக்குவதாகவும் இருக்கும்.

- தேவனின் அன்பு மற்றவர்களுடைய நன்மைகளை கண்டு அதன் மீது ஆசை கொள்ளாது. தேவனின் அன்பு பொறாமை அற்றது. பிறர் வைத்திருப்பதை கவர்ந்து கொள்ளும் எண்ணம் இல்லாதது.

- தேவனின் அன்பு பெருமை பாராட்டாது சுய துதி பாடாது. அதில் வீண் பெருமை இராது.

- தேவனின் அன்பு தான் உயர்ந்தவன் என்று எண்ணம் கொள்ளாது. பெருமையினால் உள்ளம் வீங்காது.

- தேவனின் அன்பு நீதியற்ற செயல்களை செய்யாது.

- தேவனின் அன்பு தன்னுடைய வழியை வேண்டி அடம்பிடிக்காது.

- தேவனின் அன்பை எளிதாக எரிச்சலூட்டவோ கோபத்தை தூண்டவோ முடியாது.

- தேவனின் அன்பு துரதிர்ஷ்டம், துன்பம், கஷ்டம் அல்லது அந்தவிதமாக அமைகவதோ அல்லது ஏற்படுவதோ எதனால் என்று அதற்கான காரணத்தைப் பற்றியோ அல்லது அதைக் குறித்து சிந்தித்து துக்கப்படாது. கடவுளுடைய அன்பு துன்மார்க்கத்தை சிந்திக்காது.

- நீதி, வாய்மை, நாணயம், நேர்மை நிலைநிருத்தப்ப்படும்போது தேவனின் அன்பு சந்தோஷப்படும்.

- கடவுளுடைய அன்பு எல்லா அழுத்தங்களையும் கஷ்டங்களையும் தாங்கி நடக்க வகை செய்கிறது. ஏனென்றால் தேவன் அன்பானவர், அவர் தன் மீது என்ன வைக்கப்பட்டிருந்தாலும் ஊக்கம் கொடுத்து தானே எடுத்துச் செல்கிறார். தேவனின் அன்பு மற்றவருடைய நன்மையை அச்சுறுத்தும் எதையும் செய்யாது. கடவுளின் அன்பு எல்லா சூழ்நிலைகளிலும் சகிப்புத்தன்மையோடும் பொறுமையாகவும் இறுக்கும்.

- தேவனின் அன்பு மற்றவர்களின் மீது நம்பிக்கை வைக்கும், அனைவரும் சிறந்ததை அடைய விரும்பும் (விமர்சிக்காமல் அல்லது தவறை தேடாமலும் இருக்கும்).

- தேவனின் அன்பு என்ன வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டதோ அதில் விடாப்பபடியான விசுவாசத்துடனும், எல்லா பிரச்சனைகளுக்கும் எதிராக நம்பிக்கையுடனும், வாக்குத்தத்தம் நிறைவேறும் என்ற எதிர்பார்ப்போடும் இருக்கும்.

- தேவனின் அன்பு ஒருவனுக்கு கஷ்டங்கள் இருந்தபோதிலும், தொடர்ந்து செல்ல தூண்டும்.

- தேவனின் அன்பு குறைவதில்லை தோற்பதில்லை. தேவனின் அன்பு எப்போதும் ஏமாற்றாது, நம்பகத்தைன்மையை இழக்காது. தேவனின் அன்பு என்றென்றும் நிலைத்திருக்கும் அதற்கு முடிவு கிடையாது.

### பேதுருவின் மறுதலித்தல் – முன்னறிவிப்பும் மறுதலித்தலும்

மத்தேயு 26:31–35; மாற்கு 14:22–25; லூக்கா 22:31–38 & யோவான் 13:36–38 மற்றும் மத்தேயு 26:69–75; மாற்கு 14:66–72; லூக்கா 22:55–62 & யோவான் 18:25–27

வெறும் பதினாறு சம்பவங்கள் மட்டுமே நான்கு சுவிசெஷ எழுத்தாளர்களும் எழுதிய சம்பவங்களாகும். அதில் **ஒன்பது** சம்பவங்கள் மட்டுமே சிலுவை காட்சிக்கு அப்பாற்பட்டு எழுதப்பட்ட ஒத்த நிகழ்வுகள் ஆகும். இதில் பேதுருவின் மறுதலிப்பை பற்றிய தீர்க்கதரிசனமும் ஒன்றாகும். தேவனே இந்த நிகழ்வை நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும் எழுத தூண்டினார் என்றால் அதில் எதோ சிறப்புமிக்க முக்கியத்துவம் இருக்க வேண்டும்.

தேவனில்லாமல் நாம் ஒன்றுமில்லை என்பதை வலியுறுத்தியிருக்க வேண்டும் (யோவான் 15:4–5). பேதுரு ஒருவேளை பன்னிரு அப்போஸ்தலர்களுள் தலை சிறந்தவனாக பின்னர் விளங்கினான். தேவனால் அவன் வல்லமையாக பயன்படுத்தப்பட்டான். ஆனால் பேதுருவிற்குள் இருந்தது தேவனே என்பதை நாமும் அவனும் மறப்பதை தேவன் விரும்பவில்லை (கலாத்தியர் 2:20); பேதுரு தானாக பெரியவன் இல்லை. இந்த சம்பவம் பேதுருவால் தானாக என்ன செய்ய முடியும் என்பதை விளக்குகிறது.

தகுதி பெற்ற யாரும் தேவனிடம் வேலை செய்யவில்லை என்பதையும் இந்த சம்பவம் காண்பிக்கிறது. பேதுரு தகுதிவாய்ந்தவன் அல்ல, நாமும் நம் சிறந்த திறமைகள் இருந்தாலும்கூட நாமும் தகுதியானவர்கள் அல்ல. நாம் ஒன்றமில்லாதவர்கள் என்பதையும் நம்மிடமும் ஒன்றும் இல்லை என்பதையும் உணர்ந்தால் நாமே தேவனால் பயன்படுத்தப்படும் பிரதான பாத்திரங்களாவோம் (1 கொரிந்தியர் 1:26–29). இயேசுவுக்கு ஒரு கழுதை தேவைப்பட்டது என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் அந்த கழுதையாக விரும்புகிறீர்களா?

நம்முடைய கிறிஸ்தவ பயணத்தில், மூன்று நிலைகள் உள்ளன, இதை நான் தனிப்பட்ட முறையில் தேவ மனிதற்களுடன் கலந்துரையாடிய ஆண்டுகளின் போது கற்றுக்கொண்டேன். நாம் தேவனையே முழுவதுமாக சார்ந்து இருத்தலில் துவங்கி, ஆம் நாம் தேவனை அறிந்து கொள்ளும் போது நாம் அவர்

மீது முற்றிலும் உறுதியாகவும் அவருடைய எல்லா வார்த்தைகளின் மீது நம்பிக்கை கொண்டவர்களாகவும், மேலும் எந்த ஒரு குறிப்பும் இல்லாமல் பிரசங்கித்த என்னுடைய முதல் பிரசங்கத்தில் தேவனும் அவருடைய ஞானமும் எனக்கு எவ்வளவாய் தேவைப்பட்டது என்பது எனக்கு இன்றும் ஞாயாபகம் உள்ளது.. சுதந்திரமே இரண்டாம் நிலையாகும். இது ஒரு காலகட்டத்திற்கு மேல் தேவனுடைய வார்த்தையை படித்தும் ஊழியம் செய்த பின்னரும் வரும். இதை நான் பல விசுவாசிகளிடையேயும் தேவ மனிதர்களிடையேயும் கூட கண்டதுண்டு. சில வேதவாக்கியங்களை அறிந்த பின் சில பிரசங்கங்களை கொடுத்த பின், அவர்கள் உடனே தான் சுதந்திரமாக செயல்படலாம் என நினைக்கிறார்கள். அவர்கள் தேவனை சார்ந்து இருப்பது **இல்லை**. ஆனால் அவருடைய நாமத்தை அவர்களுடைய ஊழியத்துக்காகவும் வாழ்க்கை தேவைகளை சந்திப்பதற்காக பயன்படுத்துகின்றனர் – மிகவும் ஆபத்தான ஒரு பாதையின் மீது நடக்கின்றனர். சார்ந்திருத்தல் மூன்றாம் நிலையாகும். அதாவது, நான் என்னுடைய வேலைக்காக அவரையே முழுவதுமாக சார்ந்து இருப்பதும் மேலும் தேவன் என்னை என்ன செய்ய சொல்கிறாரோ அதை செய்து முடிப்பதற்கு அவர் என்னையே சார்ந்து இருப்பதாகும். இதுவே ஒரு மனிதனை தேவன் வல்லமையாக பயன்படுத்துவதற்கான முதிர்ந்த நிலையாகும்.

பேதுருவைப் போல, நாமும் தேவனைக் காட்டிலும் நம் மீது நாம் மிகுந்த சுயநம்பிக்கை வைக்கிறோம். நம்மில் பலர் நீண்ட காலமாக பெரிய ஆளாகிவிட்டோம் என்று எண்ணிய சில காரியங்களில் தோல்வியடையும் போது அழிந்து விடுகிறோம். நாம் இந்த சாவுக்குரிய உடலில் இருக்கும் காலம் வரை நாம் நம் மாம்சத்தின் கிரியைகளுக்கு விரோதமாக யுத்தகளத்தில் யுத்தம்பண்ணும் போது உறங்க முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும் (கலாத்தியர் 5:19–21). நாம் அப்படி செய்தால், நம்முடைய மாம்சம் மற்றவர்களுடையது போலவே பாவம் செய்யும் திறனுள்ளவையாகி விடும்.

நாம் வீழ்ந்தால், அது நமக்கு ஆச்சர்யத்தை அல்ல கவலையை அளிக்க வேண்டும். நாம் பவுலுடன் சேர்ந்து "என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று" (ரோமர் 7:18) புரிந்து கொள்ள வேண்டும். ஒப்புக்கொண்டும் மன்னிப்பு கேட்டும் மீண்டும் ஆவிக்குள் வந்து இயேசுவுடன் செல்ல வேண்டும்.

பேதுரு எந்த ஒரு சுவிசேஷத்தையும் எழுதவில்லை ஆனால் நான்கு சுவிசேஷத்தை எழுதியவர்களுமே அவருடைய இந்த தோல்வி பற்றிய ஒவ்வொரு சிறிய விவரத்தையும் விடாமல் குறிப்பிட்டுள்ளனர் – இது எப்படி சாத்தியம்? இதற்கு ஒரே ஒரு வாய்ப்புதான் உள்ளது, பேதுருவே அனைவரிடமும் தனித்தனியாக சென்று இதை ஒப்புவித்திருக்க வேண்டும். தயங்காமல் தங்கள் பலவீனத்தை ஒப்புக்கொள்ளும் நேர்மையான மக்களையே தேவன் தேடுகிறார் என்பதை நான் முழுவதுமாக நம்புகிறேன் இதனால் இவர்கள் தேவனிடம் இருந்தே வலிமையை பெற்றுக்கொள்கின்றனர்.

பேதுரு தன்னுடைய நம்பிக்கையை இழக்கக்கூடாது என்று ஜெபம் செய்ததாக இயேசு கூறினார். இயேசுவே இன்று நம்முடைய பிரதான ஆசாரியன் மேலும் அவர் நமக்காக ஜெபம் செய்து வருகிறார் (எபிரெயர் 7:25); அவரே நம்முடைய நீதிபரராயிருக்கிறார் (1 யோவான் 2:1). ஒரு வேலைக்கார பெண்ணின் முன்னால் இயேசுவே கடவுள் என ஒப்புக்கொள்ள முடியாத பேதுரு இயேசு தன்னை மாற்றியமைத்த பெந்தகோஸ்தே நாளுக்கு பின்னர் மிகவும் வல்லமையை பிரசங்கித்தார்

(அப்போஸ்தலர் 2). அநேக நிருபங்களை எழுதிய அபோஸ்தலனாகிய பவுல், பேதுருவே சபையின் **தூண்** என்று கலாத்தியர் 2:9இல் கூறியுள்ளார்.

### மேலறையில் நடந்த சொற்பொழிவு

யோவானின் 14, 15, 16 அதிகாரம் மற்றும் யோவானின் 17ஆம் அதிகாரத்தில் உள்ள ஜெபம்

இதில் இயேசு தன்னுடைய சீஷர்களிடத்தில் ஆவியானவரின் ஊழியமாகிய – அவர் நம்மிலும் மற்றும் நாம் அவரிலும் நிலைத்திருப்பதின் முக்கியத்துவத்தை அறிவுறுத்தியதைத் தவிர இந்த பிரசங்கத்தை குறித்ததான எந்த ஒரு நியாயத்தையும் நான் செய்ய முடியாது.

### கெத்செமனேயில் கடும்துயர்

மத்தேயு 26:51–56; மாற்கு 14:46–52; லூக்கா 22:40–46 & யோவான் 18:1–2

"கெத்சமனே" ("GETHSEMANE") என்ற கிரேக்க வார்த்தைக்கு "எண்ணெய் ஆலை" ("oil-press") என்பது பொருள் (Strong's Concordance). இது ஒரு ஒலிவ தோட்டத்திலிருக்கும் ஒலிவ பழங்களில் இருந்து எண்ணெயை அழுத்தியோ பிழிந்தோ எடுக்கலாம் என்ற கருத்தை இந்த வார்த்தையின் அர்த்தம் தெரிவிக்கிறது.

இயேசுவின் இந்த மிகவும் அத்தியாவசியமான நேரத்தில் கூட அவருடன் சேர்ந்து சீஷர்களால் விழிப்புடன் இருந்து ஜெபம் செய்ய முடியவில்லை. மறுபடி பிறந்த கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நம்முடைய ரட்சிப்பின் போது ஒரு புதிய ஆவியை பெற்றுக்கொண்டோம் (2 கொரிந்தியர் 5:17) அது இயேசுவை போன்றது (1 யோவான் 4:17). ஏனென்றால் அது இயேசுவினுடைய ஆவி (ரோமர் 8:9 மற்றும் கலாத்தியர் 4:6). நம்முடைய ரட்சிப்பின் ஆவியானது எப்போதும் தேவனுடைய சித்தத்தை செய்ய விரும்புகிறது; நம்முடைய மாம்சத்தில் தான் பிரச்சனை உள்ளது. இயேசு இங்கே பயன்படுத்திய மாம்சமானது நம்முடைய உடலை மட்டுமல்ல ஆத்துமாவையும் குறிக்கிறது. நாம் வெற்றியின் பாதையில் நடக்க தேவையான யாவற்றையுமே தேவன் கொடுத்துவிட்டார், ஆனால் "இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:7). அதாவது, தேவன் நம்முடைய ஆவியில் கொடுத்த தம்முடைய எல்லா வல்லமையும் மகிமைம் நம்முடைய மாம்சத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. தேவன் பரிபூரணமாய் கொடுத்தாலும் நம்மால் வாழ முடியாது என்பது இதன் பொருள் அல்ல. நாம் நம்முடை மனதை புதிதாக்குகிறதினாலும் (ரோமர் 12:2) தேவனின் வார்த்தையின்படி நடப்பதினாலும் (யாக்கோபு 2:20), நம் உடலின் வழியாக தெய்வீகமான ஆற்றல் பொங்கி வழிவதை நம்மால் அனுபவிக்க முடிகிறது. எனினும், உடல் சக்தியை அதிகரிக்க தசைகளை பயன்படுத்துவது போல, நம்முடைய ஆத்துமாவையும் உடல் உறுப்புகளையும் தேவபக்திக்கேதுவாக பழக்குவிக்க வேண்டும் (1 தீமோத்தேயு 4:7–8).

ஜெபம் நம்மை தேவபக்திக்கேதுவாக பழக்குவிப்பதற்கான ஒரு முக்கிய வழியாகும், அதனாலேதான் இயேசு தன் சீஷர்களிடம் விழித்திருந்து அவருடன் ஜெபம் செய்யுமாறு எச்சரிக்கை செய்கிறார். அது

ஜெபத்தை பற்றிய மற்ற தவறான கருத்துக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. இந்த வசனங்களை தவறாக புரிந்துகொண்டும் மற்றும் தவறாக பயன்படுத்தியும் நிறைய சேதம் செய்யப்பட்டுள்ளது. நாம் இப்பொழுது கேட்பது போல "பிதாவே, உமக்குச் சித்தமானால்" என்று ஜெபிப்பதற்கு எந்த முன்னோடியையும் இயேசு அளிக்கவில்லை. இவ்வுலகுக்கான பாவநிவாரணபலியாக ஆவதே தன் பிதாவினுடைய சித்தம் என்று இயேசுவுக்கு தெரியும், இதற்கான சான்றாக அவரே தீர்க்கதரிசனமாக தன்னுடைய இறப்பையும் உயிர்த்தெழுதலையும் குறித்து பல முறை முன்னால் கூறியதை காணலாம். எனினும், அவருக்கும் தேவனுக்கும் உண்டான தனிப்பட்ட உறவினால், இயேசு தேவ சித்தத்தை வேறொரு வழியில் முடித்துவிடும்படி கேட்கிறார் ஆனால் அதே சமயத்தில் தன்னுடையதல்ல தன்னுடைய பிதாவின் சித்தத்தைச் செய்வதற்கான அவருடைய அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறார். தேவனுடைய சித்தத்தை அறியாமல் இல்லை, ஆகையால் பிதாவாகிய தேவன் தனக்கு சிறந்தது என்று கருதும் எதுவாக இருந்தாலும் அது நடக்கும் என்று நம்பிக்கையுடன் இருந்தார். அவர் ஜெபத்தை தொடங்கும் போதே தேவனின் சித்தம் என்ன என்று அவருக்கு தெரியும், மேலும் தேவனுடைய விருப்பத்தை வேறு எந்த வழியிலும் நிறைவேற்ற முடியாது என்றும் அவருடைய ஜெப முடிவில் அவருக்கு தெரியும். இது அவர் மத்தேயு 26:45–46 மற்றும் மாற்கு 14:41–42இல் உள்ள அறிக்கையின் மூலம் தெளிவாகுகிறது. சிலுவையில் தொங்கும் அந்த நேரத்தில் பிதாவாகிய தேவனோடு இருந்த அவருடைய உறவு முழுவதுமாக துண்டிக்கப்படும் என்ற எண்ணமே அவருடைய தாங்கிக்கொள்ள முடியாத துயரத்துக்கு காரணம் ஆகும். இயேசு பிதாவாகிய தேவனோடு இருந்த உறவை வேறு எதைகாட்டிலும் பொக்கிஷமாக கருதியதால் தான் அவருடைய வியர்வை இரத்தமாக வெளியேறியது.

தேவன் நமக்கு அளித்த வாக்குதத்ததுக்கு பதிலாக "பிதாவே, உமக்குச் சித்தமானால்" என்று நாம் ஜெபம் செய்தால் அது நம்பிக்கையின்மையே தவிற வேறொன்றும் இல்லை. அதற்கும் இயேசு கெத்செமனே தோட்டத்தில் செய்ததற்கு சிறிதளவு கூட சம்பந்தம் இல்லை. ஜெபத்திற்கான பதில் அளிக்கப்படுவதற்கு அடிப்படை கோட்பாடு என்னவென்றால் நாம் ஜெபம் செய்யும் போது நாம் அதை பெற்றுக்கொள்வோம் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும் (மாற்கு 11:24). நமக்கு அந்த சந்தர்ப்பத்தில் தேவனுடைய சித்தம் என்னவென்று தெரியாமல் இருந்தால் அந்த நிபந்தனையை நிறைவேற்ற எந்த ஒரு வழியும் இல்லை. "பிதாவே, உமக்குச் சித்தமானால்" என்று ஜெபம் செய்யும் போது நாம் உறுதியான விசுவாசத்திலிருந்து விலகி கால சூழ்நிலைகளுக்கு நம்முடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கிறோம்; அதனால் நம்மை செயலற்ற நிலைக்கு இந்த ஜெபம் தள்ளிவிடுகிறது.

நாம் ஒரு பகுதியில் வழிகாட்டுதலை தேடும் போது தேவன் தன்னுடைய வார்த்தையின் மூலமாய் தன்னுடைய சித்தத்தை ஏற்கனவே வெளிப்படுத்தாத நிலையில் பிறகு நாம் யாக்கோபு 1:5 இல் கூறியது போல ஞானத்துக்காக ஜெபம் செய்யவேண்டும். ஜெபம் செய்தால் அதை பெற்றுக்கொண்டோம் என விசுவாசிக்கவும் வேண்டும். பிறகு, அந்த அறிவைக்கொண்டு, நம்முடைய விசுவாசத்தினாலான ஜெபத்தை தொடரலாம். ஆனால் நாம் அறியாதவர்களாக இராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள் (எபேசியர் 5:17).

நாம் நம்மை தேவனுடைய சேவைக்கு ஒப்புக்கொடுக்கும் போது, அது எங்கே அல்லது என்ன என்று பொருட்படுத்தாமல் “பிதாவே, உமக்குச் சித்தமானால்” என்று ஜெபம் செய்வது சரியான முறையாகும்.

### யூதாசின் துரோகம்

மத்தேயு 26:47–50; மாற்கு 14:43–45; லூக்கா 22:47–86 & யோவான் 18:2–9

இயேசு ஏற்கனவே யூதாஸ் தான் தம்மை காட்டிக்கொடுப்பான் என்று தம்முடைய சீஷர்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தார். மேலும் இயேசு தனக்கு நடக்கவிருக்கும் அனைத்தையும் அறிந்திருந்தார். எனவே, யூதாஸ் என்ன செய்கிறான் என்பதை எந்தவித சந்தேகமும் இல்லாமல் அவர் சரியாக அறிந்திருந்தார். ஆயினும், இயேசு யூதாசை “நண்பன்” என்று சொல்லி வரவேற்றார். யூதாஸ் இயேசுவை நிராகரிக்கும் வரை அவர் அவனை ஒருபோதும் நிராகரிக்கவில்லை (2 தீமோத்தேயு 2:12–13).

600க்கும் மேலான மனிதர்கள் இயேசுவை கைது செய்ய வந்ததாக சுவாரசியமான குறிப்பு ஒன்றை யோவான் தனது சுவிசேஷத்தில் குறிப்பிட்டுள்ளதை காணலாம். யோவான் 18:6,8இல் இயேசு “**நானே அவர்**” என்று அவர்களிடத்தில் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டு விழுந்தார்கள். “**அவர்**” என்ற எழுத்து இடாலிக்ஸில் (italic) சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அப்படியென்றால் “**அவர்**” என்ற வார்த்தை அசல் உரையில் இல்லை ஆனாலும் வாக்கியத்தில் இலக்கணப் பிழை இல்லாமல் இருப்பதற்காக மொழிபெயர்ப்பாளர்கள் சேர்த்துக்கொண்டனர். இது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மிகவும் பயனுள்ளது. எனினும், இந்த உரையில் உண்மையில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதை நாம் அறிந்துகொள்வதற்காக மொழிபெயர்ப்பாளர்கள் இந்த சேர்க்கையை இடாலிக்சில் (italic) சுட்டிக்காட்டியுள்ளனர். இத்தருணத்தில், இயேசு உண்மையில் “நான் (I am)” என்றுதான் கூறினார் ஏனெனில் இயேசு மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவன். மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவன் தனது உயிரை எடுக்க வரும் எவ்வளவு பெரிய இராணுவத்திற்கும் எதிராக மிகவும் எளிதில் தன்னை பாதுகாத்திருக்க முடியும் என்பதை இது விளக்குகிறது - யோவான் 10:18இல் கூறியது போல “ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான் [அதாவது தன் உயிரை]; நானே அதைக் கொடுக்கிறேன்.”

யூதாஸ் ஒரு முத்தத்தினால் அவரைக் காட்டிக்கொடுத்தான்! நண்பனின் துரோகத்தை, அகித்தோப்பேலயும் யூதசையும் ஒப்பிட்டு நாம் இதை நேற்றைய தினத்தில் கண்டோம். இயேசுவை அவர்கள் கைது செய்தபோது, தனது சீஷர்களை சுதந்திரமாய் போக விடுமாறு அவர் வேண்டிக்கொண்டார். இயேசுவின் இந்த மிகுதியான தேவையிலும் கூட, அவர் தன்னைக்காட்டிலும் மற்றவர்களையே அதிகமாக நினைக்கிறார் (பிலிப்பியர் 2:5).

**கைது**

*மத்தேயு* 26:51–56; *மாற்கு* 14:46–52; *லூக்கா* 22:49–53 & *யோவான்* 18:10–12

*அவர்கள் இயேசுவை கைது செய்து கொண்டிருந்த நேரத்தில், பேதுரு தன் பட்டயத்தை எடுத்தான். அப்போஸ்தலனாகிய யோவானே பேதுரு தான் அந்த வேலைக்காரனுடைய காதை அருத்தான் என வெளிபடுத்தி அந்த வேலைக்காரனின் பெயரையும் குறிப்பட்டுள்ளார். பேதுரு அந்த மல்குசின் காதை குறி வைத்தான் என்பது கூட சந்தேகம் தான். அவன் அதை வெறும் தோராயமாக வீசியபோது அவன் காதை அறுத்திருப்பதற்கு சாத்தியம் உண்டு.*

*தேவனை ஒருபோதும் தான் மறுதலிப்பதில்லை என்று பேதுரு அதிகமாய் குரல் கொடுத்துக் கொண்டிருந்தான், அவன் கூறியதன் பொருளை அவனுடைய இந்த செயல் இங்கு மெய்பித்து காட்டியது. சீஷர்களிடம் வெறும் இரண்டு பட்டயங்களே இருந்தன (லூக்கா* 22:38*); ஆனாலும், பேதுரு இந்த 600 வீரர்களையும் மேற்கொள்ள சித்தமாயிருந்தான். இதற்கு மரணமோ அல்லது குறைந்தபட்சம் சிறைவாசமாவது கிடைத்திருக்கும்.*

*பேதுருவுக்கு தேவனோடு நிற்க வேண்டும் என்று விருப்பம், ஆனால் அவன் ஆவியில் தயாராகவில்லை. அவன் அவனுடைய திறமையில் மாத்திரமே வலிமையானவனாகவே இருந்தான். போரானது உலகுக்கு உரியதாக இருந்திருந்தால், பேதுரு இங்கு மெய்பித்தது போலவே, தான் சாகும் வரை சண்டை போட்டிருப்பான். ஆனால் இயேசு பேதுருவிடம் தனது மாம்ச சக்தியை கொண்டு தடுக்காமல், தன் பட்டயத்தை போடுமாறு கேட்டபோது, பேதுரு குழம்பிப்போனான். பேதுருவுக்கு தன் மாம்சத்தின் மீது எவ்வாறு சார்ந்து இருக்க வேண்டும் என்பதே தெரியும். இயேசு பேதுருவை பட்டயத்தினால் சண்டையிட அனுமதிக்காததால், அவன் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தான். அவன் இயேசு அறிவுறுத்தியபடி, அவரோடு ஜெபம் செய்திருந்தால், அவன் ஆவியில் கட்டப்பட்டு மேலும் இயேசுவோடு ஆவியில் நின்று அவரை மறுதலிக்காமல் இருந்திருப்பான். சகரியா தீர்க்கதரிசி உரைத்தபடியே, "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (சகரியா* 4:6).

*நாம் எப்போதும் தேவனை மறுதலிக்கக் கூடாதென்று உண்மையாக விரும்புவோம், ஆனால் நம் விருப்பத்தைக் காட்டிலும் மேலாக தேவைபடும், அதற்கு தயார் செய்ய வேண்டும். நாம் எல்லோருக்கும் எவ்வாறு நாம் நம்மையே சார்ந்து இருக்க வேண்டும் என்று கற்று கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் நாம் கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் எவ்வாறு பலப்பட வேண்டும் என்று கற்றுக்கொள்ள வேண்டும் (எபேசியர்* 6:10).

## இயேசுவை கேள்வி கேட்ட அன்னா

*லூக்கா* 22:54,63–65 & *யோவான்* 18:7,13,19–24

*இயேசுவை கைது செய்த பின்பு, அவரை அதே இரவில் பிரதான ஆசாரியனாகிய காய்பாவிடம் அழைத்துச் செல்லாமல் மாறாக அன்னாவிடம் முதலில் அழைத்து வந்தனர்; சுவாரஸ்யமாக, அந்த*

நேரத்தில் முழு நியாயசங்கத்தைச் சேர்ந்தவர்களும் விசாரணையை நடத்த காத்திருந்தனர். யார் இந்த அன்னா? ஏன் அவர் இயேசுவை கேள்வி கேட்டார்?

அன்னா, பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் மாமனார். அவர் காய்பாவின் உறவினன் ஆனதால் இயேசுவை கேள்வி கேட்டார், சட்டப்பூர்வமாக எந்த ஒரு பிணைப்பும் இல்லை.

### இயேசுவை கேள்வி கேட்ட பிரதான ஆசாரியர்

மத்தேயு 26:57–68; மாற்கு 14:53–65 & யோவான் 18:14–18

அவர்கள் இயேசுவை அன்னாவின் இடத்திலிருந்து ஏரோதுக்கு அடுத்தபடியாக இருந்த பிரதான ஆசாரியனின் இடத்திற்கு அழைத்து வந்தனர். அங்கு அவர்கள் அவருடைய படை எவ்வளவு பெரிதாக இருக்கும் என்று தீர்மானிப்பதற்கு அவருடைய சீஷர்களைக் குறித்து கேள்வி கேட்டனர். இரண்டாவதாக அவரை குற்றம் சாட்டுவதற்காக அவருடைய இறையியல் குறித்து விசாரணை செய்தனர்.

தனிப்பட்ட முறையில், என்னை எது இறுகப்பற்றியது என்றால் லூக்கா 22:64 இல் – அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து: உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால் சொல் என்று அவரைக்கேட்டதுமன்றி” என்று பதிவு செய்யப்பட்டுள்ளவையே.

இதற்கு முன்பு பல சந்தர்ப்பங்களில் இயேசு அதற்கு முன் சந்ததிக்காத மக்களையும் பெயர் சொல்லி அழைக்க முடிந்தது (லூக்கா 19:5), மக்கள் தாங்கள் செய்தவற்றை அவர்களுக்கு கூறியுள்ளார் (யோவான் 1:48 மற்றும் 4:18), மக்களின் எண்ணம் என்ன என்பதை அறிந்திருந்தார் (லூக்கா 7:39–40), மேலும் அவர் அறிய வேண்டும் என்று அக்கறைபட்ட வேறு எதுவாயினும் அதனை கற்றார். கொலோசெய நிருப்பம் 1:16–17 கூறுவதாவது – ***ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது***.

இயேசு தன் வாயை திறவாமல் இருந்தார். என்ன மனத்தாழ்மை என்று பாருங்கள்!

ஏசாயா “தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும்” என்று தீர்க்கதரிசனம் உரைத்தபடி, இயேசு தம்முடைய வாயைத் திறவாதிருந்தார் (ஏசாயா 53:7). இயேசு “இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்” (ஏசாயா 53:8) என்றும் ஏசாயா குறிப்பிட்டார், அவருக்கு நியாயமான விசாரணை ஒன்றும் அளிக்கப்படவில்லை என்ற உண்மையை குறிப்பிட்டுள்ளார். மேலும் ஏசாயா தீர்க்கதரிசனமாய் ஏசாயா 53:9 இல் “துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்.” என்றும் இயேசுவை குறித்து உரைத்தார். இதுவும் கூட இயேசு

சிலுவையில் இரண்டு கள்ளர்கள் மத்தியில் அறையப்பட்ட போதும் ஒரு செல்வந்தனுடைய கல்லறையில் புதைக்கப்பட்டாபோதும் நிறைவேறியது.

**தீர்மானம்**

இயேசுவுக்கு உணவும் உறக்கமும் இல்லாத ஒரு நீண்ட மற்றும் தனிமையான இரவு! அவர் அதிகாலை வரையிலான விசாரணைக்காக பிரதான ஆசாரியனுடைய வீட்டில் பிடித்து வைக்கப்பட்டார்.

வாருங்கள், நாம் இன்று இரவு உணவை பகிர்ந்து கொண்டு இயேசுவே நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டி என்பதை நினைவில் கொள்வோம்!!

# பாடம் 7 - பஸ்கா திருநாள்

| **நிகழ்வு** | **மத்தேயு** (Matthew ) | **மாற்கு** (Mark) | **லுக்கா** (Luke) | **யோவான்** (John) | **நேரம்** |
|---|---|---|---|---|---|
| விசாரணை | *27:1-2* | *15:1* | *22:66-71* | | |
| யூதாஸின் மரணம் | *27:3-10* | | | | நேரத்தையும் பொழுதையும் குறித்த உறுதியான தகவல் இல்லை |
| பிலாத்துவின் முன்னிலையில் விசாரணை | *27:3-10* | | | | அதிகாலை |
| ஏரோதின் முன் | | | *23:6-12* | | காலை |
| பிலாத்துவின் முன்னிலையிலான இரண்டாம் கட்ட விசாரணை | *27:15-23* | *15:6-14* | *23:13-23* | *18:39-40* | காலை |
| பரபாசின் விடுதலை | *27:26-30* | *15:15-19* | *23:25* | *19:1-3* | |
| இயேசுவைக் குறித்த பிலாத்துவின் தீர்ப்பு | *27:24-25* | *15:20-23, 27-28* | *23:24* | *19:4-16* | காலை |
| கபாலஸ்தலத்துக்கு *(Calvary)* செல்லும் வழி | *27:31-34* | | *23:26-33* | *19:16-18* | நண்பகல் *(noon)* |
| சிலுவையில் இருந்தபோதுள்ள முதல் வாக்கியம் | | | *23:34* | | |
| போர்ச்சேவகர்கள் அவருடைய ஆடையை பங்கிட்டனர் | *27:35-36* | *15:24* | *23:34* | *19:23-24* | |
| சிலுவையில் இருந்தபோதுள்ள இரண்டாம் வாக்கியம் | | | *23:39-43* | | |
| மூன்றாம் வாக்கியம் | | | | *19:25-27* | |
| பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று. | *27:45* | *15:33* | *26:44-45* | | |

| நிகழ்வு | மத்தேயு (Matthew ) | மாற்கு (Mark) | லுக்கா (Luke) | யோவான் (John) | நேரம் |
|---|---|---|---|---|---|
| நான்காம் வாக்கியம் | *27:46-47* | *15:34-35* | | | |
| ஐந்தாம் வாக்கியம் | *27:48-49* | *15:36* | | *19:28-29* | |
| ஆறாம் வாக்கியம் | | | | *19:30* | |
| ஏழாம் வாக்கியம் மற்றும் மரணம் | *27:50* | *15:37* | *23:46* | *19:30* | மதியம் *3:00* மணி |
| நூற்றுக்கு அதிபதியின் சாட்சி | *27:51-56* | *15:38-41* | *23:45, 47-49* | | |
| அவருடைய விலாவில் குத்தப்பட்டது | *27:57-61* | *15:42-47* | *23:50-56* | *19:31-37* | |
| அடக்கம் | | | | *19:38-42* | மாலை ஆறு மணிக்கு முன்னர் |

### *முறையான விசாரணை – அதிகாலை 6 மணி*

மத்தேயு 27:1–2; மாற்கு 15:1; லூக்கா 22:66–71 & யோவான் 18:33–38

*இயேசு கட்டி வைக்கப்பட்டார்? இது விசித்திரமானது என்று நீங்கள் நினைக்கவில்லையா? அவர்களால் கெத்செமனே தோட்டத்துக்கு சென்று அவரை கைது செய்ய முடியவில்லை. எந்த ஒரு எதிர்ப்பும் இல்லாமல் அவர்களிடம் தன்னை ஒப்புவித்தார் மேலும் அவரை பிடிக்கும் போது தன் சீஷர்கள் சண்டையிடுவதை தடை செய்தார். இயேசு தப்பிக்க எண்ணியிருந்தால், அவர்கள் என்ன தான் அவரை பிணைத்திருந்தாலும் அவர்களால் அவரை கட்டுப்படுத்தி இருக்க முடியாது.*

### *பிலாத்துவின் முன்னிலையில் விசாரணை – ஏறத்தாழ காலை 7 மணி*

மத்தேயு 27:3–10; யோவான் 13:33–38

*பிலாத்துவின் முதல் கேள்விக்கான இயேசுவின் பதில், "நீர் சொல்லுகிறபடிதான்." என்று மாத்திரம் மத்தேயு, மாற்கு, மற்றும் லூக்காவில் பதிவு செயயப்பட்டுள்ளது. ஆனால் பிலாத்துவுக்கும் இயேசுவுக்கும் இடையில் உரையாடல் நடந்தது. அதை யோவான் வெளிப்படுத்தியுள்ளார்.*

யோவான் 18:33–38,

> *அப்பொழுது பிலாத்து மறுபடியும் அரமனைக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்து: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ என்றார். பிலாத்து*

> *பிரதியுத்தரமாக: நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய் என்றான். இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார். அதற்குப் பிலாத்து: சத்தியமாவது என்ன என்றான். மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்து: நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்.*

*பிலாத்து இயேசுவிடம் எந்த ஒரு பிழையையும் கண்டுபிடிக்கவில்லை. இயேசு கலிலேயாவை சேர்ந்தவர் என்று அவர் அறிந்தவுடனே, அது ஏரோது அண்டிபாஸ் (*Herod Antipas*) அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளபடியால், அவர் அந்த சமயத்தில் எருசுலேமில் இருந்த ஏரோதிடம் இயேசுவை அனுபினார்.*

### *ஏரோதின் முன் விசாரணை*

*லூக்கா* 23:6–12

*இயேசு ஏரோது அண்டிபாசுக்கு (*Herod Antipas*) முன் கொண்டுவரப்பட்டார். யோவான் ஸ்நானகனை காவலில் வைத்து தலையை துண்டித்தது இந்த ஏரோது தான். இயேசுவின் ஊழியத்தை குறித்து ஏரோது அண்டிபாஸ் (*Herod Antipas*) கேட்டபோது, இயேசுவை மரணத்தில் இருந்து எழுந்த யோவான் ஸ்நானகன் என்று நம்பினான். அவர் இயேசுவைக் குறித்தும் அவர் செய்த அற்புதங்களைக் குறித்தும் கேட்டிருந்தபடியால் இயேசுவை காண ஆர்வமாக இருந்ததாக வேதவாக்கியம் கூறுகிறது. எனவே சில அற்புதங்களை பார்க்கவும் ஆர்வமுடன் இருந்தான்.*

*ஆனால் இயேசுவோ தமது பணிவை அவனுக்கு காண்பித்தார்; தன்னை தண்டனையிலிருந்து காப்பாற்றிக்கொள்ளவும் மறுத்தார். மட்டுமல்லாமல், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளுள் சிறந்தவர் என்று தாமே சாட்சி கொடுத்த யோவான் ஸ்நானகனை, தனது நண்பரை எந்த முகாந்திரமும் இல்லாமல் கொலைசெய்த இந்த மனிதன் மீது தனது கோபத்தை காண்பிக்காமல் தவிர்த்தார். அதனால் ஏரோது இயேசுவுடன் பேசுவதில் எந்த ஒரு அர்தமும் இல்லை என்று அறிந்து அவரை மீண்டும் பிலாத்துவிடமே அனுப்பினான். இங்கே கவனிக்க தக்க மற்றொரு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால் இந்த சம்பவத்திற்கு முன் ஒத்துப்போகாத பிலாத்துவும் ஏரோதும் இதற்கு பின் நண்பர்களானார்கள்.*

*லூக்கா* 23:12

> *முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்துவும் ஏரோதும் அன்றையத்தினம் சிநேகிதரானார்கள்.*

### *பிலாத்துவின் முன்னிலையில் இரண்டாம் முறை - ஏறத்தாழ காலை 9 மணி*

*மத்தேயு 27:15–23; மாற்கு 15:6–14; லூக்கா 23:13–23 & யோவான் 18:39–40*

*பிலாத்து இந்த முறை இயேசுவுக்கு தீர்ப்பளிக்க அனைத்து மத குருமார்களையும் நாடிச்சென்றான். பிலாத்துவின் மனைவி கண்ட கனவின் மூலம் இயேசு நீதிமான் என பிலாத்து எச்சரிக்கப்பட்டார். அவளுடைய பெயர் கிலோவ்டியா (Claudia), இது மதச்சார்பற்ற பதிவுகளில் இருந்து எடுக்கப்பட்டது. இவள் ஒருத்தி மாத்திரமே இந்த முழு விசாரணையின் போது தேவன் தனக்கு அளித்த கனவின் காரணத்தினால் இயேசுவுக்கு ஆதரவாய் இருந்தாள். அதுமட்டும் அல்லாமல் பிலாத்துவால் மனதளவில் இயேசுவிடம் எந்த ஒரு குற்றத்தையும் கண்டறிய முடியவில்லை. இயேசுவின் மன அமைதியும், தனக்கு அவர் திரும்ப பதில் அளிக்காததும் பிலாத்துவிற்கு மிகுந்த ஆச்சர்யத்தை அளித்தது. பிலாத்து தன்னுடைய அனுபவத்தில் எத்தனையோ மக்கள் தங்களுக்கு மரண தண்டனை என்பதை கேட்டவுடன் சத்தமிட்டு அழுது தங்களுடைய எல்லா உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துபவர்களை பார்த்திருப்பான். ஆனால் இங்கு இயேசுவோ மரணத்தைப் பற்றிய பயம் எதுவும் இன்றி அசையாமல் இருந்தார்.*

*பிலாத்துவுக்கு இயேசு குற்றமற்றவர் என்று தெரியும், ஆனாலும் அவர் யூத தலைவர்களிடம் தனக்கு இருந்த நன்மதிப்பு இழக்காதபடிக்கு இயேசுவை ஏதேனும் ஒரு இராஜதந்திர வழியில் விடுதலை செய்ய பார்த்தார். ஆகையால் தான் இயேசுவை ஏரோதிடம் அழைத்துச் செல்லுமாறு அனுப்பினார். ஏரோது இயேசுவுக்கு நியாத்தீர்ப்பு அளித்து தன்னை பிரச்சனையில் இருந்து காப்பாற்றுவார் என அவர் நம்பினார். அந்த திட்டம் தோல்வியுற்றதும், விருந்தின் போது கைதியை விடுவிக்கும் பழைய வழக்கத்தை கையாண்டார். அவர் குற்றமற்றவர் என்று அறிந்த இயேசு அல்லது கொலைகாரனான பராபாஸ் (Barabbas) ஆகிய இருவரில் ஒருவரை தேர்ந்தெடுக்கும் பொறுப்பை மக்களிடம் கொடுத்தார். மக்கள் இயேசுவையே தேர்ந்தெடுப்பார்கள் என பிலாத்து எண்ணினான். ஆனால், பிராதான ஆசாரியர் மற்றும் வேத பாரகரின் வலியுறுத்துதலின் மூலம், மக்கள் பராபாஸ் (Barabbas) என்பவனை விடுதலையாக்கும்படி தேர்வு செய்தனர். அதே கூட்டம் ஐந்து நாட்களுக்கு முன்னர் "இராஜாவுக்கு ஓசன்னா!" என கத்தியது நினைவில் உள்ளதா? மக்களின் பாராட்டிற்கு ஒருபோதும் விழுந்து விடாதீர்கள்! உங்களை பாராட்டுபவனே உங்களை சிலுவையில் அறையவும் செய்வான்.*

*இயேசுவை எவ்வாறு தப்புவிப்பது என யோசனை ஏதும் இல்லாமலும் அதே சமயத்தில் யூதர்களிடம் தனக்கிருந்த மதிப்பை காப்பாற்றிக் கொள்வதற்காகவும் அவர் இயேசுவை தண்டித்து மரண தண்டனை வழங்கினார். பிலாத்து மக்களின் மீதிருந்த பயத்தினாலும் அவர்கள் தனக்கு என்ன செய்வார்கள் என்ற எண்ணத்தினாலும் தன் மனதில் உண்மை என்ன என்பதை அறிந்திருந்தும் அதற்கு மீறி நடந்தார். பிரதான ஆசாரியருடைய ஒத்துழைப்பு இல்லாமல் அவர் யூதர்களிடம் படாதபாடு பட்டு மிகுந்த பிரச்சனைகளுக்கு உள்ளானார். இதில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டால் தனக்கு ஒழுங்காக நிர்வாகிக்கும் திறன் இல்லை என இராயனிடமிருந்து (Caesar) தண்டனை கூட பெற சாத்தியங்கள் உள்ளது என்ற எண்ணமும் பிலாத்துவை பிடித்திருந்தது.*

*வேத வசனங்களை பல ஆண்டுகளாக பயிற்சி செய்து நன்கு கற்றுணர்ந்த மத தலைவர்களால் ஏன் இயேசுவை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை?*

*மத்தேயு* 27:18

> ***<u>பொறாமையினாலே</u>*** *அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து,*

*மாற்கு* 15:10

> ***<u>பொறாமையினாலே</u>*** *பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து,*

*பொறாமை என்ன செய்ய கூடும் என்பதை உங்களால் பார்க்க முடிகிறதா? பெயர் பெற்ற தேவனை நேசித்து தேவனுக்காக சேவை செய்யும் பல மனிதர்கள் இந்த பொறாமை குணத்தினால் வழி தவறி சென்றுவிடுகின்றனர். பொறாமை உங்கள் கண்களையும் இருதயத்தையும் குருடாக்கி உங்களை இழிவான நிலைக்கு எடுத்துச் சென்றுவிடும்.* இயேசுவால் பல அற்புதங்களை செய்ய முடிகிறது என்பதையும் மக்கள் தங்களை அல்லாமல் அவரையே பாராட்டுகிறார்கள் என்பதையும் இந்த மதகுருக்களால் ஜீரணிக்க முடியவில்லை. இதில் சிறந்த விஷயம் என்னவென்றால் பிலாத்துவைப் போல மற்றவர்களும் இதை அறிநட்திருன்தனர்!! ஆனாலும் தேவ தூஷனத்திர்காகவே இயேசுவை பழிக்கிறோம் என்று பிரதான ஆசாரியர்கள் ஜனங்களோடு சேர்த்து தங்களையும் ஏமாற்றிக்கொண்டிருன்தனர். ஆனால் தெய்வபக்தி ஏதும் இல்லாத அதிகாரியாகிய பிலாத்துவால் கூட இதை பொய் என்று காண முடிகிறது. ஆனால் இந்த ஜனங்களால் இதை உணர முடியவில்லை. மதத்தினால் வரும் அடிமைத்தனம் மக்களை பாவத்தைக் காட்டிலும் அதிகமாக உண்மைக்கு விரோதமாய் குருடாக்கி விடும். பிரதான ஆசாரியர் மற்றும் வேதபாரகரின் இந்த செயலுக்கு பின்னான உண்மையான உள்நோக்கம் என்னவென்றால் பொறாமையே ஆகும். அவர்கள் யாவரும் ஜனங்கள் பார்க்கவேண்டும் என்பதற்காகவே ஊழியம் செய்தனர் (மத்தேயு 23:5). ஆனால் அதற்கு நேர் மாறாக இயேசுவோ அவர்களைக் காட்டிலும் அதிகமான பிரசித்தி பெற்று வந்தார். இந்நாளிலும் கூட சபை உபத்திரவத்துக்குள் செல்வதற்கு இதுவே காரணமாக உள்ளது. எல்லா பிரச்சனைகளும் மேட்டிமையிலும் (அகங்காரத்திலும்) பொறாமையிலும் முளைக்கிறது (நீதிமொழிகள் 13:10).

உபாகமம் 21:6–7 மற்றும் சங்கீதம் 26:6 இல் குறிப்பிட்டது போல ஒரு கைதியை விடுதலை செய்வது அந்நாளில் வழக்கம் மட்டுமல்ல மத சம்பந்தமும் உடையது. பிலாத்து தன் கைகளில் உள்ள குற்றப்பழியை கழுவியதை பதிவு செய்த ஒரே எழுத்தாளர் மத்தேயு மட்டுமே. இது போலவே பிலாத்துவின் மனைவிக்கு வந்த கனவையும் பதிவு செய்த ஒரே எழுத்தாளரும் அவரே. இந்த நிகழ்வுகளில் இருந்து பிலாத்து அறியாமல் இயேசுவுக்கு மரண தண்டனை விதிக்கவில்லை மாறாக அவர் நிரபராதி என்று அறிந்தே தண்டனை விதித்தான். பிலாத்து தன் கைகளில் படிந்துள்ள இயேசுவின் இரத்தத்தை நித்தியத்திற்கும் கழுவ முயற்சிப்பார். கைதியின் விடுதலையைக் குறித்த பிலாத்துவின் கேள்விக்கான மறுமொழியாக யூதர்கள் அனைவரும் ஒரே குரலில் “அவருடைய இரத்தம் எங்கள் மீதும் எங்கள் சந்ததியின் மீதும் இருக்கட்டும்” என்று கூறினார். ஒருவர் தன் மீது சுமத்திக்கொள்ளும் எப்படிப்பட்ட சாபம் இது! மக்கள் கூறிய இந்த பொறுப்பற்ற வார்த்தைகளினால் மிகப் பெரிய விளைவை சந்திக்க நேர்ந்தது. நித்தியத்திற்கும் அவர்களின் ஆத்துமா தள்ளப்பட்டது மாத்திரமல்லாமல், யூதர்கள் சொல்ல முடியாத துன்பத்தையும் அதற்கான விலைக்கிரையத்தையும்

*கி.பி. 70இல், எருசலேமை ரோமர்கள் அழித்த போது செலுத்தினார்கள். அந்த அழிவின் நாட்களில்* 500 *யூதர்கள் ஒரே நாளில் சிலுவையில் அறையப்பட்டனர். அந்த நாள் முதல், இந்நாள் வரை வரலாறானது யூதர்களின் இரத்தத்தால் குளித்துள்ளது. பிலாத்து பர்னபாவை விடுவித்து இயேசுவை கல்வாரி சிலுவையில் அறையும் படி உத்தரவு பிறப்பித்தான். மேலும் அவன் சிலுவையில் இருந்த கல்வெட்டில் எபிரேயர், கிரேக்கம் மற்றும் இலத்தின் மொழிகளில் எழுதினான்.*

### ரோம போர்ச்சேவகர்கள் இயேசுவை பரியாசம் செய்தனர்

*மத்தேயு* 27:27–31; *மாற்கு* 15:16–20 & *யோவான்* 19: 1–4

*அவர்கள் அவருடைய ஆடைகளை பறித்து, ஊதா அங்கியை அவருக்கு உடுத்தி, மேலும் ஒரு முட்கிரீடத்தை அவர் தலையிலே சூட்டி மற்றும் ஒரு கோலை அவர் கையிலே கொடுத்தனர்.* **அவரை** *அடித்தும் அவர் மீது துப்பவும் செய்த்தனர். சிலர் அவரை, "ராஜாவை வாழ்த்துங்கள்" என்று அவரை ஆராதிப்பது போல பரிகாசமும் செய்தனர். அவரை மிகவும் மோசமாய் கேலியும் செய்தனர்.*

*மத்தேயு* 27:29–31:

> *முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக்கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள். அவரைப் பரியாசம்பண்ணினபின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள்.*

*அவர் சித்ரவதையின் எல்லா அவமானத்தையும் வலியையும் ஏற்றுக்கொண்டார்!*

### *கபாலஸ்தலத்துக்கு (Calvary) செல்லும் வழி*

*மத்தேயு* 27:31–34; *லூக்கா* 23:26–33 & *யோவான்* 19:16–18

*மத்தேயு* 27:32

> *போகையில் சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம்பண்ணினார்கள்.*

*அவரால் சிலுவையை சுமக்க முடியாத அளவிற்கு மிகவும் மோசமாக போர் சேவகர்கள் அவரை அடித்தனர். அதனாலே, மேலே கூறப்பட்ட வசனம் சொல்லுவது போல, சிரேனே ஊரானாகிய சீமோனை (*Simon Cyrene*) சிலுவையை சுமக்கும்படி பலவந்தம்பண்ணினார்கள்.*

*மாற்கு சுவிசேஷம்* 15:21*இல் கூறுவதாவது, சிரேனே ஊரானும், அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனுமாகிய சீமோன் என்னப்பட்ட ஒருவன் நாட்டிலிருந்து அவ்வழியே வருகையில்,*

அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம்பண்ணினார்கள். இதே ருபஸ் (Rufus) என்பவரையே பின்நாளில் பவுல் (Paul) ரோமருக்கு எழுதிய நிருபத்தில் (16:13) வாழ்த்து கூறியிருப்பார்.

சிலுவையில் அறையப்படும் இடமாகிய கொல்கதா (Golgotha) என்பதன் அர்த்தம் "மண்டையோடு" ("the skull") (Strong's Concordance). லூக்கா மட்டுமே "கிரேனியன்" ("KRANION" ("'cranium" [Strong's Concordance])) என்கிற கிரேக்க வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். இந்த இடத்தை அடையாளம் காண்பதற்காக "கல்வாரி" ("Calvary") என மொழிபெயர்த்துள்ளனர் (லூக்கா 23:33). இந்த பின்வரும் உண்மைகள் விவிலியத்தில் இருந்து வெளிப்படுகின்றன:

- கொல்கதா (Golgotha) எருசலேமுக்கு அருகில் உள்ளது (யோவான் 19:20)
- நகரத்தின் மதிலுக்கு வெளியே (எபிரேயர் 13:12)

எல்லோரும் செல்லக் கூடிய பாதையிலே கொல்கதா (Golgotha) அமைந்திருந்தது. மாற்கு 15:40 மற்றும் லூக்கா 23:49 இல் குறிப்பிட்டுள்ளது போல சிலுவையில் அறைவதை நெடுந்தூரத்தில் இருந்தே காணக்கூடியதாக இருந்தது. அதனால் அது ஒரு மலைப் பகுதியாக இருந்திருக்க வேண்டும்.

### பிற்பகல் 9 மணி அளவில் சிலுவையில் அறையப்படுதல் – 6ஆம் மணி

மத்தேயு 27:32–44; மாற்கு 15:23–32; லூக்கா 23:33–39 & யோவான் 19:18–24

இயேசு சிலுவையில் இருந்த போது திராட்சை ரசத்தை ஏற்க மறுத்தார். இதை சிலுவை தரும் வலியை மறப்பதற்கு வழக்கமாக கொடுப்பார்கள். இதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை ஆகவேதான் இயேசு அத்தகைய வேதனையில் இருந்தார். இதனால் அவரால் சரியாக பேச கூட முடியாமல் போனது. அங்கே சூரிய கிரகணமும் இருந்ததால் அடுத்த மூன்று மணி நேரத்துக்கு, மதியம் 3 மணி ஆகும் வரை வானம் கும்மிருட்டாக மாறியது.

சிலுவை மரணமே மனிதன் திட்டமிட்ட மரண தண்டனைகளிலே மிகவும் சித்திரவதையான மரணமாகும். சிலுவை மரணத்திற்கு ஒருவன் போகும்முன் அவனுக்கு முதலில் கசையடிகள் கொடுப்பத்து ஆரம்பிப்பார்கள். இந்த கசையடிக்கு பயன்படுத்துகிற சவுக்கு பல தோல் பட்டைகளாலானது. அதில் உடைந்த உலோகம், கண்ணாடி அல்லது எலும்புகள் அதன் முனையில் கட்டியிருப்பார்கள். இது அதிக வலியை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் உண்மையில் ஒருவரின் தோலையே கிழித்து உரித்து எடுத்துவிடும். இதனால் அதிகமாக இரத்தம் வடிந்து பலவீனத்தை ஏற்படுத்தும். இயேசு பிலாத்துவின் முன் நடந்த விசாரணையின் போது இந்த முப்பதொன்பது சவுக்கடிகளை வாங்கினார் (மத்தேயு 27:26 மற்றும் மாற்கு 15:15).

பிறகு சிலுவையில் அறையப்படுபவரை ஒரு சிலுவையில் கட்டுவார்கள்; மிகவும் உக்கிரமான குற்றவாளிகளை அந்த சிலுவையில் ஆணியால் அறைவார்கள். பாதங்களை ஒன்றின் மீது ஒன்று வைத்து முழங்கால்களை ஒருவிதமாய் மடக்கி மேலும் ஒரே பெரிய ஆணியை அவர்கள் பாதங்களில் சிலுவையோடு சேர்த்து அடித்து அறையப்ப்டுபவரின் கால் விழாமல் தாங்கும் வகையிலும் ஆணி அடிப்பார்கள். அவர்களுடைய கைகளை நீட்டி வைத்து ஆணியை கைகளின் மணிக்கட்டு வழியாக

உத்திரக் கட்டையோடு அடிபார்கள். இயேசு ஆணிகள் அடிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார் என்பதை லூக்கா 24:39 மற்றும் யோவான் 20:27இல் கூறப்பட்ட இயேசுவின் வார்த்தைகள் மூலம் பலரும் நம்புகின்றனர். சிலுவையில் ஆணியால் அறைந்த பின்னர், சிலுவையை உயர எழுப்பி பிறகு ஒரு துளைக்குள் மூர்க்கமாக கீழே விடும்போது திசுக்களை கிழித்து உக்கிரமான வேதனையையும் வலியையும் அது கொடுக்கும். இந்த எல்லா வலியையும் தாங்கிக் கொள்ளவே முடியாது. ஆனால் இந்த சிலுவை மரணத்தின் மோசமான அம்சம் என்னவென்றால் அது மூச்சுத்திணறல் ஆகும்.

ஒரு மனிதனை சிலுவையில் தன் கைகளை உயர்த்தி மற்றும் நீட்டி அறைந்த விதத்தால், அவனால் மூச்சை இழுக்க முடியும் ஆனால் அவனுடைய மூச்சை விடும் திறனை அது கட்டுப்படுத்தும். அதன் விளைவாக அறையப்பட்ட மனிதன், சுவாசிக்க முயற்ச்சிக்கும் போது, தன் கால்களில் வலி ஏற்பட்டு தொய்வு அடையும் வரை தன் கால்களை உயர்த்தி மூச்சுத்திணறி கற்றை சுவாசிப்பன். மீண்டும் மணிகட்டில் உள்ள அழுத்தத்தினால் வரும் வலியினால் மூச்சுவிடுவதை நிறுத்துவான். இயேசு சிலுவையில் தொங்கிய ஆறு மணி நேரத்தில் எண்ணற்ற முறை இதை அவர் செய்திருக்க வேண்டும்.

இந்த கடும் வேதனை இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு வரைகூட ஒருவன் முழுவதுமாக மரிக்கும்வரை தொடரும். ஒரு சில மனிதர்கள் சிலுவையில் அறையப்பட்டு மரணம் வருவதற்கு ஒன்பது நாட்கள் (Unger’s Bible Dictionary) வரை காத்திருந்த சான்றுகள் உள்ளன. ஓய்வுநாள் (Sabbath) நெருங்கி வருவதால் (யோவான் 19:31–33), யூதர்கள் பிலாத்துவிடம் இயேசுவையும் அவரோடு அறையப்பட்ட மற்ற இருவரின் கால்களையும் முறிக்கும்படி கேட்டனர். கால்களை உடைக்கும்போது தங்கள் கால்களை நிமிர்த்த முடியாததால் அவர்களால் மூச்சு விடமுடியாது; ஆகவே மூச்சுத்திணறல் ஏற்பட்டு உடனே மரித்துவிடுவார்கள். இதற்காகவே கால்களை முரிக்கும்படி கேட்டனர்.

## இயேசு சிலுவையில் இருந்தபோது கூறிய ஏழு வாக்கியங்கள்

| | | |
|---|---|---|
| முதலாம் வார்த்தை | லூக்கா 23:34 | “பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே.” |
| இரண்டாம் வார்த்தை | லூக்கா 23:43 | “இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.” |
| மூன்றாம் வார்த்தை | யோவான் 19:26–27 | தம்முடைய தாயை நோக்கி: “ஸ்திரீயே, அதோ, உன் மகன்” என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய்” என்றார். |

| | | |
|---|---|---|
| நான்காம் வார்த்தை | மத்தேயு 27:46; மாற்கு 15:34 | “என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?” |
| ஐந்தாம் வார்த்தை | யோவான் 19:28 | “தாகமாயிருக்கிறேன்” |
| ஆறாம் வார்த்தை | யோவான் 19:30 | “முடிந்தது” |
| எழாம் வார்த்தை | லூக்கா 23:46\ | “பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்.” |

***நூற்றுக்கதிபதியின் சாட்சி***

*மத்தேயு* 27:51–56; *மாற்கு* 15:38–41 & *லூக்கா* 23:45–49

*முதலில், தேவாலயத்தின் திரை* **மேலிருந்து கீழாக** *கிழிந்தது. பிரதான ஆசாரியரை தவிர யாரும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு உள்ளே செல்ல கூடாது என்பதற்காக ஒரு திரை கொண்டு அந்த இடத்தை மற்ற பகுதியிலிருந்து பிரித்திருந்தனர். பிரதான ஆசாரியர் மட்டும் வருடத்திற்கு ஒரு முறை இரத்த பலி செலுத்தி உள்ளே செல்ல முடியும். இதனால் தேவனுக்கும் ஜனங்களுக்கும் இடையே வெளிப்படையாகவே புரிந்துகொள்ளக்கூடிய பிளவு இருந்தது. இப்போது இயேசு மரித்தவுடனே, நம்முடைய பாவத்திற்கான அபராதம் முழுவதும் செலுத்தப்பட்டுவிட்டது. இதனால் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் எந்த ஒரு பிரிவனையும் தேவை அவசியமில்லாதபடி – அந்த தேவாலயத்தின் திரை மேலிருந்து கீழாக கிழித்து போடப்பட்டது.*

*எபிரெயர்* 10:19–20

> *சிரேனே ஊரானும், அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனுமாகிய சீமோன் என்னப்பட்ட ஒருவன் நாட்டிலிருந்து அவ்வழியே வருகையில், அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம்பண்ணினார்கள். ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்,*

*மத்தேயு* 27:54

> *நூற்றுக்கு அதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.*

மேற்கூறிய வசனத்தின் படி, நூற்றுக்கு அதிபதியும் காவலர்களும் இயேசுவே தேவகுமாரன் என்பதை நம்பினர். நடந்ததை காவலர்கள் யாருக்கும் சொல்லக் கூடாது என்பதற்காக அதிகாரிகள் அவர்களுக்கு லஞ்சம் கொடுத்ததை பின்நாளில் மத்தேயு பதிவு செய்துள்ளார் (மத்தேயு 28: 11–15).

அடுத்த மூன்று நாட்களுக்கு அந்த மூவரின் உடல் சிலுவையில் தொங்குவதை தவிர்ப்பதற்கும் அவர்களின் கால்களை முறிப்பதற்கும் காவலர்கள் அனுமதி பெற்றனர். ஏனெனில் அடுத்த நாள் மற்றொரு வருடாந்திர ஓய்வுநாள் (annual Sabbath). மற்ற இரண்டு திருடரின் கால்களை முறித்துவிட்டு இயேசுவிடம் வந்த போது, அவர் ஏற்கனவே மரித்துப்போனதை கண்டனர். அதனால் அவர் எலும்பை முறிப்பதற்கு அவசியம் இல்லாமல் போயிற்று. இதன் மூலம் "அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை" என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறியது. ஆனாலும், அவருடைய மரித்துவிட்டார் என்று உறுதிபடுத்துவதற்கு ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினார்கள், உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது (யோவான் 19:35), இதனால் சகரியா 12:10 இல் கூறப்பட்ட "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து" என்ற மற்றொரு தீர்க்கதரிசனமும் நிறைவேறியது.

## இயேசுவின் இறப்பைக் குறித்து பிலாத்து ஆச்சர்யப்பட்டான்

அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு பிலாத்துவிடம் வந்து இயேசுவின் உடலைக் கேட்ட போது அவர் ஆச்சர்யப்பட்டார். பிலாத்து நூற்றுக்கு அதிபதியிடமும் போர்ச்சேவகர்களிடமும் அந்த உண்மையை உறுதி செய்யும் படி கூறி அனுப்பினார். அவருடைய மரணத்தை உறுதி செய்த பின்னர், யோசேப்புக்கு அவரை கல்லறையில் புதைக்க அனுமதி வழங்கினான்.

மாற்கு 15:43–47

> கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும் அரிமத்தியா ஊரானானும் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு என்பவன் வந்து, பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்துப்போனாரா என்று பிலாத்து ஆச்சரியப்பட்டு, நூற்றுக்கு அதிபதியை அழைப்பித்து: அவர் இதற்குள்ளே மரித்தது நிச்சயமா என்று கேட்டான். நூற்றுக்கு அதிபதியினாலே அதை அறிந்துகொண்டபின்பு, சரீரத்தை யோசேப்பினிடத்தில் கொடுத்தான். அவன் போய், மெல்லிய துப்பட்டியை வாங்கிக்கொண்டுவந்து, அவரை இறக்கி, அந்தத் துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்தான். அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும், யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்.

இயேசுவின் உடலின் மேல் பயன்படுத்திய நறுமணப் பொருள்களின் மதிப்பு இன்றைய கணக்கின்படி பல ஆயிரம் டாலர்கள் இருக்கும். அப்போது அவர் மீது சுமார் நூறு பவுண்டுகள் எடை உள்ள நறுமனபொருட்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்று உத்தேசிக்கின்றனர். அவருடைய உடல் முதல் மாதமாகிய நிசானின் (Nissan) 14ஆம் நாளில், பஸ்கா தினத்தில் மாலை ஆறு மணிக்கு முன் ஒரு

*செல்வந்தனுடைய கல்லறையில் அடக்கம் பன்னப்பட்டது, ஏனெனில் அடுத்த நாளாகிய நிசானின் 15ஆம் நாளில், குறிப்பிட்ட அந்த வருடத்தில் வருடாந்திர ஓய்வுநாள் (*annual Sabbath*) என்று அழைக்கப்படுகிற பெரிய ஓய்வுநாள் (*High Sabbath*) நிகழ்கிறது – அதனால் அந்நாளில் எந்த வேலையும் செய்ய முடியாது.* மேலும், பஸ்கா ஒரு பண்டிகை என்பதை நினைவில் கொள்ளுங்கள் – *ஓய்வுநாள் அல்ல – நீங்கள் எப்போது வேலை செய்து கொண்டும் கொண்டாடவும் முடியும். ஆனால் ஓய்வுநாள் அன்று நீங்கள் எந்த வேலையும் செய்ய முடியாது; அதனால் தான் அவர்கள் மாலை ஆறு மணிக்குள் வருடாந்திர ஷாபாத் (ஓய்வுநாள்) ஆரம்பிக்கும் முன் இயேசுவை அடக்கம் பன்ன உறுதி செய்தனர்.*

*இயேசுதான் கிறிஸ்து என்பதற்கான மிகவும் உறுதியான வாதங்கள் அவர் நிறைவேற்றிய நூற்றுக்கணக்கான பழைய ஏற்பாடு தீர்க்கதரிசனங்களில் இருந்து வந்த்துள்ளது. அவர் இறப்பைகுறித்த சில முக்கியமான பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனமும் அதற்கு பொருத்தமான புதிய ஏற்பாட்டில் நிறைவேறியதன் பட்டியலை கீழே காணலாம்.*

| **பழைய ஏற்பாடு** | **தீர்க்கதரிசனம்** | **புதிய ஏற்பாடு** |
|---|---|---|
| ஆதியாகமம் 3:15 | சாத்தானின் மீதான ஜெயம் | கொலோசெயர் 2:15 |
| எண்ணாகமம் 21:9 | சர்ப்பத்தின் வகை | யோவான் 3:14–15 |
| சங்கீதம் 16:9–10 | மேசியா அழிவைக் காணமாட்டார் | அப்போஸ்தலர் 2:27,31 & 13:35 |
| சங்கீதம் 22:1 | கிறிஸ்து கைவிடப்பட்டார் | மத்தேயு 27:46 |
| சங்கீதம் 22:7–8 | மேசியா தூஷிக்கப்பட்டார் | லூக்கா 23:35 |
| சங்கீதம் 22:16 | அவருடைய கால்களையும் கைகளையும் உருவக் குத்தினார்கள் | மாற்கு 15:25; லூக்கா 23:33; யோவான் 19:37 & 20:25 |
| சங்கீதம் 22:18 | அவருடைய ஆடையின்மேல் சீட்டு போடப்பட்டது | லூக்கா 23:34; யோவான் 19:23–24 |
| சங்கீதம் 34:20 | எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை | யோவான் 19:36 |

| பழைய ஏற்பாடு | தீர்க்கதரிசனம் | புதிய ஏற்பாடு |
|---|---|---|
| சங்கீதம் 35:11 | பொய் குற்றச்சாட்டு | மாற்கு 14:57–58 |
| சங்கீதம் 35:19 | ஒரு காரணமும் இல்லாமல் வெறுக்கப்பட்டார் | யோவான் 15:24–25 |
| சங்கீதம் 41:9 | நண்பனின் துரோகம் | லூக்கா 22:47–48 |
| சங்கீதம் 49:15 | அவருடைய உயிர்த்தெழுதல் | மாற்கு 16:6 |
| சங்கீதம் 68:18 | தேவனுடைய வலது பாரிசத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டார் | மாற்கு 16:19; எபேசியர் 4:8 |
| சங்கீதம் 69:21 | காடியை அவருடைய தாகத்துக்காக குடிக்கக் கொடுத்தார்கள் | மத்தேயு 27:34; மாற்கு 15:36 |
| சங்கீதம் 109:25 | தங்கள் தலைகளைத் துலுக்கி | மத்தேயு 27:39 |
| ஏசாயா 50:6 | அவருடைய முகத்தில் துப்பினார்கள் | மத்தேயு 26:67 |
| ஏசாயா 50:6 | மேசியாவை வாரினால் அடிப்பித்து | மத்தேயு 27:26 |
| ஏசாயா 52:14 | அவருடைய ரூபமும் கேடடைந்தது | மத்தேயு 26:67,27:26,29–30; மாற்கு 15:15–19 மற்றும் யோவான் 19:34 |
| ஏசாயா 52:15 | புறஜாதியார் ஆவிக்குரிய ஆசிர்வாதங்களை பெறுதல் | எபிரெயர் 1:3 |
| ஏசாயா 53:3 | மக்களால் வெறுக்கப்பட்டு நிராகரிக்கப்படுவார் | யோவான் 1:10–11 |
| ஏசாயா 53:4 | நம்முடைய நோய்களைச் சுமந்தார் | மத்தேயு 8:16–17 |

| பழைய ஏற்பாடு | தீர்க்கதரிசனம் | புதிய ஏற்பாடு |
|---|---|---|
| ஏசாயா 53:5-6 | நம்முடைய பாவங்களுக்காக காயமடைந்தார் | ரோமர் 4:25,1 பேதுரு 3:18 |
| ஏசாயா 53:7 | வாய் திறவாமல் இருந்தார் | மத்தேயு 26:63,27:12 & மாற்கு 14:61 &15:5 |
| ஏசாயா 53:9 | அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார் | மத்தேயு 27:57–58, 60 |
| ஏசாயா 53:11 | அநேகரை நீதிமான்களாக்குவார் | ரோமர் 3:26, 5:19 |
| ஏசாயா 53:12 | அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் | மாற்கு 15:28 & லூக்கா 22:37 |
| ஏசாயா 53:12 | கள்ளர்களோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டார் | மாற்கு 15:27–28 |
| யோனா 1:17 | யோனாவின் அடையாளம் | மத்தேயு 12:40, 16:4 |
| மீகா 5:1 | இஸ்ரவேலுடைய நியாயாதிபதியைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள் | மத்தேயு 27:30 |
| சகரியா 11:12 | முப்பது வெள்ளிக்காசுக்காக காட்டிக்கொடுக்கப்பட்டார் | மத்தேயு 26:15 |
| சகரியா 11:13 | குயவனுடைய நிலத்தை காட்டிகொடுக்கப்பட்ட பணத்திலே கொண்டார்கள் | மத்தேயு 27:5–10 |
| சகரியா 13:7 | மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் | மத்தேயு 26:31 & மாற்கு 14:27 |

# *பாடம் 8 – பஸ்காவிற்கு பிறகு*

- *நிசான் மாதத்தின்* 14*ஆம் நாள் பஸ்காவாகும்.*
- *நிசான் மாதத்தின்* 15*ஆம் நாள் – அப்பப்பண்டிகையின் முதலாம் நாள் – வியாழக்கிழமை*

லேவியராகமம் 23:1–4

> *பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: சபைகூடிவந்து பரிசுத்த நாட்களாக ஆசரிக்கும்படி, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை நாட்களாவன: ஆறுநாளும் வேலை செய்யவேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்யவேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக. சபைகூடிவந்து பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி, நீங்கள் குறித்தகாலத்தில் கூறவேண்டிய கர்த்தரின் பண்டிகைகளாவன:*

### *சாபத் – ஓய்வு நாள்*

> *'ஆறுநாளும் வேலை செய்யவேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள், அதில் ஒரு வேலையும் செய்யவேண்டாம்; அது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக.*

*மேற்கூறிய வசனங்கள் வாரம்தோறும் ஓய்வுநாள் இருப்பதை தெளிவாக குறிப்பிடுகின்றன. இது தேவனுக்கு மரியாதை செலுத்துவதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஏழாம் நாள் பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள்* (holy convocation) *என்பதை மூன்றாம் வசனம் தெள்ளத் தெளிவாக்குகிறது. அந்நாளில் எந்த வேலையும் செய்யக் கூடாது. ஆனாலும், இந்த வசனகள் வருடாந்திர ஓய்வு நாளையோ பெரிய நாளையோ (*annual Sabbath or High Day*) குறிக்க வில்லை.*

7 *வருடாந்திர ஓய்வுநாட்கள் (*annual Sabbaths*) உள்ளன*:

- *புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் (*Unleavened Bread*) முதல் நாள்,*
- *புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் (*Unleavened Bread*) ஏழாம் நாள்,*
- *பெந்தெகொஸ்த் (*Pentecost*),*
- *எக்காளம் (*Trumpets*)* (*எபிரேய மொழியில் ரோஷ் ஹஷனாஹ் (*Rosh Hashanah*)*),
- *பிராயச்சித்தம் (*Atonement*)* (*யோம் கிபுர் (*Yom Kippur*)*),
- *ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையின் (*Tabernacles*) முதல் நாள்* (*சுக்கோத் (*Succoth*)*), *மற்றும்*
- *இறுதியான பெரிய ஓய்வுநாள் (*Last Great Day*)*.

முதல் மூன்றும் வசந்த காலத்தில் நிகழும் கடைசி நான்கும் இலையுதிர் காலத்தில் நிகழும். தேவன் இரண்டு ஓய்வு தினங்களில் ஒன்றை புளிப்பில்லா அப்பப்பண்டிகைகாகவும் (Feast of the Unleavened Bread) மற்றொன்றை ஆசரிப்பு கூடாரப்பண்டிகைக்காகவும் (Feast of Tabernacles) அமைத்தார்.

முதல் மற்றும் ஏழாம் (இறுதி) நாளின் புளிப்பில்லா அப்பப்பண்டிகை இரண்டுமே பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள் எனவும் மேலும் அதில் எந்தவித தாழ்மையான வேலையும் செய்யாக் கூடாது எனவும் லேவியராகமம் 23:6–8 கூறுகிறது.

> *அந்த மாதம் **பதினைந்தாம் தேதியிலே**, கர்த்தருக்குப் **புளிப்பில்லா அப்பப் பண்டிகையுமாய்** இருக்கும்; ஏழுநாள் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்கவேண்டும். முதலாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான சபைகூடுதல்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம். ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலியிடவேண்டும்; ஏழாம்நாள் பரிசுத்தமான சபைகூடுதல்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது என்று சொல் என்றார்."*

மேலும் யாத்திராகமம் 12:14-16 ஐ படியுங்கள்.

அவ்விதமாய் நிசான் மாதத்தின் 15ஆம் நாள் புளிப்பில்லா அப்பப்பண்டிகையாகும். அது பரிசுத்த சபைகூடுதலான ஓய்வுநாள் அல்லது பெரிய ஓய்வுநாள் (High Day) அல்லது வருடத்தில் ஒரு முறை மட்டுமே நிகழும் வருடாந்திர ஓய்வு நாளாகும்! தயவு செய்து கவனிக்கவும், பஸ்கா பெரிய ஓய்வுநாள் அல்ல, இந்த முக்கியமான உண்மையை அடிக்கடி கவனிக்க தவறிவிடுகின்றனர். பஸ்கா ஓய்வுநாள் அல்ல!

"**ஏன் இது முக்கியம்?**" இந்த நாளில் தான் இயேசு மீட்புக்கான வேலையை செய்தார். ஓய்வு நாளன்று வேலை செய்வது சட்டவிரோதமான செயலாக இருந்திருக்கும். ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்டதால் தேவதூதன் எகிப்திலிருந்த இஸ்ரவேலர்களை "கடந்து சென்றான்" ("Passover") என்பதை நினைவில் கொள்ளும்படி தேவன் இந்த நாளை ஒரு பண்டிகை தினமாக நியமித்துள்ளார். இது மனிதகுலத்திற்காக இரத்தம் சிந்தப்போகும் ஆட்டுக்குட்டியை குறிப்பதாக உள்ளது. மற்றொரு முக்கியமான பண்டிகை பெரிய ஓய்வுநாள் (High Sabbath day) அல்ல – அறுப்பின் முதற்பலனாகிய பண்டிகை (Feast of First Fruits). சுவாரஸ்யமாக, இது இயேசு உயிர்த்தெழுந்த தினம். ஓய்வு நாளுக்கு பிறகு புளிப்பில்லா அப்பத்திற்கும் (Unleavened Bread) அடுத்தது அறுப்பின் முதற்பலனாகிய பண்டிகை (Feast of First Fruits) (லேவியராகமம் 23:10).

அதனால் இயேசுவின் இறப்பிற்கு பின்னர் என்ன நடந்தது?

யோவான் 19:31

> *அந்த நாள் <u>பெரிய ஓய்வுநாளுக்கு</u> ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.*

அது வழக்கமான ஓய்வு நாள் **அல்ல** என்பதை யோவான் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார்!

யோவான் 19:42

> *யூதருடைய ஆயத்தநாளானபடியினாலும், அந்தக் கல்லறை சமீபமாயிருந்தபடியினாலும், அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள்*

இது ஆயத்தநாளானபடியால், அவர்கள் உடலை சிலுவையிலே விட்டுச் செல்ல முடியாது. அதனால் அவரை யோசேப்பு என்னும் பெயர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷனின் (Joseph of Arimathea) கல்லறையிலே வைக்க உதவினான்.

மத்தேயு 12:38–40

> *அப்பொழுது, வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள். அவர்களுக்குப் அவர் பிரதியுத்தரமாக: இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கத்தரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்.*

இயேசு மூன்று பகல் **மற்றும்** மூன்று இரவு எனக் கூறினார். வெள்ளிகிழமைக்கும் ஞாயிற்றுக்கிழமைக்கும் இடையிலே மூன்று பகல் **மற்றும்** மூன்று இரவு வருவது என்பது முற்றிலும் முடியாத ஒன்று. வழக்கமான யூத நாளானது நள்ளிரவுக்கு மாறாக சூரிய அஸ்தமனத்தில் துவங்கும். இதை மனதில் வைத்துக் கொண்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பாருங்கள்.

| | **பகல்** | **இரவு** |
|---|---|---|
| 1 | சூரிய அஸ்தமனத்துக்கு முன்னதான வெள்ளிக்கிழமை | வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனம் முதல் சனிக்கிழமை சூரியோதயம் வரை |
| 2 | சனிக்கிழமை சூரியோதயம் முதல் சனிக்கிழமை சூரிய அஸ்தமனம் வரை | சனிக்கிழமை சூரிய அஸ்தமனம் முதல் ஞாயிற்றுக்கிழமை சூரியோதயம் வரை |
| 3 | ஞாயிற்றுக்கிழமை சூரியோதயம் முதல் உயிர்த்தெழுதல் வரை | |

இயேசு ஞாயிற்றுக்கிழமை சூரியோதயத்திற்கு **பின்** உயிர்த்த்ழுந்தார் என கருதுகிறார்கள். ஆனால் வேத வாக்கியங்களில் அப்படி குறிப்பிடப்படவில்லை (வெறுமனே வேத வாக்கியங்கள் மகதலேனா மரியாள் சூரியன் உதயமாகும் வேலளை கல்லறைக்கு சென்றதாக கூறுகிறது), இந்த கூற்றுப்படி இரண்டு இரவுகள் மட்டுமே உள்ளன, மூன்று இரவுகள் ஆவதற்கு வழியே இல்லை. அதிகாரபூர்வமாக

வெள்ளிக்கிழமையன்று சிலுவயில் அறையப்படும் இந்த நிலையை தேர்ந்தெடுப்பதும் மேலும் ஞாயிற்றுக்கிழமையன்று உயிர்த்தெழும் நிலையை தேர்ந்தெடுப்பதும் இயேசுவினுடைய தீர்க்கதரிசனத்திற்கே எதிரான கருத்தாகும்.

லூக்கா 23:53–54

> *அந்த நாள் ஆயத்தநாளாயிருந்தது; ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று. கலிலேயாவிலிருந்து அவருடனே கூட வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து,*

மாற்கு 15:42

> *ஓய்வுநாளுக்கு முந்தின நாள் ஆயத்தநாளாயிருந்தபடியால், சாயங்காலமானபோது,*

மேற்கூறிய மாற்கின் கருத்தின்படி ஓய்வுநாளுக்கு முந்தின நாள் வெள்ளிகிழமையாக இருக்க வேண்டும் என குழப்பிக்கொண்டார்கள். அதேசமயம் அது பெரிய ஓய்வு நாளாகவும் (High Day) (வருடாந்திர ஷபாத் (annual Sabbath)), புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் முதல் நாளாகவும் இருந்தபடியால் மக்கள் அதை தவறாக புரிந்து கொண்டார்கள்.

மத்தேயு 27:62

> *<u>ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே</u> பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து:*

# *பாடம் 9 – யோனா*

*மூன்று ஆண்டுகளுக்கு முன் என்னுடைய ஊழிய பயணம் ஒன்றில், மற்ற சமயத்தை சேர்ந்தவர்கள் தயாரித்த* DVD *ஒன்றினால் நான் தடுமாறிப்போக இருந்தேன். அது வேதாகமம் ஒரு சிதைந்த நூல் எனவும் அது தேவனின் உண்மையான வார்த்தை இல்லை எனவும் கோரியது. அதில் சொல்லப்பட்ட பல காரியங்களுள்,* **யோனா மீனின் வயிற்றினுள் சாகவில்லை** *என கூறுகிறது. உண்மையில், பல கிறித்தவர்களும் இதையே நம்புகின்றனர். நல்லது, அதுதான் யோனாவுக்கு நேர்ந்தது என்றால், பிறகு இயேசுவும் நமக்காக இறக்கவில்லை. இயேசு இந்த உலகில் இருந்த நேரத்தில், ''யோனாவின் அடையாளத்தைக்'' குறித்துக் கூறியதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்:*

*மத்தேயு* 12:38–40

> *அப்பொழுது, வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள். அவர்களுக்குப் அவர் பிரதியுத்தரமாக: இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கத்தரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்.*

*அப்போது இயேசு யோனாவைப் போல இறக்கவில்லை என்றால், அப்போது எங்கே நம்முடைய மன்னிப்பு? இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்படாமல் பாவ மன்னிப்பு உள்ளதா? இது என்னை வேத வாக்கியங்களுக்குள் ஆராய்ந்து அறியும்படி தூண்டியது.*

*முதலில் நாம் யோனாவின் வாழ்க்கை முறையை சற்று பார்ப்போம். ''யோனா'' என்ற எபிரேய பெயரின் அர்த்தம் ''புறா'' ஆகும். பழைய ஏற்பாடு முழுவதிலுமே புறா என்ற பொருள் கொண்ட பெயரை யாரும் வைத்ததில்லை.*

*இயேசுவின் இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலுக்கான சாட்சிகள் பழைய ஏற்பாட்டில் உள்ள யோனாவத் தவிர, இரு சாட்சிகள் புதிய ஏற்பாட்டிலும் உள்ளன:* (அ) *லாசரு (*Lazarus*)* மற்றும் (ஆ) *இயேசுவை அபிஷேகித்த மேரி (*Mary*)*

*யோனா தேவனின் வார்த்தையை நினிவே பட்டணத்தில் பிரசங்கிக்க அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி. ஆனால் அவர் தேவனின் வார்த்தைக்கு கீழ்படியாமல் தேவனின் பிரசனத்தில் இருந்து ஓட முயற்ச்சித்தான்.*

யோனா 1:3 (கர்த்தருடைய சமுகத்தினின்று விலகுவதை இரண்டு முறை இந்த வசனத்தில் குறிப்பிட்டுள்ளதை காணலாம்)

> *அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப் போய் தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக்கண்டு, கூலிகொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி,*

> அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்.
>
> அவன் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி ஓடிப்போகிறவன் என்று தங்களுக்கு அறிவித்ததினால், அந்த மனுஷர் மிகவும் பயந்து, அவனை நோக்கி: நீ ஏன் இதைச் செய்தாய் என்றார்கள். யோனா *1:10*

அவர் தேவனின் வார்த்தையை எதிரத்து கீழ்ப்படியாமல் தர்ஷீசுக்குப் கடற்பிரயாணமாய் செல்ல முயற்சித்தார். அவர் கப்பலின் கீழ் தளத்தில் உறங்கினார் (யோனா 1:5–6). பழைய உடன்படிக்கையின்படி, தேவனின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருப்பதற்கு வழங்கப்படும் இறுதியான தண்டனை மரணம். தேவனின் கட்டளையை கீழ்ப்படியாமல் இருந்த தீர்க்கதரிசிகளுக்கு என்ன நேர்ந்தது என்று அறிந்து கொள்ள 1 இராஜாக்கள் 13 ஐ வாசித்துப் பாருங்கள் (வசனம் 11–34).

1 இராஜாக்கள் 13:26

> அவனை வழியிலிருந்து திரும்பப் பண்ணின தீர்க்கதரிசி அதைக் கேட்டபோது, அவன் கர்த்தருடைய வாக்கை மீறின தேவனுடைய மனுஷன் தான், கர்த்தர் அவனுக்குச் சொன்ன வார்த்தையின்படியே, கர்த்தர் அவனை ஒரு சிங்கத்திற்கு ஒப்புக்கொடுத்தார்; அது அவனை முறித்துக் கொன்றுபோட்டது என்று சொல்லி,

இந்த அதிகாரத்தை படித்திருந்தால், தீர்க்கதரிசி ஏறி வந்த கழுதை சிங்கத்தின் அருகில் இருந்தும் உயிரோடு இருப்பதை புரிந்து கொண்டு இருப்பீர்கள். மேலும், அந்த சிங்கம் தீர்கதரிசியின் உடலையும் உண்ணவில்லை; அந்த உடலை யாரேனும் வந்து வாங்கிக் கொள்ளும் வரை அந்த சிங்கம் அதை காவல் காப்பது போல இருந்தது.

மீண்டும் யோனாவின் வழக்குக்கு செல்வோம். தேவனின் அழைப்பிற்கு யோனா கீழ்ப்படியாத பாவத்துக்காக அவர் கொல்லப்பட்டார். இயேசுவோ இந்த முழு உலகத்தின் பாவத்துக்காக சிலுவையில் அறையப்பட்டார்.

யோனா மாலுமிகளிடம் தான் தேவனின் பிரசனத்தில் இருந்து ஓடுவதால் இந்த புயலுக்கு தானே காரணம் என குற்றத்தை ஒத்துக்கொண்டிருந்தார் (யோனா 1:12).

இந்த அச்சுறுத்தும் வாக்குமூலத்தை கேட்ட மாலுமிகள், அவர் வேண்டிய படியே தங்களுக்கு விருப்பமில்லாமல் இருந்தும் அவரை கடலில் தள்ளினார்கள். மேலும் தேவனிடம் யோனாவின் இரத்தப்பழி தங்களை பிடித்துக்கொள்ளாதபடிக்கு தேவனிடம் அழுதார்கள். அவர்கள் 4 மற்றும் 7 மைல்கள் (miles) இடையிலான ஆழம் கொண்ட சீற்றமான கடலில் யோனாவை வீசினார்கள் (யோனா 1:14–15).

இங்கு தான் நீங்கள் முதல் அதிகாரத்தின் 17ஆம் வசனம் உடனே நடக்கவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்த புத்தகத்தை யோனா தான் உயிர்த்தெழுந்த பின் நினிவேயில் பிரசங்கித்த பிறகு, அந்த முழு நகரமும் மனந்திரும்பிய பிறகுதான் எழுதினார். எனவே இந்த வசனங்கள் சரியான வரிசையில் இல்லை. செய்தியின் முக்கிய அம்சம் வெளிவரும்வரை சற்று பொறுமையாக காத்திருங்கள்.

யோனா 2:3

> *சமுத்திரத்தின் நடுமையமாகிய ஆழத்திலே நீர் என்னைத் தள்ளிவிட்டீர்; நீரோட்டம் என்னைச் சூழ்ந்துகொண்டது; உம்முடைய வெள்ளங்களும் அலைகளும் எல்லாம் என்மேல் புரண்டது.*

*மேற்கூறிய வசனத்தில் இருந்து, நாம் பின்வருவனவற்றை உறுதியாக நம்பலாம்:*

- *தேவனோ அல்லது தேவதூதனோ அவரை ஆழமான கடலுக்குள் தள்ளினார்கள்.*
- *நிறைய தண்ணீரை குடித்து இறந்த மனிதனே கடலின் அடிக்கு சென்றிருக்க முடியும்.*
- *ஐந்தாம் வசனத்தில் வலியுறுத்தியது போல அந்த நீரோட்டங்கள் அல்லது அலைகள் அவரை முழுவதுமாக சூழ்ந்தது.*

யோனா 2:5

> *தண்ணீர்கள் பிராணபரியந்தம் என்னை நெருக்கினது; ஆழி என்னைச்சூழ்ந்தது; கடற்பாசி என் தலையைச் சுற்றிக்கொண்டது.*

*தண்ணீர் அவரின் ஆத்மாவையும் கூட சூழ்ந்து கொண்டது; கடலின் ஆழமான நரகப் படுகுழி அவரை இறுகப் பற்றியது என்பது தெளிவாகுகிறது. கடற்பாசி தன் தலையைச் சுற்றிக்கொண்டது. இங்கு காணப்படும் ஒற்றுமை என்னவென்றால், இயேசு கெத்சமனே தோட்டத்தில் (*Garden of Gethsemane*) ஜெபித்துக் கொண்டிருந்தபோது, அவருடைய ஆத்மா மரண துயரத்தில் மூழ்கி, இரத்தம் வியர்வைச் சொட்டுகளாக வடிந்தன. மேலும் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர், ரோம வீரர்கள் அவருடைய தலையில் முள்ளினால் ஆன கிரீடத்தை வைத்தனர்.*

யோனா 2:6

> *பர்வதங்களின் அடிவாரங்கள் பரியந்தமும் இறங்கினேன்; பூமியின் தாழ்ப்பாள்கள் என்றென்றைக்கும் என்னை அடைக்கிறதாயிருந்தது; ஆனாலும் என் தேவனாகிய கர்த்தாவே, நீர் என் <u>பிராணனை</u> அழிவுக்குத் தப்புவித்தீர்.*

*மேற்கூறிய வசனத்திலிருந்து சுட்டிக்காட்ட வேண்டுமெனில், யோனா இன்னும் மீனின் வையிற்றுக்குள் செல்லவில்லை என்பது தெளிவாகுகிறது:*

- *நீர் மற்றும் நீரோட்டங்கள் அவரை மூழ்கடித்தன*
- *மீனின் வயிற்ருக்குள் மலைகள் ஏதும் இல்லை*
- *அவர் படுகுழிக்கு அழைத்து செல்லப்பட்டார்*
- *அவர் பூமியின் ஆழத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கே கதவுகள் எப்போதும் மூடியிருந்தது*

- அவர் குழியிலிருந்து மேலே கொண்டுவரப்பட்டார்.

சங்கீதம் 16:10

> என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்.

இப்போது யோனா இறந்து நரகத்திற்கு சென்றார், தேவன் யோனாவின் உடலை விழுங்குவதற்காக ஒரு மீனை ஆயத்தமாக்கினார் (யோனா 1:17)

கல்லறையில் வைப்பது போல யோனாவின் உடல் மீனின் வயிற்றுக்குள் இருந்தது. ஆனால் பழைய ஏற்பாட்டின்படி அவருடைய ஆத்மா பாதாளத்திற்கு சென்றது:

யோனா 2:2

> என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர்.

பாதாளத்தில் இருந்து யோனா முதல் முறை ஜெபித்தான். அந்த ஜெபத்திற்கு பதில் கிடைத்தது. இயேசு இதைப் பற்றி பேசியபோது மத்தேயு 12:38–40இல் யோனா எவ்வாறு பெரிய மீனின் வயிற்றுக்குள் வைக்கப்பட்டிருந்தாரோ அதேபோல தானும் பூமியின் வயிற்றுக்குள் இருக்கப்போவதாக கூறினார்.

ஒரு ஜெப பலியை பாதாளத்தில் இருந்து ஏறெடுத்தார். தேவன் அந்த ஜெபத்தை கேட்டு அவருக்கு பதிலும் அளித்தார் (யோனா 2:7,9). அவருடய பிராணனை அழிவிலிருந்து தப்புவித்தார் (2:6). யோனா உயிருடன் வந்து ஜெபம் செய்த போது (2:1), அவர் தேவனுக்கு வழங்கிய ஒரே ஜெபம் எதிர் காலத்தில் யோனா 2:9இல் குறிப்பிடப்பட்டுள்ளது .

இதை தொடர்ந்து, யோனா நகரத்திற்குள் சென்று நாற்பது நாட்கள் பிரசங்கித்தார்:

யோனா 3:4

> யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒருநாள் பிரயாணம்பண்ணி: இன்னும் நாற்பதுநாள் உண்டு; அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான்.

அப்போஸ்தலர் 1:3

> அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்.

மீண்டும் இங்கு, யோனாவுக்கும் இயேசுவுக்கும் இடையிலான மற்றொரு ஒற்றுமையை காணலாம். இருவரும் நாற்பது நாட்கள் பிரசங்கித்தனர்!

யோனாவின் பிரசங்கத்தை தொடர்ந்து, நினிவே நகரத்து மக்கள் மனந்திரும்பினர்:

யோனா 3:10

> அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்.

இந்த பாடத்தில் இருந்து நாம் எதைக் கற்றுக்கொண்டோம் என்றால்:

- யோனா இறந்து பாதாளத்திற்கு சென்றார்.
- அவர் பெரிய மீனின் வயிற்றுக்குள் வைக்கப்பட்டிருந்தாரர்
- அவர் மூன்று நாட்களுக்கு பின்னர் மீண்டும் உயிர்த்தெழுந்தார்
- அவர் நினிவேவுக்கு வந்து மனந்திரும்புதலைக் குறித்து பிரசங்கித்தார்
- அவர் மக்களை மீண்டும் தேவனிடம் கொண்டு வந்தார்.

இயேசு மூன்று பகல் மற்றும் மூன்று இரவு கல்லறைக்குள் இறந்து அடக்கம் பன்னப்பட்டார். அவர் இந்த சமயத்தில் நரகத்துக்கு சென்று சுவிசேஷத்தை முதல் மற்றும் இரண்டாம் உலகிற்கு பிரசங்கம் செய்தார். அதற்கு பிறகு, அவர் உயிருடன் இருந்ததை நாற்பது நாட்களுக்கு பார்த்து, அவர் தேவனின் இராஜ்யத்தைக் குறித்து தன் அபோஸ்தளர்களுக்கு பிரசங்கித்தார்.

இயேசு இறக்காமல் இருந்திருந்தால், நம் பாவத்திற்கு மன்னிப்பு இல்லை. அவர் இறந்து உயிர்த்தெழுந்து தேவனின் வலது பாரிசத்தில் அமர்ந்தார். பழைய ஏற்பாட்டிலுள்ள யோனாவின் வாழ்க்கை இயேசுவின் இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன் நிழலாக அமைந்திருந்தது. இயேசு **இறந்து** அவருடைய உடல் அடக்கம் பன்னப்பட்டது போல, யோனாவும் **இறந்து** அவருடைய உடலும் மீனின் வயிற்றுக்குள் அடக்கம் பன்னப்பட்டது.

இயேசு மூன்று பகல் மற்றும் மூன்று இரவு பூமியின் ஆழத்தில் இருந்தது போல, யோனாவும் மூன்று பகல் மூன்று மற்றும் மூன்று இரவு மீனின் வயிற்றுக்குள் இருந்தார். இயேசு மூன்று நாட்களுக்கு பின் உயிர்த்தெழுந்தது போல, யோனாவும் உயிர்த்தெழுந்தார். அந்த மீனும் பின்னர் அவரை கரையோரத்தில் துப்பியது.

இயேசு தன் சீஷர்களுக்கு காட்சி கொடுத்து பிரசங்கித்து மேலும் நாற்பது நாட்கள் அவரை உயிருடன் கண்டது போல, யோனாவும் உயிர்த்திரும்பியதும் நாற்பது நாட்கள் பிரசங்கித்தார். இந்த அடையாளத்தை தான் இயேசு மத்தேயு 16:1–4இல் கூறியுள்ளார். இயேசு இறக்காமல் இருந்திருந்தால், யோனாவும் இறக்கவில்லை. யோனா பெயரின் விளக்கமான “புறா,” வாக்குறுதி செய்யப்பட்ட தேவனின் ஆவியை குறிப்பிடுகிறது – பரிசுத்த ஆவி – இயேசுவிற்கு யோவான் யோர்தான் நதியில் ஞானஸ்தானம் வழங்கிய பிறகு அவர் மீது முதலில் இறங்கினார். வானம்

திறக்கப்பட்டு வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, "இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன்.."

இப்பொது, யோனாவின் வாழ்வு இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் அனுபவிக்கும் உடன்படிக்கையை சிறப்பாக பிரதிபலிக்கிறது அல்லவா? யோனாவின் செய்தியின் மூலம் நினிவே மக்களுக்கு மனந்திரும்புதல் உண்டானது; இவ்வுலகுக்குரிய மக்களாகிய நமக்கு, இயேசுவின் இரத்தத்தின் மூலம் மனந்திரும்புதல் உள்ளது!

# பாடம் 10 – இயேசு வெள்ளிக்கிழமையில் மரிக்கவில்லை

*இயேசு தான்* **மூன்று பகல்** *மற்றும்* **மூன்று இரவு** *பூமியின் மையப் பகுதியில் இருக்கப் போவதாக சாட்சி கொடுத்தார் – ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம், புனித வெள்ளியை சிலுவையில் அறையப்பட்ட தினமாக கொண்டாட பழக்கமாகி விட்டோம். அப்படியானால் புனித வெள்ளிக்கும் உயிர்த்தெழுந்த நாளுக்கும் இடையிலான மூன்று பகல் மற்றும் மூன்று இரவு எங்கே உள்ளது? நாம் அதை தவறாக கேட்டு விட்டோமா?*

*மத்தேயு 12:38–40*

> *அப்பொழுது, வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி: போதகரே, உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள். அவர்களுக்குப் அவர் பிரதியுத்தரமாக: இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் <u>இரவும் பகலும் மூன்றுநாள்</u> பூமியின் இருதயத்தில் இருப்பார்.*

*நாம் மீண்டும் அடிப்படைக்கே செல்வோம். உண்மையான யூத நாளின் துவக்கமும் முடிவும் சூரியன் மறைவிலேயே இருக்கும், அதாவது மாலை 6 மணியிலிருந்து அடுத்த நாள் மாலை 6 மணி வரை (ஆதியாகமம் 1:5,8,13,19,23 & 31).*

*ஒரு நாளின் பகல் பொழுது 12 மணிநேரங்கள் ஆகும்.*

*யோவான் 11:9*

> *இயேசு பிரதியுத்தரமாக:* **<u>பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம்</u>** *இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான்.*

*பகல் 12 மணி நேரமும் அதைத் தொடர்ந்து இரவு 12 மணி நேரமும் கொண்டதே ஒரு நாள் என மேற்கூறிய வசனத்தில் இயேசு அழுத்திக் கூறுகிறார்.*

*இப்போது, நம் பழக்கத்தில் உள்ள முதல் குறைபாடு என்னவென்றால் இயேசு வெள்ளிக்கிழமை இரவு இறந்திருந்தால், இறப்புக்கும் பிறகு வாரத்தின் முதலாம் நாள் – ஞாயிற்றுக்கிழமையில் நடந்த உயிர்த்தெழுதலுக்கும் இடையில் இரண்டு இரவு மற்றும் ஒரு பகல் தான் உள்ளது. இதனால் தான் நமது காலத்தில் உள்ள மத வெறியர்கள் இயேசு இறக்கவில்லை எனவும் இயேசு ஒரு பொய்யன் எனவும் கூறி வருகின்றனர்.*

*இயேசு* **தான்** *மூன்று நாட்கள் கல்லறையினுள் புதைக்கப்பட்டும் மூன்று நாட்களுக்குப் பின் உயிர்த்தெழப் போவதாகவும் தெளிவாக கூறியுள்ளார். இயேசு தன் இறப்பையும் உயிர்த்தெழப்போவதையும் 14 முறை வேதவாக்கியங்களில் கூறியுள்ளார். அதில் 7 முறை பொது இடங்களிலும் மேலும் 7 முறை தனிப்பட்ட முறையில் தன் சீஷர்களிடம் கூறியுள்ளார்.*

| No. | வேதவாக்கியங்கள் | கூறிய இடம் |
|---|---|---|
| 1 | யோவான் 2:19 | தனிப்பட்ட |
| 2 | மத்தேயு 12:39–40 | தனிப்பட்ட |
| 3 | யோவான் 6:51 | தனிப்பட்ட |
| 4 | மத்தேயு 16:21; மாற்கு 8:31; மற்றும் லூக்கா 9:22 | பொது |
| 5 | மத்தேயு 17:9–12 | பொது |
| 6 | மத்தேயு 17:22–23; மாற்கு 9:31; மற்றும் லூக்கா 9:44 | பொது |
| 7 | யோவான் 10:17–18 | தனிப்பட்ட |
| 8 | லூக்கா 11:29–30 | தனிப்பட்ட |
| 9 | மத்தேயு 20:17–19; மாற்கு 10:32–34; மற்றும் லூக்கா 18:31–33 | பொது |
| 10 | மத்தேயு 20:28 | பொது |
| 11 | யோவான் 12:7–8 | தனிப்பட்ட |
| 12 | யோவான் 12:23–33 | தனிப்பட்ட |
| 13 | மத்தேயு 26:26–29; மாற்கு 14:22–25; மற்றும் லூக்கா 22:19–20 | பொது |
| 14 | மாற்கு 14:27–28 | பொது |

மேலும் வேதவாக்கியம், இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழப் போவதைப் பற்றி *14* முறை கூறியுள்ளது!

மத்தேயு *16:21*

> அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, **மூன்றாம் நாளில்** எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத்தொடங்கினார்.

மத்தேயு *17:23*

> அவர்கள் அவரைக்கொலை செய்வார்கள்; ஆகிலும் **மூன்றாம் நாளிலே** உயிர்த்தெழுந்திருப்பார் என்றார். அவர்கள் மிகுந்த துக்கமடைந்தார்கள்.

*மத்தேயு 20:19*

*அவரைப் பரியாசம்பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுப்பார்கள்; ஆகிலும்* ***மூன்றாம் நாளிலே*** *உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.*

*மத்தேயு 27: 62–63*

*ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து: ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது,* ***மூன்று நாளைக்குப்*** *பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது.*

*மாற்கு 8:31*

*அல்லாமலும், மனுஷகுமாரன் பலபாடுகள் பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு,* ***மூன்று நாளைக்குப்பின்பு*** *உயிர்த்தெழுந்திருக்கவேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத்தொடங்கினார்*

*மாற்கு 9:31*

*ஏனெனில், மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றும், அவர்கள் அவரைக் கொன்று போடுவார்கள் என்றும்; கொல்லப்பட்டு,* ***மூன்றாம் நாளிலே*** *உயிர்த்தெழுந்திருப்பார் என்றும் அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதகம்பண்ணிச் சொல்லியிருந்தார்.*

*மாற்கு 10:34*

*அவர்கள் அவரைப் பரியாசம்பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர்மேல் துப்பி, அவரைக் கொலைசெய்வார்கள்; ஆகிலும்* ***மூன்றாம் நாளிலே*** *அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.*

*லூக்கா 9:22*

*மேலும் மனுஷகுமாரன் பல பாடுகள்படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொல்லப்படவும்,* ***மூன்றாம்நாளில்*** *உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் என்று சொன்னார்.*

*லூக்கா 18:33*

*அவரை வாரினால் அடித்து, கொலை செய்வார்கள்;* ***மூன்றாம் நாளிலே*** *அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.*

*லூக்கா 24:7*

> *மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும்,* ***மூன்றாம்நாளில்*** *எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவுகூருங்கள் என்றார்கள்.*

*லூக்கா 24:46*

> *எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும்,* ***மூன்றாம்நாளில்*** *மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது.*

*யோவான் 2:19*

> *இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள்,* ***மூன்று நாளைக்குள்ளே*** *இதை எழுப்புவேன் என்றார்.*

*அப்போஸ்தலர் 10:40*

> ***மூன்றாம் நாளிலே*** *தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படிசெய்தார்.*

*1 கொரிந்தியர் 15:4*

> *அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி* ***மூன்றாம் நாளில்*** *உயிர்த்தெழுந்து,*

## யூதர்களின் நாட்கள்

| நாள் | யூதருக்குரிய நாள் | நவீன நாள் |
|---|---|---|
| முதலாம் நாள் | யோம் ரிஷோன் *(Yom Rishon)* | ஞாயிற்றுக்கிழமை |
| இரண்டாம் நாள் | யோம் ஷணி *(Yom Sheni)* | திங்கட்கிழமை |
| மூன்றாம் நாள் | யோம் ஷ்லிஷி *(Yom Shlishi)* | செவ்வாய்க்கிழமை |
| நான்காம் நாள் | யோம் ரேவி *(Yom Revi'i)* | புதன்கிழமை |
| ஐந்தாம் நாள் | யோம் சமிஷி *(Yom Chamishi)* | வியாழக்கிழமை |
| ஆறாம் நாள் | யோம் ஷிஷி *(Yom Shishi)* | வெள்ளிக்கிழமை |
| ஏழாம் நாள் | யோம் ஷபாத் *(Yom Shabbat)* | சனிக்கிழமை |

கிரேக்கர்கள் சூரியன், சந்திரன் மற்றும் அறியப்பட்ட ஐந்து கோள்களின் பெயரைக் கொண்டு வாரத்தின் நாட்களுக்கு பெயர் வைத்தனர். ஆனால் அவைகளுக்கோ கடவுள்களாகிய அரேஸ் *(Ares)*, ஹீர்மேஸ் *(Hermes)*, சியுஸ் *(Zeus)*, அப்ரோடைட் *(Aphrodite)* மற்றும் கிரோனுஸ் *(Cronus)* போன்றவைகளின் பெயர்களை வைத்தனர் . கிரேக்கர்கள் வாரத்தின் நாட்களை **தியோன் ஹெமேரைய்** *(Theon hemerai)* என அழைத்தனர். "தேவனின் நாட்கள்" *("days of the Gods")* என்பது அதன்

பொருள். ரோமர்கள் கிரேக்க கடவுள்களுக்கு பதிலாக அதற்கு இணையான தங்களுடைய கடவுள்களை வைத்தனர் – மார்ஸ் *(Mars)*, மெற்குரி *(Mercury)*, ஜோவ் *(Jove)* (ஜுபிடர் *(Jupiter)*), வீனஸ் *(Venus)*, மற்றும் ஸடன் *(Saturn)*. (இரண்டு கும்பலும் மிகவும் ஒத்திருக்கிறது). ஜெர்மானிய மக்களும் ரோமானிய கடவுளுக்கு இணையான தெய்வங்களை தோராயமாக மாற்றி வைத்தனர் – தியு *(Tiu)* (த்வியா *(Twia)*), வோடென் *(Woden)*, தோர் *(Thor)*, பிரேயா *(Freya)* (பிரியா *(Fria)*), ஆனால் ஸடனை *(Saturn)* மாற்றவில்லை.

**ஞாயிற்றுக்கிழமை**

ஆதி காலத்தில் கூறப்பட்ட செய்தி என்னவென்றால், தெற்கு ஐரோப்பாவில் ஆதியில் வசித்துவந்த பழங்குடியின மக்களால் வானத்தில் ஒவ்வொரு நாளும் தோன்றுகிற வெப்பமான ஒளி பந்தை என்னவென்று விளக்க முடியவில்லை. அதை தங்களுக்கு ஒரு பெரிய கடவுளே தந்திருக்க வேண்டும் என முடிவு செய்து அந்த வெப்பமான ஒளி பந்திற்கு சோல் (இலத்தின் மொழியில்) என பெயரிட்டனர். அவர்கள் இந்த ஒளி கடவுளை போற்றுவதற்கு வாரத்தின் ஒரு நாளின் பெயரை அந்த வெப்பமான ஒளி பந்தை குறிக்கும் விதமாய் சூட்டினர். அந்த நாளை டைஸ் சோலிஸ் *(dies solis)* என பெயரிட்டனர். இலத்தினில் "சூரியனின் நாள்" *("day of the sun")* என்று பொருள்.

பிறகு வட ஐரோப்பாவில் வாழும் மக்களும் இந்த ஒளி மிக்க பந்தை கௌரவிக்க முடிவு செய்து, இலத்தின் அல்லாத மொழியில், இந்த நாளை சன்னன்டேக் *(sunnandaeg)* என பெயரிட்டனர். இதற்கு "சூரியனின் நாள்" என்று பொருள். பல நாட்கள் கடந்து சன்னன்டேகை ஆங்கிலத்தில் சண்டே *(Sunday)* என அறியப்பட்டது.

**திங்கட்கிழமை:**

வானத்தில் இரவில் ஒளிரும் பந்தை இலத்தீனில் லூனா டைஸ் *(lunae dies)* என தெற்கு ஐரோப்பிய நாட்டில் அழைக்கப்பட்டது. வட ஐரோப்பாவில் இதை மோனா *(mona)* என அழைத்தனர். அவர்கள் அந்த நாளை மோனன் டேக் *(monan daeg)* என பெயரிட்டனர், இதற்கு ஆங்கிலத்தில் மண்டே *(Monday)* என்பது பொருள்.

**செவ்வாய்க்கிழமை:**

சில ஐரோப்பியர்கள் போர்களின் கடவுளான தியுவை *(Tiw)* நம்பினார்கள். அவருடைய பெயர் பல விதங்களில் அழைக்கப்பட்டது. தியு கடவுளை ஆராதித்த வீரர்களை அவர் வழிநடத்தியதாக அவர்கள் நம்பினார். கடவுள் தியு ஒரு உயரமான மலையின் மீது வாழ்ந்தார். எப்போதெல்லாம் ஒரு வீரன் போர்க்களத்தில் இறந்தானோ, அப்போதெல்லாம் தியு அழகான பெண்கள் குழுவுடன் பூமியில் இறங்கி இறந்துபோன போர்வீரனை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வார். தியுவை கௌரவப்படுத்த, வாரத்தின் ஒரு நாளை அவர் பெயரில் வைத்தனர். அந்த நாளை தியுவ்டேக் *(Tiwesdaeg)*, என அழைத்தனர். இதற்கு ஆங்கிலத்தில் டியூஸ்டே *(Tuesday)* என்பது பொருள்.

**புதன்கிழமை:**

வட ஐரோப்பாவில் வாழ்ந்த சில குறிப்பிட்ட குலத்தைச் சேர்ந்தவர்கள் பல கடவுள்களிலும் தெய்வங்களிலும், குறிப்பாக வைக்கிங்கின் *(Vikings)* மீது நம்பிக்கை கொண்டனர். ஆனால் வோடென் *(Woden)* என்ற தெய்வம் மற்ற எல்லாவற்றிற்கும் மேலான சக்தியைக் கொண்டிருந்தது என்பதை இந்த பூர்வீக ஜனங்கள் நம்பினார்கள். வோடென் *(Woden)* எல்லாவற்றைக் காட்டிலும் புத்திசாலித்தனத்தை

அதிகம் வாஞ்சித்தார். அதனால் அவர் உலகம் முழுவதும் ஞானத்தை தேடி பயணித்தார் என புராணக்கதை சொல்கிறது. ஞானத்தையும் அறிவையும் பெறுவதற்காக, அவர் தனது கண்களில் ஒன்றை கொடுக்க வேண்டியிருந்தது.

இதை செய்த பிறகு, அவர் தனது காணாமல் போன கண்னை மறைப்பதற்கு நெகிழ வைக்கும் ஒரு பெரிய தொப்பியை அணிந்திருந்தார். வோடென் *(Woden)* பயணிக்கும் போது, தனது தோள்களின் மேல் இரு கருப்பு பறவைகளை சுமந்து சென்றார். அவைகள் அவரது உளவாளிகளாக செயல்பட்டன. இரவில் அவைகள் மக்களை பற்றிய தகவல்களை சேகரிக்க பூமிக்கு பறந்து சென்று, ஒவ்வொரு காலையிலும் தங்கள் எஜமானரிடம் திரும்பி வந்து அறிக்கை கொடுத்தது. பூமியில் நடக்கும் அனைத்தும் வோடெனுக்கு *(Woden)* எப்போதும் தெரிந்திருக்கும் மேலும் வோடெனின் *(Woden)* மறுத்துவிடுவாரோ என்கிற அச்சத்தினால் பல விஷயங்கள் ரகசியமாக செய்ய நேரிடும். வோடெனை *(Woden)* கௌரவப்படுத்த, வாரத்தின் ஒரு நாளை மக்கள் அவர் பெயரில் வைத்தனர். அந்த நாளை வோட்னேஸ் டேக் *(Wodnesdaeg),* என அழைத்தனர். இதற்கு ஆங்கிலத்தில் வோட்னேஸ்டே *(Wednesday)* என்பது பொருள்.

**வியாழக்கிழமை:**

வட ஐரோப்பாவில் இருந்த மக்களுக்கு இடியும் மின்னலும் என்னவென்று அறியாத போது, மின்னலையும் உரத்த இடியையும் ஒரு கோபமான கடவுளாலே ஏற்பட்டிருக்க வேண்டும் என அவர்கள் முடிவு செய்தனர். ஆனால் இந்த கடவுளுக்கு ஒரு பெயர் வேண்டுமே. அதனால் அவருக்கு தோர் *(Thor)* என பெயரிட்டனர். நீங்கள் வாலாட்ட விரும்பாத ஒரு கடவுள் அவர்.

இடி கடுமையாக இருந்தால், தோர் *(Thor)* கோபமாக தன்னுடைய பெரிய சுத்தியலை வானத்திலே தூக்கி எறிகிறார் என கூறினார்கள். இது மின்னலை ஆத்திரத்தில் நடனமாட வழிவகுத்தது. தோர் *(Thor)* நிதானம் இழந்து வெறி பிடித்து வானில் எறியும் போது, அவர் இரண்டு ஆடுகள் பூட்டிய ஒரு பாரவண்டி *(wagon)* அல்லது இரதத்தில் சவாரி செய்தார். இடியை கர்ஜிக்கும் படியான சத்தத்தை அந்த சக்கரங்கள் ஏற்படுத்தின. தோரை *(Thor)* கௌரவப்படுத்த, வாரத்தின் ஒரு நாளை மக்கள் அவர் பெயரில் வைத்தனர். அந்த நாளை தற்ஸ்டேக் *(Thuresdaeg),* என அழைத்தனர். இதற்கு ஆங்கிலத்தில் தற்ஸ்டே *(Thursday)* என்பது பொருள்.

**வெள்ளிக்கிழமை:**

பிரிக் *(Frigg)* ஒரு அன்பான மற்றும் அழகான பெண் கடவுள். அவரை மிக சக்தி வாய்ந்த கடவுளான ஒடினை *(Odin)* திருமணம் செய்து கொண்டார். பிரிக் *(Frigg)* தனது சிம்மாசனத்தில் ஒடினுக்கு *(Odin)* அடுத்து அமர்ந்திருந்தார், மேலும் அவர்கள் உலகெங்கும் நடக்கும் நிகழ்வுகளை கவனித்தனர். பிரிக் *(Frigg)* இயற்கையின் தேவி, மிகச்சிறிய குக்கிராமம் துவங்கி காடு வரை எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி வந்தாள். இதைத் தவிர பிரிக் *(Frigg)* காதல் மற்றும் திருமணத்தின் தெய்வம். அவள் இந்த இரண்டு வேலைகளை செய்தாள். மக்கள் அவளை மிகவும் நேசித்து வாரத்தின் ஒரு நாளை அவள் பெயரில் வைத்தனர். அந்த நாளை பிரைக்டேக் *(Frigedaeg),* என அழைத்தனர். இது பிரைடேவாக *(Friday)* மாறியது.

**சனிக்கிழமை:**

*நீண்ட காலத்திற்கு முன் பெரிய ரோம சாம்ராஜ்யத்தின் நாட்களில், ஸடன் (Saturn) என்ற பெயர் கொண்ட தேவன் விவசாய நிலத்தை ஆண்டு வந்தார். மக்களைப் பொறுத்தவரையில், ஸடனிடம் (Saturn) வானிலையின் மீது கட்டுப்பாடு இருந்தது மற்றும் அவர் மகிழ்ச்சியாக இருந்தால் அதை நல்லதாகவும் அல்லது அவர் கோபமாக இருந்தால் அதை கெட்டதாகவும் செய்ய அவரால் முடியும். ஒவ்வொரு கிராமத்திற்கும் எவ்வளவு மழை கிடைக்க வேண்டும் என்பதை ஸடனே (Saturn) முடிவு செய்வார். அவர்கள் அவரைப் பிரியப்படுத்தாவிட்டால் அவர்களுக்கு ஒருவேளை ஒன்றும் கிடைக்காமலும் போகும்.*

*இக்காலத்திற்கு முன், ரோம விவசாயி தனது பயிருக்காக நல்ல வானிலையை தருமாறு ஸடனிடம் (Saturn) கேட்பான். ஸடனை (Saturn) பிரியப்படுத்த ஒரு மிருக்கத்தை பலியிட வேண்டுமென அவர்கள் நம்பினார். தேவன் அதை ஏற்றுக்கொண்டால், விவசாயிகளுக்கு ஏற்றபடி அவர் அந்த வானிலையை நல்லதாக்குவார். ஸடனிடம் (Saturn) கூடுதலான புள்ளிகள் பெரும் பொருட்டு, ஒரு கோளின் பெயரோடு வாரத்தின் ஒரு நாளின் பெயரையும் மக்கள் அவர் பெயரில் வைத்தனர். அந்த நாளை "ஸடனி டைஸ்" (Saturni dies), என அழைத்தனர். இதற்கு இலத்தினில் "ஸடனின் நாள்" (day of Saturn) என்றும் ஆங்கிலத்தில் ஸடர்டே (Saturday) ஆக மாறியது.*

**இந்த நாளின் பெயர்களை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் இது நிச்சயமாக உங்கள் வேதாகமத்தில் இருக்காது!!**

**எபிரேய மாதங்கள்**

| **யூத மாதம்** | **தோராயமான உலக வழக்க மாதங்கள்** | **சிறப்பு பண்டிகை** |
|---|---|---|
| *நிசான் (Nissan)* | *மார்ச் – ஏப்ரில் (March–April)* | பஸ்கா *(Passover)* |
| *ஐயற் (Iyar)* | *ஏப்ரில் – மே (April–May)* | லேக் பி'ஓமர் *(Lag B'Omer)* |
| சிவன் *(Sivan)* | மே – ஜூன் *(May–June)* | ஷவோட் *(Shavuot - Pentecost)* |
| *தம்மூஸ் (Tammuz)* | ஜூன் – ஜூலை *(June–July)* | |
| மேனசெம் அவ் *(Menachem Av)* | ஜூலை – ஆகஸ்ட் *(July–August)* | திஷா பி'அவ் *(Tisha B'Av)* |
| எலுல் *(Elul)* | ஆகஸ்ட் – செப்டம்பர் *(August–September)* | |
| திஸ்ரெய் *(Tishrei)* | செப்டம்பர் – அக்டோபர் *(September–October)* | ரோஷ் ஹஷனாஹ் *(Rosh Hashanah)* மற்றும் யோம் கிபுர் *(Yom Kipur)*, சுக்கோத் *(Sukkot)* |

| **யூத மாதம்** | **தோராயமான உலக வழக்க மாதங்கள்** | **சிறப்பு பண்டிகை** |
|---|---|---|
| மார்செஸ்வன் *(Marchesvan)* | அக்டோபர் – நவம்பர் *(October–November)* | |
| கிஸலேவ் *(Kislev)* | நவம்பர் – டிசம்பர் *(November–December)* | சநூக்காஹ் *(Chanukah)* |
| டிவேட் *(Tevet)* | டிசம்பர் – ஜனவரி *(December–January)* | சநூக்காவின் முடிவு *(Conclusion of Chanukah)* |
| ஷீவட் *(Shevat)* | ஜனவரி – பிப்ரவரி *(January–February)* | து பி'ஷ்வட் *(Tu B'Shvat)* |
| அடார் *(Adar)* | பிப்ரவரி – மார்ச் *(February–March)* | பூரீம் *(Purim)* |

இயேசு எப்போது மரித்து உயிர்த்தெழுந்தார் என்பதை கண்டறிவதற்கு முதலில் அவர் எப்போது இறந்தார்? என்பதை நிலைநாட்ட வேண்டும்.

எல்லா சுவிசேஷமும் மதச்சார்பற்ற பதிவுகளும் இயேசு பஸ்கா நாளில் சிலுவையில் அறையப்பட்டார் என்பதை உறுதிப்படுத்துகிறது.

அதனால், வேத வாக்கியத்தின் படி பஸ்கா எப்போது நடைபெறும் என்பதை பார்க்கலாம்!

### பஸ்கா: முதலாம் மாதத்தின் – நிசான் 14ஆம் நாள் மாலை

எகிப்தில் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை விடுவிக்க கடவுளால் ஆரம்பிக்கப்பட்ட முதல் பஸ்கா,

*யாத்திராகமம் 12:2,3 &6*,

> இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாய் இருப்பதாக. நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவர்கள். அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து,

*லேவியராகமம் 23:5*,

> முதலாம் மாதம் பதினாலாம் தேதி அந்திநேரமாகிற வேளையிலே கர்த்தரின் பஸ்காபண்டிகையும்;

*எண்ணாகமம் 9:2-5,*

> *குறித்த காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்கக்கடவர்கள். இந்த மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமான வேளையாகிய குறித்த காலத்தில் அதை ஆசரிக்கக்கடவீர்கள்; அதற்குரிய எல்லாக் கட்டளையின்படியேயும் முறைமைகளின்படியேயும் அதை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார். அப்படியே பஸ்காவை ஆசரிக்கும்படி மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிட்டான். அதினால் முதலாம் மாதம் பதினான்காம் தேதி அந்திநேரமான வேளையில், சீனாய் வனாந்தரத்தில் பஸ்காவை ஆசரித்தார்கள்; கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்.*

*எண்ணாகமம் 28:16,*

> *முதலாம் மாதம் பதினாலாம் தேதி கர்த்தருக்கு உரிய பஸ்கா.*

*யோசுவா 5:10*

> *இஸ்ரவேல் புத்திரர் கில்காலிலே பாளயமிறங்கியிருந்து, மாதத்தின் பதினாலாம் தேதி அந்திநேரத்திலே எரிகோவின் சமனான வெளிகளிலே பஸ்காவை ஆசரித்தார்கள்.*

*இயேசுவும் பஸ்கா நாளிலே சிலுவையில் அறையப்பட்டார்,*

*யோவான் 18:28*

> *அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டுபோனார்கள்; அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள்.*

***ஓய்வுநாள் (சாபத்) பஸ்கா தினம் அல்ல என்பதை மறந்துவிடாதீர்கள்!!***

*பஸ்கா நாள் என்ற தலைப்பின் கீழ் இந்த நிகழ்வுகைக் குறித்து விளக்கமாக நாம் பார்த்துள்ளோம். நீங்கள் பார்க்கவில்லை என்றால் தயவுசெய்து பஸ்கா நாள் குறிப்புகளை பார்க்கவும்!*

***இயேசுவுடனான சிலுவைப் பயணத்தை மீண்டும் இங்கு பார்ப்போம் – கடைசி ஆறு நாட்கள் – பின்னோக்கு வரிசையில் மீண்டும் ஒரு பார்வை!***

## இயேசுவுடனான பயணம் – கடைசி ஆறு நாட்கள் – மீண்டும் ஒரு பார்வை

### பஸ்காவிற்கு ஆறு நாட்களுக்கு முன்னர்

*உண்மையில், நமக்கு ஐந்து நாட்கள் என்பது யூத நாட்கள் முறையின் படி உண்மையில் ஆறு நாட்கள் – அவர்களுடைய தினம் மாலை ஆறு மணி அளவில் துவங்கி அடுத்த நாள் மாலை ஆறு மணி அளவில் முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.*

*இயேசு எரிகோவிலிருந்து பெத்தானியாவுக்கு வந்து அடுத்த நாள் எருசலேமேக்கு செல்வதற்கு முன் லாசரு, மரியாள், மார்த்தாளின் வீட்டில் இரவு தங்கினார். பெத்தானியாவுக்கு வருவதற்கு முன்,*

*சகியுவை (Zacchaeus) சந்தித்து அவனுடன் போஜனம் செய்தார். அதை தொடர்ந்து குருடனான பர்த்திமேயுவை (Bartimaeus) சுகப்படுத்தி முடிவில் பெத்தானியாவுக்கு வந்தார்.*

*யோவான் 12:1*

> <u>பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்குமுன்னே</u> இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார்.

| **பஸ்கா நாட்கள்** | **எபிரேய தேதி** | **நாள்** | **முக்கிய நிகழ்வுகள்** | **வேதவாக்கிய குறிப்புகள்** |
|---|---|---|---|---|
| பஸ்காவிற்கு ஆறு நாட்களுக்கு முன்னர் | நிசானின் 8ஆம் நாள் | வியாழக் கிழமை | இயேசு பெத்தானியாவுக்கு வந்தார் | யோவான் 12:1 |
| பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் | நிசானின் 9ஆம் நாள் | வெள்ளிக் கிழமை | வெற்றிப்பிரவேசம் பெத்தானியாவிலிருந்து எருசலேம் | மத்தேயு 21:1–11<br>மாற்கு 11:1–11 (வசனம் 11)<br>லூக்கா 19:29–44<br>யோவான் 12:12 |
| பஸ்காவிற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் | நிசானின் 10ஆம் நாள் | சனிக்கிழமை | சனிக்கிழமை இரவு பெத்தானியாவிலேயே தங்கினார் | மாற்கு 11:11–18<br>லூக்கா 19:45–46<br>யோவான் 12:20–38<br>மத்தேயு 21:18–19 |
| பஸ்காவிற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் | நிசானின் 11ஆம் நாள் | ஞாயிற்றுக்கிழமை | பெத்தானியாவிலிருந்து எருசலேம்<br>இயேசு அத்தி மரத்தை சபித்தார் | மத்தேயு 21:18–19 முதல் 25:46 வரை<br>மாற்கு 11:11–18 (12–14), 13:37<br>லூக்கா 20:1–21:36<br>மாற்கு 11:19 |
| பஸ்காவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் | நிசானின் 12ஆம் நாள் | திங்கட்கிழமை | பெத்தானியாவிலிருந்து எருசலேம்<br>பெத்தானியாவிலேயே இரவு தங்கினார் | மத்தேயு 26:1–16<br>மாற்கு 14:1–11<br>மாற்கு 14:1,3 & 12<br>லூக்கா 22:1–3 |

| பஸ்கா நாட்கள் | எபிரேய தேதி | நாள் | முக்கிய நிகழ்வுகள் | வேதவாக்கிய குறிப்புகள் |
|---|---|---|---|---|
| பஸ்காவிற்கு முந்தய நாள் | நிசானின் 13ஆம் நாள் | செவ்வாய்க்கிழமை | பெத்தானியாவிலிருந்து எருசலேம்<br>பஸ்கா மாலையில் ஆரம்பம்<br>கெத்செமனேயில் ஜெபம்<br>பிரதான ஆசாரியர்களால் விசாரனை<br>இயேசுவை பேதுரு வேலைக்கார பெண்ணிடம் மறுதலித்தான் | மாற்கு 14:12,17<br>மாற்கு 14:46<br>லூக்கா 22:7–53 |
| பஸ்கா | நிசானின் 14ஆம் நாள் | புதன்கிழமை | காலையில் ஏரோது மற்றும் பிலாத்துவின் விசாரணை<br>பஸ்கா திருநாள் காணிக்கை, இயேசு சிலுவையில் அறையப்பட்டார்<br>அவர் 6ஆம் மணி அளவில் சிலுவையில் அறையப்பட்டார்<br>அவர் 9ஆம் மணி அளவில் இறந்தார்<br>அவரை மாலையில் அடக்கம் பண்ணினார் | மாற்கு 15:1<br>மாற்கு 15:25<br>மாற்கு 15:33–34 |
| புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் முதல் நாள் | நிசானின் 15ஆம் நாள் | வியாழக்கிழமை | வருடாந்திர ஷாபாத் தினம் | யாத்திராகமம் 12:14–16<br>யாத்திராகமம் 12:18<br>லேவியராகமம் 23:6-8<br>எண்ணாகமம் 28:17-18<br>உபாகமம் 16:7–8 |
| | | | விருந்துக்கு முன் பாவம் செய்ததால் தொங்கப்பட்டு இறந்த நபரைப் பற்றி | உபாகமம் 21:22-23,<br>லூக்கா 23:53–54<br>மாற்கு 15:42<br>மத்தேயு 27:62<br>யோவான் 19:31 & 42 |
| | நிசானின் 16ஆம் நாள் | வெள்ளிக்கிழமை | ஸ்த்திரீகள் நறுமணப் பொருள்களை ஆயத்தம் பண்ணினர் | லூக்கா 23:55–56<br>மாற்கு 16:1 |

| பஸ்கா நாட்கள் | எபிரேய தேதி | நாள் | முக்கிய நிகழ்வுகள் | வேதவாக்கிய குறிப்புகள் |
|---|---|---|---|---|
| வழக்கமான ஷபாத் | நிசானின் 17ஆம் நாள் | சனிக்கிழமை | அவர்கள் ஓய்வெடுத்தனர் | லூக்கா 23:55–56 |
| வாரத்தின் முதல் நாள் | நிசானின் 18ஆம் நாள் | ஞாயிற்றுக்கிழமை | உயிர்த்தெழும் நாள் | மத்தேயு 28:1-15<br>மாற்கு 16:1-14<br>லூக்கா 24:1-49<br>யோவான் 20:1-23 |

**நிசான் மாதம்**

### பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர்

*நிசானின் 9ஆம் நாள் – வெள்ளிக்கிழமை*

வெற்றிப்பிரவேசம்

பெத்தானியாவிலிருந்து எருசலேம்

மத்தேயு 21:1–11

மாற்கு *11:1–11 (வசனம் 11)*

லூக்கா *19:29–44*

யோவான் *12:12*

*10ஆம் நாள் – சனிக்கிழமை*

*(குறிப்பு: இதன் விரிவான ஆய்வை பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் என்ற தலைப்பின் கீழ் உள்ளன)*

### பஸ்காவிற்கு நான்கு நாட்களுக்கு முன்னர்

*நிசானின் 10ஆம் நாள் - சனிக்கிழமை*

சனிக்கிழமை இரவு பெத்தானியாவிலேயே தங்கினார்

மாற்கு *11:11–18*

லூக்கா *19:45–46*

யோவான் *12:20–38*

மத்தேயு *21:18–19*

*(குறிப்பு: இதன் விரிவான ஆய்வை பஸ்காவிற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் என்ற தலைப்பின் கீழ் உள்ளன)*

**பஸ்காவிற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்**

*நிசானின் 11ஆம் நாள் – ஞாயிற்றுக்கிழமை*

பெத்தானியாவிலிருந்து எருசலேம்
இயேசு அத்தி மரத்தை சபித்தார்

மத்தேயு *21:18–19* முதல் *25:46* வரை

*மாற்கு 11:11–18 (12–14), 13:37*

லூக்கா *20:1–21:36*

*மாற்கு 11:19*

*(குறிப்பு: இதன் விரிவான ஆய்வை பஸ்காவிற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் என்ற தலைப்பின் கீழ் உள்ளன)*

**பஸ்காவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்**

*நிசானின் 12ஆம் நாள் – திங்கட்கிழமை*

பெத்தானியாவிலிருந்து எருசலேம்
*மத்தேயு 26:1–16*

*மாற்கு 14:1–11*

பெத்தானியாவிலேயே இரவு தங்கினார்

*மாற்கு 14:1,3 & 12*

*லூக்கா 22:1–3*

*(குறிப்பு: இதன் விரிவான ஆய்வை பஸ்காவிற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் என்ற தலைப்பின் கீழ் உள்ளன)*

**பஸ்காவிற்கு முந்தய நாள்**

*நிசானின் 13ஆம் நாள் – செவ்வாய் க்கிழமை*

பெத்தானியாவிலிருந்து எருசலேம்

பஸ்கா மாலையில் ஆரம்பம்

*மாற்கு 14:12,17*

கெத்செமனேயில் ஜெபம்

*மாற்கு 14:46*

பிரதான ஆசாரியர்களால் விசாரனை

இயேசுவை பேதுரு வேலைக்கார பெண்ணிடம் மறுதலித்தான்

*லூக்கா 22:7–53*

*(குறிப்பு: இதன் விரிவான ஆய்வை பஸ்காவிற்கு முந்தய நாள் என்ற தலைப்பின் கீழ் உள்ளன)*

***பஸ்கா***

*நிசானின் 14ஆம் நாள் – புதன்கிழமை*

*காலை ஏரோது மற்றும் பிலாத்துவின் விசாரணை*

*பஸ்கா திருநாள் காணிக்கை, இயேசு சிலுவையில் அறையப்பட்டார்*

*மாற்கு* 15:1

*அவர் 6ஆம் மணி அளவில் சிலுவையில் அறையப்பட்டார்*

*மாற்கு* 15:25

*அவர் 9ஆம் மணி அளவில் இறந்தார்*

*மாற்கு* 15:33–34

*அவரை மாலையில் அடக்கம் பண்ணினார்*

*(குறிப்பு: இதன் விரிவான ஆய்வை பஸ்கா என்ற தலைப்பின் கீழ் உள்ளன)*

*நிசானின் 15ஆம் நாள் – வியாழக்கிழமை*

***வருடாந்திர ஓய்வு நாள் (ஷாபாத்)***

***புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் முதல் நாள்***

***புளிப்பில்லாத அப்பம்: நிசானின் 15ஆம் நாள்***

*யாத்திராகமம் 12:14–16*

> *அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது; அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள். புளிப்பில்லா அப்பத்தை ஏழு நாளளவும் புசிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளில்தானே புளித்த மாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும்; முதலாம் நாள் தொடங்கி ஏழாம் நாள் வரைக்கும் புளித்தஅப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரவேலரிலிருந்து அறுப்புண்டு போவான். முதலாம் நாளில் பரிசுத்த சபை கூடுதலும், ஏழாம் நாளிலும் பரிசுத்தசபை கூடுதலும் இருக்கவேண்டும்; அவைகளில் ஒரு வேலையும் செய்யப்படலாகாது; அவரவர் சாப்பிடுகிறதற்குத் தேவையானது மாத்திரம் உங்களால் செய்யப்படலாம்.*

*யாத்திராகமம் 12:18*

> *முதலாம் மாதம் பதினாலாம் தேதி சாயங்காலம் தொடங்கி மாதத்தின் இருபத்தோராம் தேதி சாயங்காலம் வரைக்கும் புளிப்பில்லா அப்பம் புசிக்கக்கடவீர்கள்.*

*லேவியராகமம் 23:6-8*

*<u>அந்த மாதம் பதினைந்தாம் தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லா அப்பப் பண்டிகையுமாய் இருக்கும்</u>; ஏழுநாள் புளிப்பில்லா அப்பங்களைப் புசிக்கவேண்டும்முதலாம் நாள் உங்களுக்குப் பரிசுத்தமான சபைகூடுதல்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேண்டாம். ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலியிடவேண்டும்; <u>ஏழாம்நாள் பரிசுத்தமான சபைகூடுதல்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது</u> என்று சொல் என்றார்.*

*எண்ணாகமம் 28:17-18*

*<u>அந்த மாதம் பதினைந்தாம் தேதி பண்டிகைநாள்</u>; ஏழுநாளளவும் <u>புளிப்பில்லாத அப்பம்</u> புசிக்கவேண்டும். <u>முதலாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும்; அன்றைத்தினம் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது</u>.*

*உபாகமம் 16:7–8*

*உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தானத்திலே, அதைப்பொரித்துப் புசித்து, <u>விடியற்காலத்திலே</u> உன் கூடாரங்களுக்குத் திரும்பிப்போவாயாக. நீ ஆறுநாளும் புளிப்பில்லாத அப்பம் புசிக்கவேண்டும்; <u>ஏழாம் நாள்</u> உன் தேவனாகிய கர்த்தருக்கு <u>ஆசரிக்கப்படும் நாளாயிருக்கும்</u>; அதிலே யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.*

*விருந்துக்கு முன் பாவம் செய்ததால் தொங்கப்பட்டு இறந்த நபரைப் பற்றி,*

*உபாகமம் 21:22-23,*

*கொலைசெய்யப்பட ஒருவன்மேல் சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலைசெய்யும்படி மரத்திலே தூக்கிப்போடுவாயானால்,* **<u>இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது</u>***; <u>அந்நாளிலேதானே அதை அடக்கம்பண்ணவேண்டும்</u>; தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்; ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் தீட்டுப்படுத்தாயாக.*

*லூக்கா 23:53–54*

*அதை இறக்கி, மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாததுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான். அந்த நாள் <u>ஆயத்தநாளாயிருந்தது</u>; ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று.*

*மாற்கு 15:42*

*ஓய்வுநாளுக்கு முந்தின நாள் ஆயத்தநாளாயிருந்தபடியால், சாயங்காலமானபோது,*

*மத்தேயு 27:62*

> *<u>ஆயத்தநாளுக்குப்</u> பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து:*

*யோவான் 19:31 & 42*

> *அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.*
>
> *யூதருடைய ஆயத்தநாளானபடியினாலும், அந்தக் கல்லறை சமீபமாயிருந்தபடியினாலும், அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள்.*

*இந்த ஷபாத் வழக்கமான ஒன்று அல்ல. ஆனால் இது பெரிய ஷபாத் (great Sabbath) அல்லது பெரிய ஓய்வு நாள் (High Day), இதை கிரேக்க மொழியில் "யோம்-டோவ்" ("yom-tov") என அழைப்பர். நல்ல நாள் என்பது இதன் பொருள்.*

***<u>அதனால்</u>, நிசான் மாதத்தின் 15ஆம் நாள் புளிப்பில்லா அப்பப்பண்டிகை விருந்து (Fest of the Unleavened Bread) அதாவது வருடாந்திர ஷபாத் (annual Sabbath)! அல்லது பெரிய ஓய்வு நாள் (High Day)!***

*ஆகையால், யூதர்கள் பஸ்கா பண்டிகை முடிவதற்குள்ளும் மேலும் நிசானின் 15ஆம் நாளில் வரும் வருடாந்திர ஷபாத் (annual Sabbath) துவங்குவதற்கு முன் இயேசுவை அடக்கம் செய்ய விரும்பினார்கள்!*

### *ஸ்த்திரீகள் நறுமனப்பொருள்களை ஆயத்தம் பண்ணினர்*

*நிசானின் 16ஆம் நாள் – வெள்ளிக்கிழமை*

*லூக்கா 23:55–56*

> *கலிலேயாவிலிருந்து அவருடனே கூட வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து, <u>திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் ஆயத்தம்பண்ணி</u>, கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.*

*மாற்கு 16:1*

> *<u>ஓய்வுநாளான பின்பு</u> மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும், அவருக்குச் சுகந்தவர்க்கமிடும்படி அவைகளை வாங்கிக்கொண்டு,*

*இது வருடாந்திர ஷபாத் (annual Sabbath) என்பதால், அவர்களால் நறுமணப்பொருள்களை வாங்கவும் அதைச் செய்யவும் முடியவில்லை. எனவே, வெள்ளிக்கிழமை அன்று இயேசுவின் சரீரத்தின் மீது வைப்பதற்காக மட்டுமே அவ்வாறு செய்தனர். அவர்கள் இதை சனிக்கிழமையும் செய்திருக்க*

*முடியாது. ஏனெனில் அது அவர்களுடைய வழக்கமான ஷபாத். இதனால் வெள்ளிக்கிழமையே நறுமணப்பொருள்களை வாங்கினார்கள்.*

*நிசானின் 17ஆம் நாள் – சனிக்கிழமை*

***வழக்கமான ஷாபாத்***

*அவர்கள் ஓய்வெடுத்தனர்*

*லூக்கா 23:55–56*

> *கலிலேயாவிலிருந்து அவருடனே கூட வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து, திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் ஆயத்தம்பண்ணி, கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.*

*நிசானின் 18ஆம் நாள் – ஞாயிற்றுக்கிழமை*

***உயிர்த்தெழும் நாள்***

## மூன்று முறை தோன்றினார்

*மத்தேயு 28:1-6*

> *ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்துவருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்;*

*என்.கே.ஜே.வி. (NKJV) மற்றும் மற்ற மொழிபெயர்ப்புகள் வாரம் முதல் நாள் என மிக தெளிவாகக் கூறுகின்றன!*

*மாற்கு* 16:9–14

*லூக்கா* 24:21 & 46

பெத்தானியாவுக்கு திரும்பினார் – *லூக்கா* 24:50

*அவர் வாரத்தின் முதல் நாள் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பது இப்போது உங்களுக்கு தெரியும். அது இப்போது ஞாயிற்றுக்கிழமை. இயேசு புதன்கிழமை அன்று*

சிலுவையில் அறையப்பட்டார் என்பதைத் மெய்யாக தெரிந்துகொள்ள நீங்கள் மறுகணக்கிடு செய்யலாம்!

நிசான் மாதத்தின் 14ஆம் நாள்!

நிசானின் 19ஆம் நாள் – திங்கட்கிழமை

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் ஐந்தாம் நாள்

உபாகமம்: 16:7–8

நிசானின் 20ஆம் நாள் – செவ்வாய்க்கிழமை

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் ஆறாம் நாள்

யாத்திராகமம் 12:15

நிசானின் 21ஆம் நாள் – புதன்கிழமை

**புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் ஏழாம் நாள்**

ஷபாத் அல்லது பெரிய ஓய்வு நாள் *(High Day)*

லேவியராகமம் 23:8

அந்த மேலே உள்ள புகைப்படத்தில் இருந்து, நாம் தெளிவாக புரிந்துகொள்கிறோம்:

- இயேசு பஸ்கா தினமான, புதன்கிழமை அன்று இறந்தார்
- அதற்கு மறு நாளான வியாழக்கிழமையில் பெரிய ஓய்வு நாள் அல்லது புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் முதல் நாளின் வருடாந்திர ஷபாத்

பின்னர், வேலை நாள் – வெள்ளிக்கிழமை – பெண்கள் இயேசுவின் உடலுக்கு அபிஷேகம் செய்வதற்காக நறுமணப் பொருள்களையும் வாசனை திரவியங்களையும் வாங்கச் சென்றனர்.

- அடுத்த நாளாகிய சனிக்கிழமையில் வாரத்தில் வழக்கமாக வரும் ஷபாத் ஆகும்
- உயிர்த்தெழுதல் சனிக்கிழமை இரவு நடைபெற்றது, ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் கல்லறை காலியாக இருந்தது! அல்லேலூயா!!
- இவ்வாறாக வேதாகமத்தில் பல முறை கூறப்பட்ட மூன்று பகல் மற்றும் மூன்று இரவு தீர்க்கதரிசனத்தை இயேசு நிறைவேற்றினார்.

**ஒரு சிறிய ஆலோசனை**

*இப்பொழுது நீங்கள் இந்த உண்மையை அறிந்து கொண்டீர்கள். இந்த உண்மையை அறியாத மக்கள் மீது நீங்கள் சிறிது அன்பை காட்ட முடியுமா? இதை குறித்து மிகுந்த பெருமை கொள்ளாதிருங்கள். கடவுள், அவரது மிகப் பெரிய கருணையினால், இந்த உண்மைகளை நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். அதனால் இந்த உண்மையைப் பற்றி மற்றவர்களுக்கு* **அன்போடு** *தெரியப்படுத்துவதே நம்முடைய பொறுப்பு; அவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பரவாயில்லை, ஆனால் கிறிஸ்துவினுடைய அன்பை அவர்களுக்கு காண்பியுங்கள், ஒவ்வொரு வகையிலும் கிறிஸ்துவைப் போன்ற குணாதிசயங்களை அனைவரிடமும் காண்பியுங்கள்.*

1 கொரிந்தியர் 8:1 என்ன சொல்கிறது என்பதை நினைவில் வையுங்கள்:

> *அறிவு இறுமாப்பை உண்டாக்கி தங்களை தாங்களே தாங்கிக் கொண்டு பெருமை பாராட்டும், ஆனால் அன்பும் பாசமும் மற்றும் நல்லெண்ணமும் இரக்கமும் பக்திவிருத்தியை உண்டாக்கி மேலும் ஒருவனை முழுமையாக உருவாக்க ஊக்குவிகிறது.*

*"நான் உங்களுடன் உடன்பட வேண்டும் என்பது சகிப்புத்தன்மை அல்ல. நான் உங்களுடன் உடன்படவில்லை என்றாலும் எப்போதும் நான் உங்களை மதிக்கிறேன் என்பதே சகிப்புத்தன்மை ஆகும். நாம் இதை பராமரிக்க வேண்டும்."* – யாரோ ஒருவர்

# பாடம் *11* – இயேசுவின் மரணமும், உயிர்த்தெழுதலும் அதற்கு இடையில் நடைபெறும் அனைத்து காரியங்களும்

*இயேசு பஸ்கா நாளில் முழு உலகின் பாவத்திற்காக மரித்தார் மேலும்* ***அவர்*** *நம்முடைய மரண தண்டனையை நீக்கினார்.*

*ரோமர் 6:23*

> *பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.*

*1 கொரிந்தியர் 15:55–57*

> *மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.*

*வெளி 1:18*

> *மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.*

***அவர்*** *உயிர்த்தெழும் வரையில் மரணத்தின் சாவிகளைக் குறித்து இயேசு ஒரு கருத்தையும் சொல்லவில்லை.*

### நரகம் என்றால் என்ன?

*இங்கு "நரகத்திற்கு" பயன்படுத்திய கிரேக்க வார்த்தை "கினா" (GEENA) (சமமாக கி-ஹென்னா (GE-HENNA)) (Strong's Concordance), இது எபிரேய வார்த்தையான "கி-ஹினோமை" (GE-HINNOM) குறிக்கிறது. "தீபூத் பள்ளத்தாக்கு" (the valley of Tophet) என்பது அதன் பொருள் (Vine's Expository Dictionary).*

*ஏசாயா 30:33*

> *தோப்பேத் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டது; ராஜாவுக்கு அது ஆயத்தப்படுத்தப்பட்டது; அதை ஆழமும் விசாலமுமாக்கினார்; வேகும்படி அக்கினியும் மிகுந்த விறகுமுண்டு; கர்த்தரின் சுவாசம் கந்தகத் தீயைப்போல அதைக் கொளுத்தும்.*

*எரேமியா 7:31 & 19:6 &14*

> *தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினியிலே தகனிக்கிறதற்காக, அவர்கள் இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கிலுள்ள தோப்பேத்தின் மேடைகளைக் கட்டினார்கள்; அதை நான் கட்டளையிடவுமில்லை, அது என் மனதில் தோன்றவுமில்லை.*

*ஆகையால், இதோ, நாட்கள்வரும், அப்பொழுது இந்த ஸ்தலம் தோப்பேத்தென்றும், இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கென்றும் இனிச் சொல்லப்படாமல், சங்காரப்பள்ளத்தாக்கென்று சொல்லப்படும்.*

*பின்பு எரேமியா, கர்த்தர் தன்னைத் தீர்க்கதரிசனஞ்சொல்ல அனுப்பின தோப்பேத்திலிருத்து வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரத்திலே நின்றுகொண்டு, எல்லா ஜனங்களையும் பார்த்து:*

*எருசலேமிற்கு வெளியே உள்ள இந்த பள்ளத்தாக்கில், நெருப்பு இடையறாது எரிந்து கொண்டிருந்தது. இஸ்ரவேலின் அரசர்களும் இந்த பள்ளத்தாக்கில் பலிபீடங்களை வளர்த்து தங்கள் குழந்தைகளை புறஜாதியாரின் கடவுளாகிய மோலேகிற்காக (Molech) எரித்தனர். இதனால் கடுமையான தண்டனையையும் ஞாயத்தீர்ப்பையும் குறித்த தீர்க்கதரிசனங்கள் எரேமியா தீர்க்கதரிசியால் 7:31–33 மற்றும் 19:6–14 இல் கூறப்பட்டுள்ளது. ஆகையால், ஹின்னோமின் (Hinnom) பள்ளத்தாக்கு நித்திய நியாயத்தீர்ப்பையும், அழிவையும், அல்லது நரகத்தையும் குறிக்க ஆரம்பித்தது*

*புதிய ஏற்பாட்டில் "கினாவை" (GEENA) பன்னிரண்டு முறை உபயோகிக்கப்பட்டுள்ளது (மத்தேயு 5:22, 29–30, 10:28, 18:9, 23:15, 33; மாற்கு 9:43, 45, 47; லூக்கா 12:5; மற்றும் யாக்கோபு 3:6). இயேசு இந்த பதத்தை பதினோறு முறை பயன்படுத்தியுள்ளார். அதில் பத்து முறை துன்மார்க்கரின் நித்திய தண்டனையைக் குறித்ததாகும்.*

*இயேசு அதை ஒரு அக்கினியின் இடமாகக் குறிப்பிட்டுள்ளார் (மத்தேயு 18:9; மாற்கு 9:43–48; மற்றும் லூக்கா 16:24), மேலும் அங்கு புழுக்கள் கூட இறக்காது (மாற்கு 9:44, 46, மற்றும் 48), மேலும் அது துன்புறுத்தலுக்கான இடம் (லூக்கா 16:24–25). ஒருவர் நரகத்தில் வைக்கப்பட்டு விட்டால் அங்கிருந்து தப்பிக்க முடியாது என்பதை இயேசு ஐஸ்வரியவான் மற்றும் லாசரு என்ற உவமையில் கற்பித்துள்ளார் (லூக்கா 16:26). அந்த உவமையிலும் புதிய ஏற்பாட்டில் உள்ள மற்றொறு ஒன்பது முறை "நரகத்திற்காக" பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை "ஹேடிஸ்" (HADES) (மத்தேயு 11:23, 16:18; லூக்கா 10:15, 16:23; அபோஸ்தலர் 2:27, 31; வெளி 1:18, 6:8, and 20:13–14) ஆகும். அதற்கு "இழந்தவர்களை விட்டு பிரிந்து போன ஆவிகள் இருக்கும் பிராந்தியம்" (Vine's Expository Dictionary) என்பது பொருள். இது நேரடியாக பழைய ஏற்பாட்டின் எபிரேய வார்த்தையாகிய "ஷ்'ஒவுளை" (SH@'OWL) (அல்லது ஷியோல் (Sheol)) ஒத்திருக்கிறது (Vine's Expository Dictionary). அது பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது:*

- *சங்கீதம் 9:17இல் "நரகம்"*
- *ஆதியாகமம் 37:35 இல் "கல்லறை", மற்றும்*
- *எண்ணாகமம் 16:30 மற்றும் 33 இல் "பாதாளம்".*

*இயேசு அந்த இடைவெளியில் சென்று ஹேடிஸில் (Hades) அடிமைத்தனத்தோடு இருக்கும் மக்களுக்கு நற்செய்தியைப் பிரசங்கித்தார்.*

*லூக்கா 16:26*

> *அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிக்கிறது என்றான்.*

*லூக்கா 16:22*

> *பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான்.*

*ஆபிரகாமின் மார்பானது நீதிமானாக இறந்தவர்களுக்கு ஆறுதல் தரும் இடத்தை குறிக்கும் அடையாளமாகும். லூக்கா 23:43 இல் இதை "பரதீஸ்" (paradise) என குறிப்பிட்டுள்ளது. இது பூமியின் மையத்தில், தேவபயமற்று இறந்தவர்கள் செல்லும் இடமான, நரகம் அமைந்துள்ள அதே பகுதியில் இருந்தது. (மத்தேயு 12:40 மற்றும் எபேசியர் 4:9) பழைய ஏற்பாட்டில் இந்த முழு பகுதியையும் "ஷியோல்" (Sheol) என குறிப்பிட்டுள்ளனர்.*

*இயேசு ஆதியாகமம் 2 மற்றும் 8 இல் காணப்படும் முதல் உலகத்தில் இருந்த மக்களுக்கு பிரசங்கித்தார்.*

*1 பேதுரு 3:18–20*

> *ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.*

*ஆதியாகமம் 9இல் இருந்து மல்கியா வரைக்கும் இருப்பதே இரண்டாம் உலகம்; பரிசுத்தவான்கள் என அழைக்கப்பட்டவர்கள் இயேசுவை சந்தித்தார்கள். அவர்களில் சிலர் உயிரோடு எழுப்பப்பட்டார்கள்.*

*மத்தேயு 27:52–53*

> *கல்லறைகளும் திறந்தது, நித்திரை அடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்தபின்பு, இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள்.*

*எபிரெயர் 9:14–15*

*நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்தக்கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.*

*சங்கீதம் 16:9–10*

*ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்.*

## சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில்

*சிலுவை மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில், இயேசு மூன்று பகல் மூன்று இரவு பூமியின் மையத்திற்குள் சென்றார்.*

*அபோஸ்தலர் 2:25–32, 25*

*அவரைக்குறித்துத் தாவீது: கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்; அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்; என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக்காணவொட்டீர்; ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்; உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர் என்று சொல்லுகிறான். சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக்குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம்பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது. அவர் தீர்க்கதரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம்பண்ணினதை அறிந்தபடியினால், அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக்குறித்து இப்படிச் சொன்னான். இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.*

*மேற்கூறிய வசனங்கள் இயேசு மெய்யாக நரகத்திற்குள் இறங்கினார் என்பதை தெளிவாக காண்பிக்கிறது. அபோஸ்தலர் 2:27 இல் "நரகத்திற்கு" பயன்படுத்திய வார்த்தை பழைய ஏற்பாட்டில்*

*கூறப்படும் "ஷ்'ஒவுள்" (SH@'OWL) (அல்லது ஷியோல் (Sheol)) (Vine's Expository Dictionary) என்கிற வார்த்தைக்கு நேராக பொருந்துகிறது.*

*ஷியோல் (Sheol) இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டது, ஒரு பகுதி துன்புறுத்தலுக்கான இடமாகவும் மற்றொன்று ஆசீர்வாதத்திற்கான இடமாகவும் இருந்தது. இரண்டிற்கும் இடையில் பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருந்தது (லூக்கா 16:26). இயேசு உயிர்த்தெழுந்தபோது இந்த பிராந்தியத்தில் இருந்த துன்மார்க்கர்களை விட்டுவிட்டு தெய்வபக்தியோடு இறந்தவர்களின் ஆவியை அவர் வழிநடத்தினார் (சங்கீதம் 68:18 க்கும் எபேசியர் 4:8–10 க்கும் ஒப்பீடு). துன்மார்க்கராக இறந்தவர்களை மட்டும் உள்ள இந்த துன்புருத்தலுக்கான இடத்தைத்தான் நாம் நரகம் என்று அழைக்கிறோம். இறுதி நியாயத்தீர்ப்பில், மரணத்திலும் நரகத்திலும் உள்ள மரித்தவர்கள் அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டு; அங்கே அவர்கள் என்றென்றைக்கும் வேதனைப்படுவார்கள் (வெளி 20:11–15).*

*இயேசு புதிய உடன்படிக்கையின் கீழ் விசுவாசிக்கிறவர்களை சந்தித்து சாட்சி கொடுத்தார்.*

*லூக்கா 23:40–43*

> *மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? <u>நாமோ</u> நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம் <u>நாம்</u> நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: <u>ஆண்டவரே</u>, நீர் உம்முடைய <u>ராஜ்யத்தில்</u> வரும்போது <u>அடியேனை</u> நினைத்தருளும் என்றான்.*

### ***பரலோகம் / வானம்***

*பரலோகத்தில் மூன்று பிரிவுகள் உள்ளன – கீழ், மத்தி மற்றும் மேல்.*

*எபிரெயர் 4:14*

> *வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்.*

*எபேசியர் 4:10*

> *இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்.*

*2 கொரிந்தியர் 12:2–4*

> *கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார். அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார். அந்த மனுஷன்*

> *பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன்.*

*"பரலோகத்திற்கான" எபிரேய வார்த்தை ஷமயிம் (shamayim) ஆகும். அது பன்மை வடிவத்தில் உள்ளது. அதனுடைய பொருள் "உயரம்", "மேடான இடம்" (ஆதியாகமம் 1:1 மற்றும் 2:1) ஆகும்.*

*சங்கீதம் 102:25*

> *நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது.*

*ஆதியிலே தேவன் <u>வானத்தையும்</u> பூமியையும் சிருஷ்டித்தார் என்பதை வேதாகமம் நமக்கு கற்பிக்கிறது; இந்த காலத்திற்க்குப் பிறகு அவர் இன்னொரு சொர்க்கத்தை உருவாக்கவில்லை. "வானத்தையும் பூமியையும்" என்கிற சொற்றொடர் இந்த முழு பிரபஞ்சத்தையும் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது (ஆதியாகமம் 1:1; எரேமியா 23:24; அபோஸ்தலர் 17:24). வேதாகமத்தில் இருக்கும் யூத பாரம்பரியத்தின்படி <u>மூன்று வானங்கள்</u> இருந்தன. இவையாவும் கர்த்தரே உண்டாக்கினவர் என்பதை உணர்த்துவதாய் இருந்தது.*

*எபிரேய மொழியில் பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன – மறோம் (*marom*) என்ற வார்த்தையும் அதற்கு சமமானதாக ஷமயிமும் (*shamayim*) பயன்படுத்தப்பட்டுள்ளது* (*சங்கீதம்* 68:18; 93:4; 102:19, *போன்றவற்றில்.*). *எபிரேய வார்த்தையான கல்கல் (*galgal*), அதாவது "சர்க்கரம்", இதை சங்கீதம்* 77:18*இல்* (RSV, "*சுழல்காற்று*") *"சொர்க்கம்" என காண்பிக்கப்பட்டுள்ளது. எபிரேய வார்த்தையான ஷஷாகை (*shahak*) "ஆகாய மண்டலம்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது* (*உபாகமம்* 33:26; *யோபு* 37:18; *சங்கீதம்* 18:11), *பன்மையான "மேகமண்டலங்கள்"* (*யோபு* 35:5; 36:28; *சங்கீதம்* 68:34, "*சொர்க்கம்*"), *ஆகாயவிரிவை குறிப்பிடுகிறது. முதலில் நம்முடைய உடனடி வளிமண்டலம், இரண்டாவது நீண்டுபோகும் விண்வெளி மற்றும் மூன்றாவது கடவுள் தாமே வசிக்கின்ற இடம் – இயேசு இதை "பிதாவின் வீடு" என்று அழைத்தார்."*

## முதலாம் வானம்

*ஆகாயவிரிவாகிய, பூமியின் வளிமண்டலம் – இது உடனடியான வானம், அங்கு நம்மிடம் "ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளும்" உள்ளன (ஆதியாகமம் 2:19; 7:3,23; சங்கீதம் 8:8, போன்றவை.), "ஆகாயத்துக் கழுகுகளைப்பார்க்கிலும்" (புலம்பல் 4:19), இதுதான் நமது பூமியைச் சுற்றியுள்ள வளிமண்டலம்.*

*ஆதியாகமம் 1:14 இல் பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, என்றார். முதல் சொர்க்கத்தில் நாம் நட்சத்திரங்களிடம் வரும் வரை, மேகங்கள் மற்றும் வளிமண்டலம், நமக்கு மேலே வானங்களும் உள்ளன.*

*சங்கீதம் 78: 23, 24*

> *அவர் உயரத்திலுள்ள மேகங்களுக்குக் கட்டளையிட்டு, வானத்தின் கதவுகளைத் திறந்து, மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார்.*

*பரலோகத்தின் வெளிப்பாடான கதவுகள் அல்லது வானத்தின் ஜன்னல்கள், ஆகாயவிரிவு சம்பந்தப்பட்ட நமது வளிமண்டலத்தை குறிக்கும். இந்த வானத்திலிருந்துதான் கர்த்தர் உணவு அல்லது மழையை வழங்குகிறார். ஆதியாகமம் 7:11–12 – "வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பதுநாள் இரவும் பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது." ஆதியாகமம் 8:2 – "ஆழத்தின் ஊற்றுக்கண்களும், வானத்தின் மதகுகளும் அடைபட்டன; வானத்து மழையும் நின்று போயிற்று" மல்கியா 3:10 – என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் – ஏராளமான அறுவடை பயிர்களைப் பற்றிய குறிப்பு.*

*உபாகமம் 11:17*

> *இல்லாவிடில் கர்த்தருடைய கோபம் உங்கள்மேல் மூண்டு, மழை பெய்யாமற்போகவும், தேசம் தன் பலனைக் கொடாமலிருக்கவும் <u>வானத்தை அடைத்துப்போடுவார்</u>; கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த நல்ல தேசத்திலிருந்து நீங்கள் சீக்கிரத்தில் அழிந்துபோவீர்கள்.*

*உபாகமம் 28:12*

> *ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் <u>தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத்</u> திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய். நீயோ கடன் வாங்காதிருப்பாய்.*

## இரண்டாம் வானம்

*விண்வெளி, வானத்தின் சர்வசேனை (உபாகமம் 17:3; எரேமியா 8:2; மத்தேயு 24:29). இரண்டாம் வானம் விண்மீன்களின் வானமாகும். அங்கு நம்முடை விண்வெளி முடிவு பெறுகிறது. இந்த வானில் தான் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களை ஒரு வட்ட பாதையில் சுற்றி வரும்படி பொருத்தப்பட்டுள்ளது. நட்சத்திரங்கள் வெளித்தோற்றத்தில் முடிவற்றவை மேலும் அவைகள் அனைத்துக்கும் இடையே உள்ள இடைவெளி பிரமிக்கச் செய்கிறது.*

*சங்கீதம் 19:1*

> *வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.*

*விஞ்ஞானிகள் அப்பால் என்ன இருக்கிறது என்பதை கண்டுபிடிப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளை எடுத்துக் கொண்டாலும் கூட, வேதவாக்கியம் ஆரம்பத்திலிருந்தே, விவேளியின்*

*அதிசயமான சத்தியத்தையும் உண்மைகளையும் எப்போதும் கூறுகிறது. விஞ்ஞானிகள் இன்னமும் இதன் அதிசயமான சிக்கலான வடிவமைப்பில் ஆர்வத்துடன் உள்ளனர்.*

*ஆகாயவிரிவு, அல்லது விரிவும், ராகியா (raqiya)`– "சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் நட்சத்திர மண்டலங்கள் பொருத்தப்பட்டுள்ளன" (ஆதியாகமம் 1:17). தேவன் அதை ஆகாயவிரிவில் பொருத்தியுள்ளார்.*

*ஏசாயா 40:22*

> *அவர் பூமி உருண்டையின்மேல் வீற்றிருக்கிறவர்; அதின் குடிகள் வெட்டுக்கிளிகளைப்போல இருக்கிறார்கள்; அவர் வானங்களை மெல்லிய திரையாகப் பரப்பி, அவைகளைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிறார்.*

*சங்கீதம் 19:4,6*

> *ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனை வரைக்கும் சுற்றியோடுகிறது; அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை.*

*எரேமியா 8:2*

> *அவர்கள் நேசித்ததும், சேவித்ததும், பின்பற்றினதும், நாடினதும், பணிந்துகொண்டதுமாயிருந்த சூரியனுக்கும், சந்திரனுக்கும், வானத்தின் சர்வசேனைக்கும் முன்பாக அவைகளைப் பரப்பிவைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் வாரி அடக்கம்பண்ணப்படாமல் பூமியின்மேல் எருவாகும்.*

### மூன்றாம் வானம்

*இங்கு தான் தேவனும் பரிசுத்த தேவதூதர்களும் வாசம் செய்வர். இதை "வானாதி வானங்கள்" என்று அழைப்பார்கள் (உபாகமம் 10:14; 1 இராஜாக்கள் 8:27; சங்கீதம் 115:16, 148:4). "***வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே*** (1 இராஜாக்கள் 8:27)***. பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்; ஆண்டவர் அவர்களை இகழுவார்.*** *(சங்கீதம் 2:4).*

*மூன்றாவது சொர்க்கம் வானத்துக்கும் நட்சத்திர மண்டலங்களுக்கும் அப்பால் உள்ளது. அதை எந்த மனிதனும் தொலைநோக்கியை கொண்டு எப்போதும் பார்த்ததில்லை. இந்த வானத்தில் தான் தேவன் தங்கி உள்ளார். இதை பவுல், தேவன் தங்கும் பகுதி என எழுதியுள்ளார்.*

*2 கொரிந்தியர் 12:4*

> *மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டானென்று அறிந்திருக்கிறேன்.*

*"பரதீசு" (பரதேசொஸ் (paradeisos)) (NT:3808) என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மூன்று முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது – லூக்கா 23:43; 2 கொரிந்தியர் 12:4; வெளி 2:7. இது செப்டுஜின்டில் (Septuagint), தோட்டத்தின் மொழிபெயர்ப்பு வார்த்தையாக அடிக்கடி நிகழ்ந்துள்ளது, – ஆதியாகமம் 2:8–10,15–16, 3:1–3,8,16,23–24, 13:10; எண்ணாகமம் 24:6; ஏசாயா 51:3; எசேக்கியேல் 28:13, 31:8–9;*

*யோவேல் 2:3. ஏசாயா 1:30; எரேமியா 29:5 லும்;*மேலும் *பெர்டீக் (pardeec) என்ற வார்த்தை (OT:6508) நெகேமியா 2:8; பிரசங்கி 2:5; உன்னதப்பாட்டு 2:13 இல் நிகழ்ந்துள்ளது.*

*எபிரெயர் 4:14 –* **வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால்** *"(இயேசு மனிதனாக மாறுவதற்கு முன் அவர் எங்கு இருந்தாரோ அங்கே ஏறினார்).*

*எபிரெயர் 7:26*

> *பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியர் நமக்கு ஏற்றவராயிருக்கிறார்",* தேவன் மற்றும் தேவதூதர்கள் வாசம் செய்யும் இடத்தைக் கட்டிலும் **அவர்** மிகவும் முக்கியம் என்பது இதன் அர்த்தம். *எபிரெயர் 8:1 – மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய்,*

*"சொர்க்கம்" என்ற வார்த்தையை தரிசனங்கள் அல்லது ஆன்மீக நிகழ்வுகளுக்கும் கூட பயன்படுத்தப்பட்டுள்ளது. "***அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்***!" என்று ஸ்தேவான் (Stephen) சொன்னார் (அபோஸ்தலர் 7:56). மாற்கு 1:10, இயேசு ஞானஸ்தானம் பெற்றபோது "***அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, வானம் திறக்கப்பட்டதையும், ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல் இறங்குகிறதையும் கண்டார்***". .*

*சொர்க்கம் என்ற பதத்தை உருவகமாக ஏசாயா 14:13,14; "வானத்தின் கதவு" – பிரசங்கி 78:23; வானம் "அடைபட்டு" – 1 இராஜாக்கள் 8:35; "திறக்கப்பட" – எசேக்கியேல் 1:1; the "பரலோகராஜ்யம்" – மத்தேயு 25:1, யாக்கோபு 2:5; "நித்திய ராஜ்யம்" – 2 பேதுரு 1:11; "நித்திய சுதந்திரம்" – 1 பேதுரு 1:4, எபிரெயர் 9:15; "மேன்மையான பரமதேசம்" – எபிரெயர் 11:14, 16 இல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*பரலோகம் நீதிமானுடைய வாசஸ்தலம். அவர்கள் "நித்தியஜீவன்," "நித்திய கனமகிமை" உடையவர்கள் (2 கொரிந்தியர் 4:17), அங்கே அவர்கள் எல்லா துன்பங்களில் இருந்ததும், திக்குகளில் இருந்ததும் விடுதலை அடைகின்றனர் (2 கொரிந்தியர் 5:1,2). கிறிஸ்து இதை "பிதாவின் வீடு" எனவும் (யோவான் 14:2) மேலும் "பரதீசு" (லூக்கா 23:43) எனவும் அழைக்கிறார். இது பூமிக்கு வரும் முன்னர் "பரம எருசலேம்" இருக்குமிடம் (கலாத்தியர் 4:26; எபிரெயர் 12:22; வெளி 3:12).*

*பரலோகமே எல்லா விசுவாசிகளின் பரம்பரைச்சொத்து. அங்கு தான் "மகிழ்ச்சியின் முழுமை" நித்திய ஆசீர்வாதம் இருக்கும். இந்த இடம் தான் நம்முடைய பரம்பரைச்சொத்து. அவர் எங்கு உள்ளாரோ அங்கு நாமும் அவருடன் இருப்போம் என்பதற்காக நம்முடைய பரம்பரைச்சொத்து நமக்காக 'ஆயத்தம்பண்ண' இயேசு முன்கூட்டியே சென்றார் (யோவான் 14:2).*

## வெளிப்படையான கேள்விகள்

### *பாரதீசு இப்போது எங்கு உள்ளது?*

> *அது இன்னும் பூமியினுள் உள்ளதா அல்லது பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதா என்பது வேத வசனங்களில் தெளிவாக குறிப்பிடவில்லை.*

**இயேசு பிரசங்கித்த போது மக்கள் மனம் திரும்பினார்களா?**

*அது நமக்கு தெளிவாக தெரியாது; அதற்கு குறிப்பாக தொடர்பு படுத்தக்கூடிய வேத வசனம் எதுவும் இல்லை. எனினும் இயேசு அவர்களுக்கு பிரசங்கித்தார் என்பதை வேத வசனம் குறிப்பிடுகிறது.*

**விசிவாசத்தோடு மரித்தவர்களுக்கு என்ன நேரிடும்?**

*இயேசு பிரசங்கித்த பின்னர், அவர்கள் தங்கள் சிறைப்பட்ட நிலையில் இருந்து விடுதலை அடைந்தனர். அவர்கள் சாத்தானின் பிடியில் இல்லை என்பதே இதன் பொருள்.*

**இன்று மரணம் எனக்கு எதைக் குறிக்கிறது?**

*எபிரெயர் 2:15, நம்மை மரண பயத்தில் இருந்து விடுவிக்க இயேசு இதை செய்தார். நாம் இனி சங்கிலிகளால் இந்த பயத்தோடு பிணைத்துக்கொள்ள வேண்டியதில்லை.*

**இரண்டாம் வருகையின் போது என்ன நிகழும்?**

*கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் பூமியிலிருந்து தங்கள் சரிரத்தின் உயிர்த்தெழுதலை கொள்வார்கள். அவர்கள் தங்கள் சரிரங்களில் புதிய ஜீவனுக்கு/வாழ்கைக்கு எழுப்பப்படுவார்கள் – மகிமையான சீர்குலையாத உடல்களோடு. அப்பொழுது, கர்த்தராகிய இயேசுவை விசுவாசிப்பவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். மேலும் ஞாயத்தீர்ப்பிற்காக கிறிஸ்து மூன்றாம் வருகை வரும் வரையில் அவருடன் 1000 ஆண்டுகள் ஆளுகையும் ஆட்சியும் செய்வோம்.*

**உங்களுக்கு என்ன நேரிடும்?**

*1 தெசலோனிக்கேயர் 4:13-18*

> *அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது <u>கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு</u>,* **இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.** *ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.*

*14ஆம் வசனம் உண்மை என்று அறிந்திருப்பதில் இருந்து உங்களுக்கு உத்தரவாதம் வருகிறது!*

***ஜீவனுள்ள தேவனான இயேசு உங்களுக்காக வந்து இறந்தார் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?***

***இயேசு உங்கள் வாழ்க்கையின் ஆண்டவரா?***

*ஒரு அற்புதமான உயிர்த்தெழுதல் ஞாயிற்றுக்கிழமையை நீங்கள் அனுசரிப்பதற்கு நாங்கள் ஜெபிக்கிறோம், ஆசீர்வதிக்கிறோம்! உயிர்த்தெழுந்த தேவன் நீங்கள் வாழும் ஒவ்வொரு நாளும் உங்கள் மூலம் வாழ்வாராக.*